REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன் 92

2024 செப்டெம்பர் 4 புதன்கிழமை

வருட. 92 இல. 211 | Wednesday 04, September, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## 38 நாடுகளுக்கு இலவச விசாவுடன் இலங்கைக்குள் பிரவேசிக்க வாய்ப்பு

**திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை தீர்மானம்**



இலவச விசா வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்த அமைச்சரவை தீர் மானித்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரண துங்க தெரிவித்துள்ளார்.

தற்போது 38 நாடுகளுக்கு இலவச விசாவுடன் இலங்கைக்குள் 06

**நிபுணர் குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதியிடம் கையளிப்பு**

# 2025 ஜனவரி முதல் அரச ஊழியர் சம்பள அதிகரிப்பு

**நிதி அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்த ஏற்பாடு**

### அனைவரினது வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு என்கிறார் ஜனாதிபதி

2025 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கிய நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை, குழுவின் தலைவர் உதய ஆர். செனவிரத்ன மற்றும் ஏனைய குழு உறுப்பினர்களினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று (03) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய 06



## அரச சேவையில் தரங்களுக்கு ஏற்ப சம்பள அதிகரிப்பு

**விபரங்கள் வெளியாகின**

- அலுவலக உதவியாளர்களுக்கு தரநிலை அடிப்படையில் 5,450 – 13,980 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- சாரதிகளுக்கு 6,960 – 16,340 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்ப
- சமூர்த்தி/அபிவிருத்தி/விவசாய ஆய்வு அதிகாரிகளுக்கு 8,340 – 15,685 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- முகாமைத்துவ உதவியாளர்களுக்கு 12,710 – 17,550 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 12,710 – 25,150 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- பொது சுகாதார பரிசோதகர்/குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கு 12,558 – 25,275ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- கதிரியக்கவியல்/ மருந்தாளர்களுக்கு 13,280 – 25,720 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- தாதியர்களுக்கு 13,725 – 26,165 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- அதிபர்களுக்கு 23,245 – 39,595 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- ஆசியர்களுக்கு 17,480 – 38,020 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- பொலிஸ் அதிகாரிகளுக்கு 10,740 – 23,685 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- கிராம சேவகர்களுக்கு 11,340 – 23,575 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு 28,885 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- பிரதிப் பணிப்பாளர்/பிரதி ஆணையாளர்களுக்கு 43,865 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- பிரதேச செயலாளர்/பணிப்பாளர்/ஆணையாளர்/சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிகளுக்கு 57,545 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- வைத்திய அதிகாரிகளுக்கு 35,560 – 53,075 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- வருடாந்த சம்பள அதிகரிப்பு இரட்டிப்பாக்கப்படும்
- அரச கூட்டுத்தாபனம்/சபைகள்/நியதிச் சட்ட நிறுவனங்கள்/பல்கலைக்கழகங்கள்/முப்படையினருக்கு 2025 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து சம்பள அதிகரிப்பு வழங்கப்படும். 06

## தமிழர் தரப்பு பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு



**யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

தமிழர் தரப்பு பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று (03) செவ்வாய்க்கிழமை யாழ். நகரில் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய பொதுக் கூட்டமைப்பின் அலுவலகத்திலேயே இந்த தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நடைபெற்றது. தென்னிலங்கை வேட்பாளர்களை நிராகரித்து தமிழ்ப் 06



**03** ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இதுவரை 2,000 முறைப்பாடுகள்

**எதிர்வரும் ஒக்டோபர் முதல்**

## நவீனமயமாக்கப்பட்ட கடவுச்சீட்டுகள் குறைந்த கட்டணத்தில் கிடைக்கும்



நவீனமயமாக்கப்பட்ட கடவுச் சீட்டுகள் ஒக்டோபர் மாதம் முதல் குறைந்த கட்டணத்தில் கிடைக்குமென அமைச் சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று (03) தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று(03) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத் துரைக்கும் போது 06

## இராணுவத்தினருக்கு எதிரான சகல குற்றச்சாட்டையும் நிராகரிக்கும் SJB

**எரான் விக்கிரமரத்ன MP சபையில் உரை**



இராணுவத்தினருக்கு எதிராக சர்வதேச அரங்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்தையும் நிராகரிக்கிறோம். இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுக்களை முடிவுக்கு கொண்டுவர உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன நேற்று (03) தனது பாராளுமன்ற உரையில் தெரிவித்தார். 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டின் தேசிய 06

**அநுரகுமார தலைமையிலான**

## தேசிய மக்கள் சக்தி கட்சி விதிமுறைகளை மீறியது

**ஐரோப்பிய ஒன்றியத்தில் முறைப்பாடு**



ஜனாதிபதி வேட்பாளர் அநுகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசியல் கட்சி, தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பாக, இலங்கை சீர்திருத்தங்கள் (Sri Lanka Reforms Organization) அமைப்பின் சட்டப் 06

**அனுமதிக்கப்பட்ட தொகையை விட**

## அதிகமாக செலவு செய்தால் குடியுரிமையை இழக்க நேரிடும்



**வேட்பாளர்களுக்கு ஆணைக்குழு எச்சரிக்கை!**

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் பிரசாரத்தின்போது அனுமதிக்கப்பட்ட தொகையை விட அதிக தொகையை செலவிட்டமை கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், அவர்கள் தங்கள் பதவிகளை இழக்க 06

## AI மற்றும் ரொபோடிக் துறையில் 7,500 ஆசிரியர்களுக்கு பயிற்சி



ரோபோட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) அறிவியல் துறையில் 7,500 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று (03) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன, 06

**போலி வார்த்தை ஜாலங்களுக்கு மயங்கி**

## அரச ஊழியர்கள் வாக்குரிமையை தவறாக பயன்படுத்தி விடக்கூடாது



நாட்டை மீட்டெடுப்பதற்குரிய பொருளாதார யுத்தத்தில் அரசாங்க ஊழியர்களின் பங்களிப்பு அளப்பரியது. எனவே, எதிரணிகளின் போலியான வார்த்தைகளுக்கு மயங்கி வாக்குரிமை என்ற ஜனநாயக ஆயுதத்தை அரசாங்க ஊழியர்கள் தவறாக பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பயன்படுத்தினால் 06

**த.தே.கூ. எம்.பி எம்.ஏ. சுமந்திரன்**

## தமிழ் மக்களை ஏமாற்றுவதாக கஜேந்திரன் MP குற்றச்சாட்டு



அநுரகுமார திஸாநாயக்கவின் ஆட்சியில் சமஷ்டி இருக்கிறதென தமிழ் மக்களை ஏமாற்றிய சுமந்திரன், சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கிவிட்டு மக்களுக்கு பொய் விளக்கம் கூறுவதாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் 06

## தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 2,000 ரூபா சம்பளம்

**மூலோபாய திட்டம் என்னிடமிருக்கிறது**

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச சம்பளத்தை 2,000 ரூபாவாக அதிகரிக்கக்கூடிய மூலோபாய வேலைத்திட்டம் தன்னிடம் இருப்பதாக சர்வஜன வேட்பாளர், தொழில் முனைவோர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார். தாயக மக்கள் கட்சியின் கேகாலை மாவட்ட தொகுதி 06





# அரசியல் கட்சிகள் நாட்டுக்காக கைகோர்த்து செயற்பட முடியுமென்பதை காண்பித்துள்ளோம்

## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 73ஆவது தேசிய மாநாட்டில் ஜனாதிபதி



நாட்டுக்காக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதை தற்போதைய அரசாங்கம் நிரூபித்துள்ளதாகவும், அதன்படி புதிய இலங்கையை உருவாக்கும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வாக்குகளை திருடும் நிலைக்கு ஐக்கிய மக்கள் சக்தி தள்ளப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஜே.வி.பி கடந்த காலத்தை மறந்துவிட்டது என்றும், கடந்த காலத்தை மறந்துவிட்டு எதிர்காலத்திற்கு செல்ல முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்ல மொனார்ஷ் இம்பீரியல் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (02) நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 73 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் வீழ்ந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வழங்கிய ஆதரவை ஒருபோதும் மறக்க முடியாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:

"முதன்முறையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் மாநாட்டில் உரையாற்றக் கிடைத்திருப்பது கௌரவமாகும். ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார். பின்னர் அதிலிருந்து பிரிந்து சென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார். அப்போது எனக்கு 10 வயது. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவை பல தடவை சந்தித்திருக்கிறேன்.

நாங்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் எப்போதும் நாட்டைப் பற்றியே சிந்தித்தோம். 2022இல் நாட்டைப் பற்றியே சிந்தித்து செயற்பட்டோம். பாரம்பரிய அரசியல் தலைவர்கள் இருக்கவில்லை. ஒருபுறம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். அதன் பிறகு என்ன நடந்தது? எதிர்க்கட்சித் தலைவரைப் போன்று அனுர திஸாநாயக்கவும் பிரதமர் பதவியை ஏற்கவில்லை. இருவரும் ஓடிவிட்டார்கள்.

ஆனால் நாங்கள் ஒன்றுபட்டு ஆட்சி அமைத்தோம். 2022 ஜுலை 09 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். அதன்பிறகு, நாட்டுக்கு தலைவர் இருக்கவில்லை. நாட்டில் அராஜக நிலை உக்கிரமடைந்து காணப்பட்டது. அன்று நாட்டுக்காக ஒன்றுபட்டதை நினைத்து பெருமைப்படுகிறேன்.

ஒன்றாக சேர்ந்து நாட்டையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றினோம். நாட்டின் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டதால் தான் இன்று ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடிய நிலை உருவாகியுள்ளது. நாங்கள் நாட்டை கட்டியெழுப்புவோம், பொருளாதாரத்தை உயர்த்துவோம் என்று யாரும் நினைக்கவில்லை. ஓரிரு மாதங்களில் போதுமான வளர்ச்சியை ஏற்படுத்த எங்களால் முடிந்தது. அதற்காக ஒன்றுபட்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக்கிறேன். நீங்கள் அனைவரும் கட்சியையும் பாதுகாத்துக்கொண்டு, ஒற்றுமையாக எனக்கு ஆதரவளித்தீர்கள்.

விவசாய நவீனமயமாக்கல் திட்டம் ஏற்கனவே கிராமங்களை சென்றடைந்துள்ளது. அதன் பரீட்சார்த்த பணிகளை அமைச்சர் மஹிந்த அமரவீர ஏற்கனவே ஆரம்பித்துள்ளார். மேலும், சுற்றுலாத்துறை மேம்பாட்டையும் கிராமங்கள் வரையில் கொண்டுச் செல்வோம். சுற்றுலா பயணிகளின் வருகையும் இரட்டிப்பாகும். இதனால் கிராமங்களுக்கும் பணம் வந்து சேரும். சூரிய சக்தி மின் உற்பத்தியையும் கிராமங்களுக்கு கொண்டுச் செல்வோம். இவற்றோடு புதிய முதலீட்டு வலயங்களையும் உருவாக்கி நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்வோம்.

20 இலட்சம் பேருக்கு இலவச காணி உரிமை வழங்குவோம்.கொழும்பில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் அடுக்குமாடி குடியிருப்புகளின் வீட்டு உரிமை வழங்கப்படுகிறது. லயன் வீடுகள் அமைந்துள்ள பகுதிகள் கிராமங்களாக மாற்றப்படவுள்ளன. இந்த செயற்பாடுகள் இந்த நாட்டில் முதன்முறையாக செய்யப்படுகிறது. அதனை புரட்சிகள் என்றே கூற வேண்டும். அஸ்வெசும திட்டமும் புரட்சிகரமானது.

ஐக்கிய மக்கள் சக்தி தமிழ்க் கட்சிகளின் வாக்குகளை திருடச் சென்று, அந்த தருணத்திலேயே மாட்டிக்கொண்டுள்ளது. அவர்களால் யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. அரசியல் கட்சிகளுக்கு இவ்வாறான செயற்பாடுகள் பொருத்தமானதல்ல.

மேலும் ஜே.வி.பி கடந்த காலத்தை மறந்த கட்சியாகும். கடந்த காலத்தை அறியாமல் எதிர்காலத்திற்கு செல்ல முடியாது. அவர்கள் செய்ததை மறந்துவிட்டார்கள். அவர்களின் நாட்காட்டியில் 1971 ஆம் ஆண்டு இல்லை. முடிந்தால், அவர்களுக்கு 1971 என்று ஒரு வருடம் இருந்தது என்பதை காட்டுங்கள்.

நாங்கள் ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குதல். நவீன விவசாயத்தை கிராமத்திற்கு கொண்டு வருதல்.மேலும் 50000 இளைஞர்களுக்கு தொழில் பயிற்சிக்காக நிவாரணம் வழங்குதல், வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான தொழில் பயிற்சி வழங்குதல், வெளிநாடுகளிலும் சுகாதாரத் துறையில் ஏராளமான தொழில் வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகளை கண்டறிந்து அவற்றை நோக்கி செல்ல இளைஞர்களை வழிநடத்துதல் உள்ளிட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

இந்தப் பயணத்தின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நன்றி தெரிவிக்கிறேன். அப்போது நாங்கள் அரசியல் ரீதியாக எதிர் தரப்பினராக இருந்தாலும், எங்களுக்குள் ஒற்றுமை இருந்தது. சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் சகலரையும் நாம் அறிவோம்.

சுதந்திர கட்சி வழங்கிய ஆதரவை நான் என்றும் மறக்க மாட்டேன். முன்னோக்கிச் சென்று நல்ல பிரதிபலன்களை நாட்டுக்குக் காட்டுவோம். நாங்கள் ஒருபோதும் ஓடவில்லை. பிரச்சினைகளுக்கு துணிச்சலாக முகம்கொடுத்தோம். எதிர்காலத்திலும் பிரச்சினைகளுக்கு ஈடுகொடுத்து நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம். வெற்றி பெறுவோம்."



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா:

"ரணில் விக்கிரமசிங்கவை நான் 1989 இல் இருந்து அறிவேன். எங்களுக்கிடையில் அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தன. நானும் அவரை மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். ஆனால் நாடு வீழ்ந்தபோது, நான் அவரை பாராளுமன்றத்தில் மின்தூக்கிக்கு அருகில் சந்தித்தேன். அனைத்துக் கட்சி மாநாடு நடத்தி, நாடு வீழ்ந்தபோது தலைமைப் பொறுப்பை ஏற்க பொருத்தமான ஒருவரைத் தேடலாம் என்று கூறினார். அந்த அனைத்துக் கட்சி மாநாட்டிற்கு அவர் வருகை தந்தார். நீங்கள் பதவிக்குப் பின்னால் செல்லும் நபரல்ல. மேலும் அவர் குடும்பத்திற்காக செயற்படும் அரசியல்வாதியுமல்ல.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது.நாட்டின் நலனுக்காக நாம் முடிவுகளை எடுக்க வேண்டும். ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்த வேண்டும் என மத்திய குழுவில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற நடைமுறைச்சாத்தியமான தீர்மானத்தை நாம் எடுத்தோம். நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என சிலர் கருத்து தெரிவித்தனர். அனுரகுமார திஸாநாயக்கவிடம் நாட்டுக்கான எந்த வேலைத்திட்டமும் இல்லை. அவர்களது கட்சியினர் தமக்கு எதிரான தரப்பினரின் வீடுகளை எரிக்க காத்திருக்கின்றனர். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. சஜித் கிளிப்பிள்ளை போல் பேசுகிறார். நாடுபூராவும் சென்று பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றி வருகின்றனர்" என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான அமைச்சர் மஹிந்த அமரவீர:

### புதிய இலங்கையை உருவாக்குவதே எமது போராட்டம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ச்சியாக சவால்களை எதிர்கொண்ட கட்சியாகும். நாட்டுக்காக எப்போதும் முன்னிற்கும் கட்சியாகும். கடந்த இரண்டு வருடங்களில் நாம் நாட்டு நலனுக்காக செயற்பட்டோம். சவாலான நேரத்தில் எதிர்க்கட்சிகள் அந்தப் பொறுப்பை ஏற்கவில்லை. அப்போது தனியொரு எம்.பியாக ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியை ஏற்க அழைப்பு விடுக்கப்பட்டது. அவருக்கு ஆதரவளிக்க பல கட்சிகள் முன்வந்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று




சரியான முடிவை எடுக்காமல் இருந்திருந்தால் இன்று நாட்டு மக்கள் மருந்தின்றி செத்து மடிந்திருப்பார்கள். பால் மா இல்லாமல் குழந்தைகள் இறந்திருக்கும்.அன்றைக்கு எண்ணெய் கியூவில் இருந்தவர்களிடம் அதிக விலைக்கு எண்ணெய் விற்றவர்கள் இன்று திசைகாட்டிக்கு ஆதரவு செலுத்துகிறார்கள். திசைகாட்டி ஆட்சிக்கு வந்தால் மீண்டும் போராட்டம் வெடிக்கும். எண்ணெய் வரிசைகள் மீண்டும் வரும். அப்போதுதான் இவர்களால் அதிக விலைக்கு எண்ணெய் விற்க முடியும். எனவே இனி எந்த பரீட்சார்த்த முயற்சியும் செய்ய முடியாது. விடுதலைப் புலிகள் அமைப்பும் ஜே.வி.பியும் தான் இந்த நாட்டை அழித்தன. அவர்கள் செய்த அழிவினால் தான் கடன் வாங்க வேண்டியதாயிற்று".

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண:

"நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் கட்சி பேதங்களை மறந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. அந்த ஆதரவை வழங்குவதே தற்போதைய நிலையில் சரியானது. எமது ஆதரவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் கூற வேண்டும்."

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க;

"இந்நாட்டு மக்களுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆற்றிய பங்களிப்பை புதிதாக சொல்லத் தேவையில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களான எஸ்.ஆர்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க, திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இந்த நாட்டுக்காக ஆற்றிய சிறந்த சேவையை இந்த தருணத்தில் நான் மரியாதையுடன் நினைவு கூருகின்றேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது 73 வருட வரலாற்றில் இந்நாட்டின் எதிர்காலத்திற்காக ஆற்றிய பங்கையிட்டு நாம் பெருமையடைகிறோம்".

*ஊடகப் பிரிவு*

# கம் உதாவ திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



"நான் வீடமைப்பு அமைச்சராக இருந்த போது, வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட பல மாகாணங்களில் கம் உதாவ திட்டத்தை ஏற்படுத்தி, அதன் ஊடாக பெருந்தொகையான வீடுகளை நிர்மாணித்து கொடுத்தோம். கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்ததும் இந்த வீடமைப்புத் திட்ட செயற்பாடுகளை நிறுத்தினார். நான் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி செயல்படுத்துவதோடு, வீடில்லாதவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து வீட்டுப் பிரச்சினை உள்ளவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்" என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி கிராமத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கம் உதாவ வேலைத்திட்டத்தின் மூலமே பரந்தளவில் வீடமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதி அவர்கள் 10 இலட்சம் வீடுகளையும் 15 இலட்சம் வீட்டு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்த போது, அரசாங்கத்தின் வருமானம் உயர்ந்து காணப்பட்டது. அந்தக் காலத்தில் தேசிய உற்பத்தி 21% காணப்பட்டிருந்தது. தற்பொழுது அது பத்து வீதமாகக் குறைந்து இருக்கின்றது. எனவே இந்த வேலைத்திட்டங்களை அரசாங்கத்தின் நிதியினூடாக மாத்திரம் முன்னெடுக்க முடியாது. எனவே புதிய வழிமுறைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும்" என சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். "இது இலகுவான காரியம் அல்ல. ஆனாலும் அந்தச் சவாலை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இந்த நாட்டில் வீடமைப்பு வேலைத்திட்டத்தை தான் அதிகாரத்திற்கு வந்த உடனே ஆரம்பிப்பேன். உலகில் உள்ள பல்வேறு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொண்டு மீண்டும் ஒருமுறை கம் உதாவ யுகத்தை உருவாக்குவேன்" என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.



# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் பொறுப்பு எமக்கு உண்டு

## ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொறுப்பு எனக்கும், எனது கட்சிக்கும் உண்டு. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொறுப்பற்ற வகையில் நாங்கள் செயற்படவில்லை. 30 வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததை போன்று ஊழல் மோசடிகளையும் முடிவுக்கு கொண்டு வருவேன். மக்களால் தாங்கிக் கொள்ள கூடிய நியாயமான வரிக் கொள்கை அமுல்படுத்தப்படும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு கொழும்பு – ரத்னதீப நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:

"ஐந்து சக்திகளை ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி கொள்கை ரீதியில் மாறுப்பட்ட தரப்பினருடன் கூட்டணியமைத்ததால் எமது அணியினரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கிருந்தது. இதனால்தான் பஷில் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்தார்.



நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்க நிபந்தனையில்லாமல் போரிட்டவர்களையும், பௌத்த சாசனத்தையும் பாதுகாக்க வேண்டியது எமது பிரதான கொள்கையாகும். பொருளாதார நெருக்கடிக்கு எம்மால் நிச்சயம் தீர்வு காண முடியும்.

சூழ்ச்சிகளினால் எம்மையும், எமது அணியையும் வீழ்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது நாட்டுக்காக சிறந்த தீர்மானங்களை எடுத்தோம். நாட்டை முன்னேற்றும் ஆளுமை மற்றும் திறமை எம்மிடமுள்ளது. எதிர்வரும் 10 ஆண்டுகளில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரித்துக் கொள்ள வேண்டும். அதற்கான திட்டங்கள் எம்மிடம் உள்ளன.



நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்தினால் வரிசை கலாசாரத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வரலாம். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையில் அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். இருப்பினும் துரதிர்ஷ்டவசமாக அவை செயற்படுத்தப் படவில்லை.

எமது அரசாங்கத்தில் முதல் ஆறு மாத காலத்துக்குள் சகல அரச கட்டமைப்புக்களும் டிஜிட்டல் மயப்படுத்தப்படும். சர்வதேச அமைப்புக்களின் கொள்கைக்கு அமையவே வரிக் கொள்கை அமுல்படுத்தப்படுகிறது. இந்நிலைமை மாற்றம் பெற வேண்டும். மக்களால் தாங்கிக் கொள்ள கூடிய நியாயமான வரிக் கொள்கை அமுல்படுத்தப்படும். அரச நிர்வாகம் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டால் ஊழல் மற்றும் மோசடிகளை இல்லாதொழிக்கலாம். யுத்த காலத்தில் அரசியல்வாதிகள் யுத்தம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசியல் செய்தார்கள். மஹிந்த ராஜபக்ஷ 3 வருடத்துக்குள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்தார். தேர்தல் மேடைகளில் ஊழல் ஒழிப்பு என்று தொடர்ச்சியாக எழுப்பப்படும் கோசத்தை ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளில் முடிவுக்குக் கொண்டு வருவோம். மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை நான் கடைப்பிடிப்பேன்."

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
லுஹர் - 12.12
அஸர் - 03.16
மஃரிப் - 06.18
இஷா - 07.28

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 18
ராகுகாலம் : மாலை : 3.05 - 4.35வரை
சுபநேரம் : காலை : 10.35 - 12.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் பத்து வருடங்களுக்கு நெருக்கடி

## முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எம்பி

**பெல்மதுளையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**



உலகில் வங்குரோத்து நிலைக்குச் சென்ற எந்தவொரு ஒரு நாடும் இலங்கைப்போன்று ஒன்றரை வருடங்களில் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை எனவும் அது ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே முடிந்துள்ளதுள்ளதாகவும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது அதிசயம், அற்புதம் என சர்வதேசம் பாராட்டும் நிலையில் நாட்டு மக்கள் முக்கியமான இந்த தருணத்தில் கிடைத்துள்ள வாய்ப்பை இழந்து விடக்கூடாது. அவ்வாறு இழந்தால் மேலும் பத்து வருடங்களுக்கு நாட்டில் நெருக்கடி நிலையே தொடரும் எனவும் அவர் தெரிவித்தார். சஜித் பிரேமதாசவால் இந்த நாட்டை ஒருபோதும் நிர்வகிக்க முடியாது என்பதை உணர்ந்தே நான் இம்முறை தேர்தலில் சரியான தீர்மானத்தை எடுத்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்தேன். நாட்டு மக்கள் அனைவரும் தமது எதிர்காலம் தொடர்பாக சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று பெல் மதுளை நகரில் இடம்பெற்றது. அந்த கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே முன்னாள்அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

"நிகழ்நிலைக் காப்பு (திருத்தம்)" சட்டமூலம்

# உயர் நீதிமன்றில் 02 மனுக்கள் தாக்கல்

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "நிகழ்நிலைக் காப்பு (திருத்தம்)" எனும் சட்டமூலம் தொடர்பாக, உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் இரண்டின் பிரதிகள் தனக்குக் கிடைத்திருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (03) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

# சாஞ்சி மகாபோதி விழாவில் பங்கேற்க இந்திய பிரதமர் மோடிக்கு அழைப்பு



இந்தியாவின் சாஞ்சி சைத்தியகிரி விகாராதிபதி, இலங்கை மகாபோதி சங்கத்தின் தலைவர் மற்றும் ஜப்பானின் பிரதம சங்கநாயக்கருமான சங்கைக்குரிய பானகல உபதிஸ்ஸ தேரர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு புதுடில்லியிலுள்ள இந்தியப் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இந்தியப் பிரதமரின் நீண்டகால நெருங்கிய நண்பரான இவர் சமீபத்தில், இந்திய மாநிலமான குஜராத் அஹமதாபாத்தில் நடைபெற்ற எட்டாவது சர்வதேச தர்ம தம்ம மாநாட்டில் பங்கேற்ற பின்னர், நேபாளத்திலுள்ள லும்பினி பல்கலைக்கழகம் மற்றும் லும்பினி புனித பூமிக்கும் விஜயம் செய்தார். இதன் பின்னர் புதுடில்லிக்கு சென்று இந்தியப் பிரதமரை சந்தித்தார்.

# கருணாரத்ன பரணவிதான பாராளுமன்ற உறுப்பினராக நேற்று பதவிப்பிரமாணம்



கருணாரத்ன பரணவிதான ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் நேற்று (03) பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய தலதா அதுகோரல பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே கருணாரத்ன பரணவிதானகே நியமிக்கப்பட்டுள்ளார்.

வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்திலிருந்து

# மிகக் குறுகிய காலத்தில் மீண்ட உலகின் ஒரே நாடு இலங்கை



வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்திலிருந்து மிகக் குறுகிய காலத்தில் மீண்ட உலகின் ஒரே நாடு இலங்கை எனவும் அந்த கௌரவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே வழங்கப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

சிலாபத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுகூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது இதனை தெரிவித்த அவர், மேலும்தெரிவிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்ய மக்கள் தற்போது அணித்திரண்டு நிற்கின்றோம். பெற்றோல், டீசல், எரிவாயு, மின்சாரம் மற்றும் போக்குவரத்து வசதிகள் இன்றி நாடு தவித்திருந்த போது நாட்டை நெருக்கடியிலிருந்து மீளக் கொண்டுவந்ததன் காரணமாக ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க சவாலுக்கு அஞ்சாமல்,

06

ஜனாதிபதி தேர்தல் பிரசாரம்

# வாகனங்களில் ஒட்டப்படும் ஸ்டிக்கர்கள் அகற்றப்படும்



ஜனாதிபதி தேர்தல் தொடர்பான ஸ்டிக்கர்கள் மற்றும் சுவரொட்டிகளை வாகனங்களில் ஒட்டுவது சட்டவிரோதமானதென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களிலுள்ள சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்களை அகற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இதுவரை 2,000 முறைப்பாடுகள்



ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி வரை) 2,098 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 754 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,266 முறைப்பாடுகளும் கிடைக்கப்

எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு

# நாட்டுக்கு ஜனாதிபதி ரணில் மிகவும் அவசியமானவர்

## முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க எம்.பி

**பெல்மதுளையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்த நாட்டுக்கு எதிர்வரும் 05 வருடங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் அவசியமானவரென்பதை நாட்டு மக்கள் சிந்தித்து தீர்மானம் எடுப்பது முக்கியமென முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். பி திசாநாயக்க தெரிவித்தார்.

சஜித் பிரேமதாசவோ, அநுரகுமார திசாநாயக்கவோ இந்த நாட்டை ஒருபோதும் முன்னேற்றப்போவதில்லை. மக்களுக்கும் அவர்களால் எவ்வுத சிறந்த எதிர்காலமும் கிடைக்கப்

06

# தபால் மூல வாக்குப்பதிவு இன்று (04) முதல் ஆரம்பம்

அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் இன்று(04) தமது தபால் மூலம் வாக்குகளை பதிவுசெய்ய முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இன்றைய தினத்துக்கு மேலதிகமாக 06ஆம் திகதியும் தபால்மூலம் வாக்குகளை அடையாளப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

முப்படை முகாம்கள் மற்றும் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களிலுமுள்ள ஊழியர்களுக்கான தபால்மூல வாக்குப்பதிவு நாளை செப்டெம்பர் 05 ஆம் திகதி மற்றும் நாளை மறுதினம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இத் திகதிகளில் தபால்மூலம் வாக்குகளை அடையாளப்படுத்த முடியாத வாக்காளர்கள், எதிர்வரும், 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில், தாம் பணிபுரியும் மாவட்டத்திலுள்ள மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் தமது தபால்மூல வாக்குகளை அடையாளப்படுத்த வாய்ப்பு வழங்கப்படும். இதேவேளை, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு 7,12,319 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளதுடன், குருணாகல் மாவட்டத்தில் அதிகூடிய வாக்காளர்களாக 76,977 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

# மனைவியுடன் சேர்த்துவைக்குமாறு இளைஞர் மரத்தில் ஏறிபோராட்டம்

**வவுனியா விசேட நிருபர்**

பிரிந்துச்சென்ற தனது மனைவியை சேர்த்துவைக்குமாறு கோரி குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால் வவுனியா நகரில் நேற்று பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளது. இச் சம்பவம் நேற்று (03) காலை இடம்பெற்றது. வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு மரத்தில் ஏறி கீழே இறங்காது போராட்டத்தில் ஈடுபட்டார்.


கட்டணம் செலுத்தப்பட்டு பிரசுரிக்கப்படும் விளம்பரமாகும்



# தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 18ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 29


### குறள் தரும் சிந்தனை



இன்நம்முள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை

வறுமையிலும் கொடிய வறுமை, வந்த விருந்தினரை வரவேற்க முடியாதது. அதைப் போல வலிமையிலேயே பெரிய வலிமை அறிவிலிகளின் செயலைப் பொறுத்துக் கொள்வது.

# ஜனநாயகத்தை வலுப்படுத்த வகை செய்யும் தேர்தல்

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சூழலில், தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகிறது. இத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 7 இலட்சத்து 12 ஆயிரத்து 321 பேர் தகுதி பெற்றுள்ளனர். அவர்கள் இன்று (4 ஆம் திகதி) அல்லது நாளை (5 ஆம் திகதி) அல்லது மறுநாள் (06 ஆம் திகதி) வாக்களிக்கலாம். அத்தினங்களில் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யக் கிடைக்கப் பெறாதவர்கள் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் வாக்களிக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்களிப்பின் நிமித்தம் தெரிவு செய்யப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களிலும் தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு தேவையான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுவாக தபால்மூல வாக்களிப்புக்கு எல்லோருக்கும் இடமளிக்கப்படுவதில்லை. அரச ஊழியர்களே இதற்கான தகுதியைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர். குறிப்பாக தேர்தலுக்கான பாதுகாப்பு கடமைகள் ஈடுபடும் பொலிஸார உள்ளிட்ட முப்படையினர், பொது மற்றும் விஷேட போக்குவரத்து சேவைகளில் பணிபுரிபவர்கள், தேர்தலுக்கான வாக்களிப்பு தினத்தில் வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்கு எண்ணும் நிலையங்களிலும் கடமையாற்றுபவர்கள் போன்றோர்தான் தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெறுகின்றனர்.

இவர்கள், தாங்கள் கடமையாற்றும் நிறுவனத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்து தபால் மூல வாக்களிப்புக்கான உரிமையைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள்தான் இன்று முதல் அடுத்து வரும் இரு நாட்களிலும் அல்லது அடுத்த வாரம் இரண்டு நாட்களிலும் தபால் மூலம் தங்கள் வாக்கைப் பதிவு செய்ய அனுமதி அளிக்கப்பட்டு இருக்கின்றனர். இவர்கள் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பொலிஸ் நிலையங்கள், மாவட்ட மட்ட தேர்தல் அலுவலகங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் இன்று முதல் தபால் மூல வாக்கு பதிவு செய்ய முடியும்.

இதேவேளை அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் பெறுமதியானதாகவும் செல்லுபடியற்றதாகவும் விளங்க வேண்டும் என்பதையும் நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைத்து தவிர்க்கும் நோக்கிலும் விஷேட செய்தியாளர் மாநாடொன்றை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடாத்தியுள்ளது. குறிப்பாக வாக்களிக்கும் முறைமை குறித்து வாக்காளர்களுக்கு தெளிவுபடுத்துவதை இலக்காகக் கொண்ட இச்செய்தியாளர் மாநாட்டில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர். எம்.எல் ரத்நாயக்க இது தொடர்பில் தெளிவுபடுத்தி உள்ளார்.

ஜனநாயக பாரம்பரியத்தில் வாக்களிக்கும் உரிமை மிகவும் பெறுமதி வாய்ந்தது. மக்களின் ஆணையை உறுதிப்படுத்துவதுதான் தேர்தல். அதனால் அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கினதும் பெறுமதி பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இதில் தேர்தல்கள் ஆணைக்கழு உறுதியாக உள்ளது என்பதற்கு இச்செய்தியாளர் மாநாடு நல்ல எடுத்துக்காட்டாகும்.

அந்த வகையில்தான் தேர்தலில் வாக்களிப்பது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு மக்களுக்கு தெளிவுபடுத்தி இருக்கிறது. தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாக முன்னர் இந்த தெளிவூட்டல் முன்னெடுக்கப்பட்டு இருக்கிறது. இதனை வாக்காளர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

தேர்தலை அமைதியாகவும் நீதியாவும் சுதந்திரமாகவும் நடாத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழு உச்சபட்ச கவனம் செலுத்தியுள்ளது. அதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அந்த ஆணைக்குழு முன்னெடுத்திருக்கிறது. இதன் நிமித்தம் வாக்காளர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அது நாட்டின் தேர்தல் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கு அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாகவே அமையும்.

அதேநேரம் ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்துள்ள தற்போதைய சூழலில் கடந்த காலங்களைப் போன்று வன்முறைகள் கலவரங்களும் அற்ற நிலைமையும் நிலவி வருகிறது. அதுவே அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. வாக்காளர்களின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கப்பெறும் போது தேர்தல் வன்முறைகள் இடம்பெற வாய்ப்பு இராது என்பதே சுயாதீன தேர்தல் கண்காணிப்புக்குழுக்களின் கருத்தாகும்.

ஆகவே நாட்டின் ஜனநாயக விழுமியத்தின் முக்கிய தூணாக விளங்கும் தேர்தல் முறையை வலுப்படுத்தி மேம்படுத்தவென ஒத்துழைப்பு நல்க வேண்டும். அது ஒவ்வொரு வாக்காளரினதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# அனைத்துலக முத்தமிழ் மாநாட்டில் 'கதிர்காமத் திருமுருகன்' நூல் வெளியீடு

'கதிர்காமத் திருமுருகன்' நூல் தமிழ்நாடு பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் வெளியிடப்பட்டது. கௌமாரமடாலய திருப்பெருந்திரு குமரகுருபர சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், திண்டுக்கல் சட்ட



மன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமார், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மலேசிய பத்திகேஸ் ஆலய அறங்காவலர் நடராஜன் ஆகியோருக்கு பிரதிகள் வழங்கப்பட்டன. பிரதி வழங்கலில் டொக்டர் இளங்கோவன், டத்தோ எம். சரவணன், தஞ்சை சசிகுமார், லண்டன் பரம் நந்தா ஆகியோர் பங்கேற்றனர்.

கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையின் மலையகம் 200 சிறப்பு வெளியீடாக பதுளை வ. ஞானபண்டிதன் எழுதிய 'கதிர்காமத் திருமுருகன்' என்ற இந்த ஆய்வு நூல் பேராதனை பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்லத்துரை சுதர்சன் அவர்களால் எட்டாவது செம்பதிப்பாக வெளிவந்துள்ளது. 'கதிர்காம திருமுருகன்' என்ற ஆய்வு நூல் பழனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாட்டில் தமிழ்நாடு அறநிலைத்துறை அமைச்சர் டி.கே. சேகர்பாபுவினால் வெளியிடப்பட்டு, ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வழங்கப்பட்டது.

ஞானபண்டிதனின் 'கதிர்காமத் திருமுருகன்' நூலை மறுபதிப்புச் செய்யும் முயற்சியில் இலக்கிய விமர்சகரும் எழுத்தாளருமான பேராசான் மு.நித்தியானந்தன் (லண்டன்) எடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

பதுளை வ. ஞானபண்டிதன் பதுளை சமத்துவ சங்கத் தலைவராகப் பணியாற்றியவர். சாதிய அடக்குமுறைக்கு எதிரான பிரசாரகராகவும் செயற்பாட்டாளராகவும் மலையகத்தில் இயங்கியவர். சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உன்னத கருத்தோட்டங்களை மலையக மக்கள் மத்தியில் ஊன்றச் செய்தவர். கதிர்காமத்தின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தவர். பதுளையில் கதிர்காமத் தொண்டர் படையை உருவாக்கியவர். அவர் தமது நீண்டகால ஆராய்ச்சியின் பயனால் 'கதிர்காமத் திருமுருகன்' என்ற இந்த அரிய நூலை 84 ஆண்டுகளுக்கு முன்னர் (1940) எழுதியவர்.





இந்நூல் பற்றி கலாநிதி செல்லத்துரை சுதர்சன் குறிப்பிடும்போது, 'அமரர் வ. ஞானபண்டிதன் எழுதிய இந்நூல் கதிர்காமத் தலத்தின் கடந்த காலத்தையும் சமகாலத்தையும் படம்பிடித்துக் காட்டுகிறது. தலத்தின் தொன்மை வரலாறு, காலனியகால நிலைவரம் அவர் எழுதிய காலச்சூழல் போன்றவற்றை இந்நூல் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது' என்று கூறுகிறார்.

மலையக சமுதாயத்தின் இலக்கியத்தின் நூல் வெளியீட்டின் ஆத்மீகத்தின் மையமாகத் திகழும் எச்.எச். விக்கிரமசிங்க இந்த ஆண்டில் பவளவிழா காண்கிறார். கலை ஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையின் சார்பில் அவர் வெளியிட்டிருக்கும் நூல்கள் தமிழ் உலகில் தனிமுத்திரை பதித்தவை.

திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சன்னிதானம் அம்பலவாண தேசீக பரமாசாரிய சுவாமிகள், சிரவை யாதீனம் கௌமார மடாலயம் திருப்பெருந்திரு குமரகுருபர சுவாமிகள், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமார், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மலேசியா முன்னாள் அமைச்சர் எம். சரவணன் உட்பட மாநாட்டில் கலந்து கொண்ட மகான்களுக்கும் அடியார்களுக்கும் பிரதிகளை எச்.எச். விக்கிரமசிங்க வழங்கி கௌரவித்தார்.

# 158 ஆவது வருட பூர்த்தியை கொண்டாடும் இலங்கை பொலிஸ்



இலங்கை பொலிஸ் நேற்று 03 ஆம் திகதியன்று 158 ஆவது பொலிஸ் தினத்தைக் கொண்டாடியது. 1866 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதி ஜி. டபிள்யூ.ஆர் கெம்பல் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார். அன்றைய தினமே அரசியலமைப் பின்படி இலங்கை பொலிஸ் ஆரம்பிக்கப்பட்ட தினமாக கருதப்படுகின்றது. 1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி முதலாவது பொலிஸ்மா அதிபராக ரிசட் அலுவிஹாரே தனது கடமையை ஆரம்பித்தார். அப்போது உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1948 ஆண்டு சுதந்திரம் பெற்றப்பின்னர் பொலிஸ் படையணி காலனித்துவத்துவத்திலிருந்து பொலிஸ் சேவையாக மாற்றும் பொறுப்பை ரிச்சட் அலுவிஹாரே நிறைவேற்ற வேண்டியிருந்தது.

1870 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரிய அளவிலான வணிகக் குற்றங்கள், மர்ம கொலைகள் மற்றும் இரகசியங்களை கண்டறியும் நோக்கத்துடன் சிவில் உடையுடன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் அத்திட்டத்தின் கீழ் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் 05 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதன் மூலம் வழங்கப்படும் சேவைகள் விரிவுசெய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவானது 1948 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை பொலிஸ் கடமைக்காக ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நாடு பூராகவும் 54 பிரிவுகளில் 400 பொலிஸ் மோப்ப நாய்களினூடாக குற்றவியல் விசாரணைகள், போதைப்பொருள் மற்றும் வெடிபொருட்கள் அடையாளம் காணப்படும் கடமைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்ய முடிந்துள்ளது.

1952 ஆம் ஆண்டு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன், அன்றிலிருந்து இன்றுவரை பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள் பதவி நிலையிலிருந்து பெண் பிரதி பொலிஸ் மா அதிபர் பதவநிலை வரை தனது சிறப்பான சேவையை செய்து வருகின்றனர். தற்போது 04 பெண் பிரதி பொலிஸ்மா அதிபர்களும், 09 பெண் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்ளும், 11 பெண் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களும், பொலிஸ் பரிசோதகர்கள் பதவி நிலைகளில் 1465 பேரும், 8252



பெண் பொலிஸ் சாஜன்ட் மற்றும் பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் பல்வேறு பதவிகளில் தனது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றனர்.

1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் தற்போது அனைத்து பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கி கடமையாற்றி வருகின்றது.

போதைபொருள் மற்றும் வீதி விபத்தக்களை கட்டுப்படுத்த 24 மணி நேரமும் பொலிசார் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதுடன், விஷேட பொலிஸ் அதிரடிப் படையினர் உள்ளடங்கலாக 86000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கைப் பொலிசால் நிறுவப்பட்ட 119 விஷேட தொலைபேசிச் சேவைக்கு மேலதிகமாக புதிய தொலைபேசி இலக்கமாக 107 தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தி தமிழ் மக்களின் முறைப்பாடுகள் அத்துடன் குற்றச் செயல்கள் தொடர்பாக தமிழ் மொழியிலேயே வழங்குவதற்கான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நாடளாவிய ரீதியில் சிறுவர் மற்றும் பெண்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் வகையில் 109 தொலைபேசி இலக்கத்தை ஸ்தாபித்து சிறுவர் மற்றும் பெண்களுக்கு ஏற்படுகின்ற குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கைகளுக்காக 24 மணிநேரமும் பெண் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிசாரால் செயல்படுத்தப்படும் மற்றொரு தனித்துவமான சேவையாக 'பொலிஸ் மா அதிபரிடம் சொல்லுங்கள்' (TELL IGP) இணையத்தளத்தை குறிப்பிடலாம்.

ஒவ்வொரு நபரும் தங்களுக்கு விருப்பமான தொழில் அல்லது வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்காக எவ்வளவு தகுதி பெற்றிருந்தாலும் இந்த தொழில்களைப் பெறுவதற்காக பொலிஸ் தடையகற்றல் அறிக்கையைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமான விடயமாகும். அதைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு மிகவும் செயல்திறனுடன் குறித்த அறிக்கையை வழங்குவதற்காக இலங்கை பொலிசார் நிகழ்நிலை வழியாக வசதிகளை மேலும் மேம்படுத்தியுள்ளனர்.



சமூக பொலிஸ் சேவைக்கு இணையான செயல்படுத்தப்பட்ட போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒழிப்பதற்கான 'யுக்திய சுற்றிவளைப்பு' குற்றவாளிகளைக் கண்டறிந்து கைது செய்வதற்காக செயல்படும் 'மோட்டார் சைக்கிள் படை' போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக 'சுவசர கதெல்ல' பாடசாலைகளைச் சுற்றி போதையில்லா சூழலை உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'பவுர', பாடசாலை குழந்தைகள் போதைபொருளுக்கு உட்படுவதை தடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'ஹெட தவஸ' போன்ற சமூக சார்ந்த வேலைத்திட்டங்களை சுட்டிக்காட்டலாம்.

158 வது வருடத்தை கௌரவமாகக் கொண்டாடும் இலங்கை பொலிசானது எல்லாவகைகளிலும் சவால்களை சந்தித்து வருவதுடன் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்து சிறப்பான சேவைகளை வழங்கியமை மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களினூடாக தெளிவாகின்றது. மக்கள் சேவகனாக இலங்கை பொலிஸ் தன்னை அர்ப்பணிக்கும் என்பதுடன், 158 வது நிறைவு ஆண்டை கொண்டாடும் இன் நன்நாளில் இலங்கை பொலிசானது நீண்ட காலம் சேவையை வழங்க பிராத்திப்போம்.

**ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட விவகாரம்**

# பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதென ஜனாதிபதி அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது

### ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் அறிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையை சந்தித்துபோது, கொரோனா தொற்றுள்ளதாகக் கூறி தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களுக்கு உரியோரின் குடும்பத்தினருக்கு நியாயத்தை பெற்று க்கொடுக்கும் விதமாக அனைத்து தரப்பினரையும் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதாக தெரிவித்த கருத்தை வரவேற்கிறோம்.

ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகரசபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் ஊடக அறிக்கையொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த கொரோனா வைரஸ் பரவலின் போது மரணித்த முஸ்லிம்கள் மற்றும் ஏனைய மதத்தினரின் உடல்களை தகனம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஆராய்வதற்காக ஏனைய கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலமா சபையினரிடம் தெரிவித்துள்ள உறுதிமொழியானது வரவேற்கத்தக்கது. மேலும், கொரோனா தொற்றுள்ளதாக கூறி தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களுக்குரியவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவது தொடர்பில் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைக்கக் கோரி ஜனாதிபதி மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நான் அனுப்பிய கடிதத்தின் பதிலை இலங்கை முஸ்லிம்களின் உயர் சபையான அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் முன்னிலையில் உறுதியளித்துள்ளமையானது ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட மரியாதையாகக் கருதுகின்றேன். முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்தில் இருந்து கொண்டு, கொரோனா தொற்றுள்ளதாகக் கூறி தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களை வைத்து சுயநல அரசியலை செய்



தார்களே ஒழிய, நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தெரிவுக்குழுவைக் கூட கோரவில்லை. அரசியல் இலாபங்களுக்காக ஜனாஸா எரிப்பை பயன்படுத்திக் கொண்டிருப்பதையிட்டு வருத்தமடைகிறேன்.

கொரோனா உடல்களை தகனம் செய்வது தொடர்பில் தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கு கட்சி, எதிர்க்கட்சி வேறுபாடுகளை விடுத்து ஆதரவு வழங்குமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கோரிக்கை விடுக்கிறேன்'.

இவ்வாறு கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

றிசாத் ஏ. காதர்
ஒலுவில் மத்திய விசேட நிருபர்

கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை மீண்டும் நழுவ விடக்கூடாது...

# மக்களை துயரத்திலிருந்து மீட்டவருக்கு நன்றிக் கடன் செலுத்துவது முக்கியம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கரணம் தப்பினால் மரணம் என்பார்கள். முக்கியமான இந்த தருணத்தில் நாட்டு மக்கள் சிந்தித்து செயற்படாவிட்டால் எதிர்வரும் 5 வருடங்களில் நாடு மாபெரும் வீழ்ச்சியை சந்திப்பதை எவராலும் தடுக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எமக்கு எந்த தனிப்பட்ட விருப்பு வெறுப்பும் கிடையாது. ஆனால் கடந்த இரண்டு வருடத்துக்கு முன் நாடு எதிர்கொண்ட பேரழிவு சூழ்நிலையை முழுமையாக மாற்றி மக்களுக்கு மீண்டும் வாழ்வு தந்தவர் என்ற நன்றிக் கடன் மக்கள் அனைவருக்கும் இருப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 5 வருடங்களுக்கு மீண்டும் இந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்தால் நாடு பாரிய பொருளாதார முன்னேற்றத்தை அடைவதுடன் அவரது சிறப்பான வேலைத் திட்டங்களினால் கிழக்கு மாகாணம் பாரிய அபிவிருத்தி காண்பது உறுதி என்றும் அவர் தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் திருகோணமலை நகரில் நடைபெற்றது. அமைச்சர்கள் மற்றும் அரசியல் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.



கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் 5 வருடங்களுக்கு நாம் ஏன் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்ற கேள்வியை பலரும் கேட்கலாம்.

இந்த நாடு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இருந்த சூழ்நிலையை நாம் அனைவரும் அறிவோம். நாடு தீப்பற்றி எரிந்தது. எம்பிக்களின் வீடுகள் தீக்கிரையாகின. அன்றாடம் தேவையான கேஸ், எரிபொருள் பால் மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் கூட இல்லாது அதற்காக மக்கள் வீதிகளில் காத்திருந்து பெரும் அவலங்களை சந்தித்தனர்.

அந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டை பாதுகாத்து இயல்பு நிலைக்கு கொண்டு வந்தவர் அவர் மட்டுமே.

நாட்டில் மூன்று வகையான தலைவர்கள் உள்ளனர். ஒரு வகையினர் நாடு நெருக்கடிக்குள் இருந்தபோது நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். சஜித், அனுர போன்ற தலைவர்கள் நாட்டுக்குள்ளேயே ஒளிந்து கொண்டு முன்னாள் ஜனாதிபதிக்கு காதல் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறது.

மிக மோசமான நிலைக்கு நாடு தள்ளப்பட்டது.

எனது முக்கியமான ஒரு நண்பர் என்னிடம் அது தொடர்பில் பேசிய போது, இந்த நாடு இன்னும் 25 வருடங்களுக்கு தலை தூக்க முடியாது மக்கள் வீதிகளிலேயே காத்திருக்க நேரும் என கூறினார்.

அதற்காக பல்வேறு நாடுகளையும் ஆதாரமாக எனக்கு காட்டினார். நானும் கூட நாடு உடனடியாக நெருக்கடிகளிலிருந்து மீள்வது சாத்தியமி ல்லை என்று தான் யோசித்தேன்.

அந்த நிலையை குறுகிய காலத்தில் மாற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அவர் ஆளுமை மிக்க தலைவர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் அனுர குமார திசாநாயக்கவும் இந்த நாட்டில் நெருக்கடிகள் தொடர வேண்டும். பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கக் கூடாது. நாட்டு மக்கள் கஷ்டப்பட வேண்டும் பாரிய பிரச்சினைக்குள் அரசியல் செய்ய வேண்டும் என்று நினைத்தவர்கள்.

இருளை ஆயிரம் பேர் திட்டினாலும் மெழுகுவர்த்தி ஒன்றை ஏற்றி வைத்து ஒளி யூட்டியவராக பெருமையுடன் நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பார்க்க வேண்டும்.

குடும்பத்தில் மனைவியும் பிள்ளைகளும் அழுதழுது பொருட்களை கேட்கும்போது அவர்களுடன் சேர்ந்து அழுபவர் நல்ல தகப்பன் அல்ல.

அவர்களது பிரச்சனைக்கு தீர்வு காண்பவரே நல்ல தகப்பன் அது போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்த நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட நாட்டின் சிறந்த தலைவர்.

# மு.காங்கிரஸ்; ஜனாதிபதி தேர்தல் புத்தளம் இணைப்பாளராக நியாஸ்

**புத்தளம் தினகரன் நிருபர்**



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின், ஜனாதிபதி தேர்தலுக்கான புத்தளம் மாவட்ட இணைப்பாளராக முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச். எம். நியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 21 ம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான சகல வேலைத்திட்டங்களுக்குமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் புத்தளம் மாவட்ட இணைப்பாளராக முன்னாள் வடமேல் மாகாண சபையின் உறுப்பினர் எஸ்.எச்.எம் நியாஸ், கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் பணிப்புரையின் பெயரில் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக்கினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# பாடசாலை கட்டட சுவரில் வெடிப்பு

மாத்தளை நகரில் அமைந்துள்ள இஸ்மாலியா முஸ்லிம் வித்தியாலய பாடசாலை கட்டடமொன்றின் சுவர் பகுதியில் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் அதன் சுவர் இடிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 1939 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை கட்டிடமொன்றிலே பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. தரம் 6 முதல் 11 வரையான வகுப்பறைகள் இக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. 29 பேர்ச் காணியில் அமைந்துள்ள இப்பாடசாலைக்கு 2 கட்டடங்கள் மாத்திரமே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ள கட்டட சுவரின் முன் பகுதியை படத்தில் காணலாம்.



படம் மாத்தளை சுழற்சி நிருபர்

# செட்டியார் தெரு முத்து விநாயகர் ஆலய சதுர்த்தி விசர்ஜன பெருவிழா

கொழும்பு, செட்டியார் தெரு முத்து விநாயகர் ஆலயத்தின், ஆவணி மாத சதுர்த்தி விசர்ஜன பெருவிழா நாளை (05) ஆரம்பித்து எதிர்வரும் 8 ஆம் திகதி வரை வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

களிமண்ணில் உருவாக்கப்பட்ட விநாயக பெருமானை கொழும்பு மாநகரத்தில் ஊர்வலமாகச் எடுத்துச் சென்று களனி கங்கையில் சங்கமிக்க வைக்கப்படும்.

அதன்படி, செட்டியார் தெரு முத்து விநாயகர் ஆலய முற்றத்தில், நாளை மாலை 06 மணிக்கு விநாயக பெருமான் பிரதிஸ்டை செய்யப்பட்டு பூஜைகள் நடத்தப்படும். அத்துடன் 06 ஆம், 07 ஆம் திகதிகளில் கலைவாணி இசை குழுவினரின் இன்னிசை கச்சேரியும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து 8 ஆம் திகதி, காலை 08.00 மணிக்கு பூஜைகளின் பின்னர், விநாயகப் பெருமான் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு காக்கைத்தீவு கடலும் களனி கங்கையும் சங்கமிக்கும் இடத்தில் விசர்ஜன பூஜைகள் நடத்தப்படும்.

பக்த அடியார்களும் தங்களது வீடுகளிலிருந்து களிமண், மஞ்சள், பசுஞ்சாணம் ஆகியவற்றால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை, ஊர்வலாக கொண்டுசென்று பூஜையில் வைத்து களனி கங்கை சங்கமத்தில் விசர்ஜனம் (கரைத்தல்) செய்ய முடியும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, செட்டியார் வீதி, ஐந்துலாம்பு சந்தி, கதிரேசன் வீதி, ஜிந்துபிட்டிவீதி, விவேகானந்தாமேடு, புதுசெட்டித்தெரு, ஜம்பட்டா வீதி, கல்பொத்த வீதி, கொட்டாஞ்சேனை வீதி, வாசல வீதி, மேம்பீல்ட் வீதி, கொலேஜ் வீதி, அளுத்மாவத்தை ரோட், விஸ்வைக் சந்தி ஊடாக விசர்ஜன விநாயகப் பெருமான் ஊர்வலமாகச் சென்று, காக்கை தீவு களனி கங்கையில் சங்கமித்து பெருவிழா நிறைவுற்றதன் பின்னர் மதிய போசனம் (அன்னதானம்) வழங்கப்படும்.

# வெலிகம மஸ்ஜிதுல் ஸலாம் பள்ளிவாசலில் 30 வருடங்கள் பணிபுரிந்த மௌலவி ஜிப்ரி கௌரவிப்பு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம மஸ்ஜிதுஸ் ஸலாம் பள்ளிவாசலில் சுமார் 30 வருட காலம் பேஷ் இமாமாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற மௌலவி எம்.எஸ். மொஹமட் ஜிப்ரி (தீனி,பாரி) அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் ஸலாம் குர்ஆன் மத்ரஸாவின் இரண்டாம் வருட பரிசளிப்பு வைபவமும் (1) ஞாயிற்றுக் கிழமை அஸர் தொழுகையைத் தொடர்ந்து மிக விமர்சையாக இடம் பெற்றது.

குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் மௌலவி எம். என். எம். ஷிஹான் (முர்ஸி) தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் விசேஷட பேச்சாளர்களாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.ஏ.எம். இப்ளால் (பாரி), மற்றும் வெலிகம மதுராபுர மத்ரஸதுல் பலாஹ் அதிபர் மௌலவி எம்.எம். முனாஸ் (ரஷாதி) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேலும் கௌரவ அதிதிகளாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் வெலிகம கிளைத் தலைவர் மௌலவி எம். எஸ்.எம். பாயிஸ் (ஹிழ்ரி) முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாத்தறை மாவட்ட அதிகாரி வீ.டி. ஹனூன் மற்றும் மஸ்ஜிதுல் ஸலாம் நிர்வாக சபைத் தலைவர் எம்.யூ.எச். மொஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# சிலம்பக்கலையின் அழிவைத் தடுக்க தற்போது யாரும் முன்வருவதில்லை

**சிலம்பாட்டம் இது தமிழர்களின் பாரம்பரிய தற்காப்பு கலை வடிவம் ஆகும். சிலம்ப கலையானது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. சிலம்பம் என்ற சொல் சிலம்பல் என்ற வினையடியிலிருந்து தோற்றம் பெற்றதாகும். இது ஒலித்தல் என்று பொருள்படுகின்றது. சிலம்பம் ஆடும் போது உருவாகும் ஒலிகளை குறிக்கும் வகையாக இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.**

**இந்தியாவில் சிலம்பாட்டம் என்றும் இலங்கையில் "கம்படி", "சீனடி சிலம்படி" என்றும் இது அழைக்கப்படுகின்றது. சிலம்பம் யாழ்ப்பாண சமூகத்தில் எவ்வாறான நிகழ்த்துகை வடிவம் பெற்றுள்ளது என்பதை அறிய கள ஆய்விற்காக மாவிட்டபுரம் மற்றும் தெல்லிப்பளை ஆகிய இடங்களை தெரிவு செய்து சிலம்பாட்ட கலைஞர்களான குரு கந்தப்பிள்ளை சின்னத்தம்பி மற்றும் அவரது மகன் சின்னத்தம்பி ஜெயநந்தன் ஆகியோரிடம் மேற்கொண்ட நேர்காணல்**

**ஜனனி : ஐயா சிலம்பக் கலை இலங்கைக்கு எப்போது கொண்டுவரப்பட்டது என்று கூறமுடியுமா...?**

சின்னத்தம்பி : கம்படி இலங்கைக்கு முதல் முதல் 1960 காலப்பகுதியில் சோதி சிவம் என்பவரால் யாழ்ப்பாணம் வல்வட்டி துறை பகுதியில்அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் அவர்களது மாணாக்கர்களின் வாயிலாக பருத்துறை, முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக்கு இக்கலை பயிற்சிவிக்கப்பட்டு விரிவடைந்து பின்னர் காங்கேசன்துறை துறை பகுதியினருக்கு இந்தியாவில் இருந்து வந்த சீமான் என்பவரால் கலை முழுவதுமாய் பயிற்றுவிக்கப்பட்டது.

**ஜனனி : நீங்க இந்த கலையில் எபோதிலிருந்து ஆர்வம் காட்டுகின்றீர்கள்.?**

சின்னத்தம்பி : முதலில் தற்காப்பு கலைக்காக தான் பழகினேன். பின்னர் சுவாமி வீதிஉலா வரும் போது எனது விளையாட்டை நான் செய்து காட்டுவதும் அதற்குப் பிறகு தான் மக்களுக்கு தெரியும் நான் இந்த விளையாட்டை பழகி இருக்கிறேன் என்று. பிறகு என் மகன் மற்றும் பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் பழக்கினேன்.

இதனை எனது தலைமுறையில் தான் ஆரம்பித்து வைத்தேன். பிறகு ஒவ்வொரு திருவிழாக்கும் எங்களைத்தான் பிடிப்பார்கள் அதற்குப் பிறகு திருவிழாக்களுக்கு சென்று விளையாடினோம் .

**ஜனனி : இக்கலையின் நிகழ்த்து முறை பற்றி கூறுவீர்களா ...?**

சின்னத்தம்பி : சிலம்பாட்டத்தை பொறுத்தவரைக்கும் ஐந்து வணக்க முறைகள் இங்கு பின்பற்றப்படுகின்றன. ஒன்று பூமாதேவி, வணக்கம் கடவுள், வணக்கம் குரு வணக்கம், சோடி வணக்கம், சபையோர் வணக்கம்

முதன் முதலில் பூமாதேவிக்கு வணக்கம் செய்துவிட்டு தலையில் தேங்காய் வைத்து குரு வணக்கம் செய்த பின்னர் தேங்காயை உடைத்து, கற்பூரம் கொளுத்தி குரு வணக்கம் இடம்பெறும்.

**ஜனனி : இக் கலையுடன் ஏதாவது துணைக் கலைகளையும் இணைத்து நிகழ்த்துகின்றீர்களா?**

ஜெயநந்தன் : சிலம்போடு சம்பந்தப்பட்ட கலைகளான தீப்பந்தம், சங்கிலி பந்தம், தடிப் பந்தம், தராசு பந்தம், வட்டப்பந்தம், முக்கோணப்பந்தம், நட்சத்திர பந்தம், கரகாட்டம், காவடியாட்டம், புலியாட்டம், பொய்க்கால் கட்டி ஆடுதல், சுருள்வாளாட்டம் விளையாட்டு என்பனவற்றோடு வந்து வயிற்றில் வாழைக்காய் வெட்டுவது கழுத்தில் வாழைக்காய் வெட்டுவது போன்ற கலைகளும் இணைக்கப்பட்டு நிகழ்த்தப்படுகின்றன.

**"சிலம்போடு சம்பந்தப்பட்ட கலைகளான தீப்பந்தம், சங்கிலி பந்தம், தடிப் பந்தம், தராசு பந்தம், வட்டப்பந்தம், முக்கோணப்பந்தம், நட்சத்திர பந்தம், கரகாட்டம், காவடியாட்டம், புலியாட்டம், பொய்க்கால் கட்டி ஆடுதல், சுருள்வாளாட்டம் விளையாட்டு என்பனவற்றோடு வந்து வயிற்றில் வாழைக்காய் வெட்டுவது கழுத்தில் வாழைக்காய் வெட்டுவது போன்ற வித்தைகளும் இணைக்கப்பட்டு நிகழ்த்தப்படுகின்றன."**

**ஜனனி;: உண்மையாகவா? இங்கு பார்வையாளர்களும் பங்கேற்பாளராக செயற்படலாமா??**

ஜெயநந்தன்; இங்கு பார்வையாளர்களும் பங்கேற்பாளராக செயல்படலாம். மற்றும் கழுத்தில் வாழைக்காய் வைத்து வெட்டும் சந்தர்ப்பத்தில் அவர்கள் பயன்படுத்தும் ஆயுதம் கூரியதா இல்லையா என்ற சந்தேகம் தோன்றும்போது வாளை பார்வையாளர்களிடம் நாங்கள் கையில் கொடுத்து சில பார்வையாளர்கள் இக்கலையை நம்பாத பட்சத்தில் பாயை நிலத்தில் விரித்து அவர்களை நிலத்தில் படுக்க வைத்து அவர்களுடைய வயிறு மற்றும் கழுத்துப் பகுதிகளில் வைத்து வாழைக்காய் வெட்டுவோம். அப்போது ரசிகர்கள் இதை நம்புவார்கள்.

**ஜனனி: இக்கலையில் சமூகம் சார்ந்த மதிப்பீடுகள் எவ்வாறு உள்ளது அதாவது சமூகத்தில் இக்கலையை மக்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள் ?**

ஜெயநந்தன் : ஆரம்ப காலத்தில் சிலம்பக்கலையானது சுவாமி வீதி வலம் வரும் போது நிகழ்த்தப்பட்டது. பின்னர் ஆலய வீதிகளிலும் திருவிழா காலங்களிலும் சமூகத்தில் முக்கிய பிரமுகர்களின் வரவேற்பிலும் ஆற்றுகை செய்யப்பட்டது. ஆனால் தற்போது அந்த வழக்கம் குறைவடைந்து கொண்டே செல்கிறது. சமூகத்தவர்கள் கலையை நிகழ்த்துபவர்களை ஆதரிப்பது அரிதாகவே காணப்படுகிறது. சிலம்பக் கலைஞர்களை கூத்தாடிகள் எனக் கூறி அவர்களை ஒதுக்கும் தன்மையும் காணப்படுகிறது. ஆனால் தற்காலத்தில் ஒரு சில இடங்களை தவிர்த்து எங்களை மக்கள், கலைஞர்கள் என்ற நோக்கில் பார்க்கிறார்கள்.அதனால் தொடர்ந்தும் நம்மால் நிகழ்த்து கலைகளை செய்யக் கூடியதாக இருக்கிறது.



**ஜனனி : மாணவர்கள் பங்குபற்றும் தன்மையும் இங்கு நிலவுகிறதா..**

ஜெயநந்தன் : சிலம்பகலையை பயில்வதன் மூலம் தங்களுடைய பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படும் என்று பயப்படுகிறார்கள்.

இதனால் எவ்வளவு திறமையான சிறார்கள் இருந்தும் கலையை பயிலத் தயங்குகிறார்கள்.

**ஜனனி: உங்களிடம் கலையை பயில வருகின்ற கலைஞர்களின் வாழ்க்கை முறை எவ்வாறு உள்ளது..?**

ஜெயநந்தன் : இங்க இந்த சிலம்பக் கலையை பயில வருகின்ற கலைஞர்கள் நடுத்தர வர்க்கம் இல்லாவிடில் நடுத்தர வர்க்கத்திலும் கீழானவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

கலைஞர்கள் ஒவ்வொருவரும் முழு நேரவேலையாக சிலம்ப கலையை மேற்கொள்வதில்லை.

**ஜனனி : இக்கலையை தொடர்ந்து நடத்துவதற்கு நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?**

சின்னத்தம்பி: கலைஞர்களில் பெரும்பாலானோர் முழுநேர வேலைக்கு செல்வதால் அவர்களை குறித்த நேரத்தில் ஒன்றிணைப்பதும் மற்றும் முன்னாயத்தம் மற்றும் ஒத்திகை செய்வதும் கடினமானதாக உள்ளது.

**ஜனனி : அப்படியானால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுமே?**

சின்னத்தம்பி : நான்கு வருடங்களுக்கு முன்னர் கொரோனா வந்து கலைஞர்கள் வீட்டுக்குள்ள முடங்கினர். அதிலிருந்து எழுந்து வருவது மிகப்பெரிய சவாலாக இருந்தது.

அத்தோடு இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டால் கலைஞர்கள் பெரும் கஷ்டங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

**ஜனனி : இக்கலையினை பயில்வதனால் ஏதாவது பயன்கள் உள்ளனவா..?**

சின்னத்தம்பி: இது ஒரு சிறந்த உடற்பயிற்சியைத் தரும் கலை. ஆரம்ப காலத்தில் இது தற்காப்பு கலை என்ற வகையினுள் அடங்கியது. பொறுமை, ஞாபகசக்தி, உடல்வலிமை, என்பனவற்றின் மூலம் எதிரிகளிடம் இருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ளலாம்

**ஜனனி : தற்காலத்தில் இந்த கலையின் நிலை என்ன..?**

ஜெயநந்தன; தற்காலத்தைப் பொறுத்தவரை, சிலம்பக் கலை வந்து அழிவடைந்து வரும் நிலையிலே காணப்படுகிறது. இக் கலையை பயில்வதற்கு யாருமே இப்போது முன் வருவது இல்லை சரியான கடினமான கலை என்பதால் பாதியிலே கலையை விட்டு சென்றவர்கள் அனேகம்.



**திருச்செல்வம் ஜனனி**
**ஊடகத்துறை**
**யாழ் பல்கலைக்கழகம்**

## இன்றைய பலன்கள் (04.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
குடும்பத்தில் அமைதி நிலவும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். சில பணிகள் அலைக்கழிப்பை தரலாம்.



**ரிஷபம் :**
சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். எதிர்பார்க்கும் முக்கிய காரியங்கள் தள்ளிப் போகலாம்.



**மிதுனம்:**
கூட்டுத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். அனேக காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.



**கடகம்:**
உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது அவசியம். எதிர்பார்த்து காத்திருக்கும் பணவரவு தாமதமாகலாம்.



**சிம்மம்:**
கூட்டுத் தொழிலில் லாபம் குறைக்கலாம். சில காரியங்கள் நடைபெறாமல் தள்ளிப்போய் கவலை ஏற்படுத்தும்.



**கன்னி:**
முக்கியமான காரியங்களை கொஞ்சம் தள்ளிப் போடுங்கள். கூட்டுத் தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படலாம்.



**துலாம்:**
உத்தியோகத்தில் மற்றய பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பணவரவுகளில் தடைகளை தவிர்க்க முடியாது.



**விருச்சிகம்:**
சில காரியங்களில் வெற்றி பெற நண்பர்களின் உதவி தேவைப்படும். சிலருக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கலாம்.



**தனுசு:**
கூட்டுத் தொழில் நன்கு நடைபெறக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான போக்கு காணப்படும். முயற்சிகளில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள்.



**மகரம்:**
சொந்தத் தொழிலில் ஆதாயம் அதிகரிக்கலாம். புதிய வாடிக்கையாளர் ஒருவரின் பணியை முடிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள்.



**கும்பம்:**
ஊழியர்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை செய்து கொடுப்பீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் நல்ல லாபத்தை பெற்று தரும்.



**மீனம்:**
அவசர வேலை ஒன்றை உடனடியாக செய்ய வேண்டியது இருக்கும். வரவு செலவு சரிசமமாக இருக்கும்.

## 2025 ஜனவரி முதல் அரச...

நிதியத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்க வேண்டும் என்ற திறைசேரியின் இணக்கப்பாடு மற்றும் அமைச்சரவையின் அனுமதியுடன் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக குழுவின் தலைவர் உதய ஆர். சேனவிரத்ன தெரிவித்தார்.

அரச துறையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைப்பதற்கான நிபுணர் குழு அரச மற்றும் தனியார் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 உறுப்பினர்களை உள்ளடக்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2024 ஜூன் 12 ஆம் திகதி அமைச்சரவை அனுமதியுடன் நியமிக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தலைமையில், தேசிய வரவு ★ செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜூட் நிலுக் ஷன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹிரன்ச கலுதந்திரி, ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் எஸ். அலோக பண்டார, நிறுவன பணிப்பாளர் நாயகம் எச்.ஏ. சந்தன குமார சிங்க, வைத்தியர் டெரன்ஸ் காமினி. டி.சில்வா, ஓய்வுபெற்ற சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகமும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவருமான துமிந்த ஹுலங்கமுவ, BCS International Technology PVT LTD இன் பிரதம பொது அதிகாரி சந்தி எச். தர்மரத்ன, கொமர்ஷல் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்) இசுரு திலகவர்தன, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜீ.எல். வர்ணன் பெரேரா ஆகியோர் இந்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அங்கம் வகித்தனர். குழுவுக்கு 03 மாதங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில், 18 விடயப்பரப்புக்களின் கீழ் அரச சேவைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு கொள்கைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய விடயங்கள் இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

## அரச சேவையில் தரங்களுக்கு...

அரச ஊழியர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட உதய.ஆர்.செனவிரத்ன தலைமையிலான நிபுணத்துவ குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, 2025 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 24 ★ 50 சதவீதம் வரையில் அதிகரிக்கப்படவுள்ளது. அதன்படி, அரச சேவையின் அலுவலக உதவியாளர் தரம் மூன்றிற்கு 5,450 ரூபாவினாலும், இரண்டாம் தரத்திற்கு 8,760 ரூபாவினாலும், தரம் ஒன்றுக்கு 10,950 ரூபாவினாலும் சம்பளம் அதிகரிக்கப்படவிருப்பதோடு, அதன் உயர்தர சேவைகளுக்கு 13,980 ரூபாவினால் சம்பள அதிகரிப்பு செய்யப்படவுள்ளது.

அதேபோன்று சாரதி சேவையின் மூன்றாம் தரத்தின் சம்பளம் 6,960 ரூபாவினால் அதிகரிக்கப்படும். இரண்டாம் தரத்தின் சம்பளம் 9,990 ரூபாவினாலும், முதலாம் தரத்திற்கு 13,020 ரூபாவினாலும், விசேட தரத்திற்கு 16,340 ரூபாவினாலும் சம்பள அதிகரிப்பு கிடைக்கும்.

மூன்றாம் நிலை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு8,340 ரூபா சம்பள உயர்வும், இரண்டாம் தரத்திற்கு 11,690 ரூபா சம்பள உயர்வும், முதலாம் தரத்திற்கு15,685 ரூபா சம்பள உயர்வும் கிடைக்கும்.

முகாமைத்துவ சேவை அதிகாரி/ முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு 10,140 ரூபா மற்றும் தரம் II இற்கு 13,490 ரூபா உயர்த்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. முதற்தர சம்பளம் 17,550 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் மூன்று சம்பள உயர்வு 12,710 ரூபாவினாலும் இரண்டாம் தரத்திற்கு 7,820 ரூபாவும் முதல் தரத்திற்கு 25,150 ரூபாவினாலும் அதிகரிக்கப்படும்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார பணியாளர் மூன்றாம் தரத்தின் சம்பளம் 12,885 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. இரண்டாம் தரத்திற்கு 17,945 ரூபா சம்பள உயர்வும் முதலாம் தரத்திற்கு 25,275 ரூபா சம்பள உயர்வும் கிடைக்கும்.

கதிரியக்க நிபுணர் மற்றும் மருந்தாளர் மூன்றாம் தரத்திற்கு 13,280 ரூபா சம்பள அதிகரிப்பும், இரண்டாம் தரத்திற்கு 18,310 ரூபா சம்பள உயர்வும் முதலாம் தரத்திற்கு 25,720 ரூபா சம்பள உயர்வும் கிடைக்கும்.

மூன்றாம் தர தாதியர் உத்தியோகத்தரின் சம்பளம் 13,725 ரூபாவாலும், இரண்டாம் தரத்திற்கு 18,835 ரூபா சம்பள அதிகரிப்பும், முதலாம் தரத்தினருக்கு 26,165 ரூபா சம்பள உயர்வும் வழங்கப்படவுள்ளது.

அதிபர் சேவையின் மூன்றாம் தரத்தின் சம்பளம் 23,425 ரூபாவினாலும், இரண்டாம் தரத்தின் சம்பளம் 29,935 ரூபாவினாலும், மூன்றாம் தரத்திற்கு 39,595 ரூபாவினாலும் அதிகரிக்கப்படும்.

ஆசிரியர் சேவையிலுள்ள கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு 17,480 ரூபா சம்பள உயர்வும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு 19,055 ரூபா சம்பள அதிகரிப்பும், இரண்டாம் தரத்திற்கு 20,425 ரூபாவும் முதல் தரத்திற்கு 38,020 ரூபாவும் முன்மொழியப்பட்டுள்ளது. பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் சம்பள உயர்வாக 10,704 ரூபா அதிகரிக்கப்படவுள்ளது. பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் சம்பள உயர்வு 13,210 ரூபாவாகும். சப்இன்ஸ்பெக்டர்களின் சம்பளம் உயர்வு 14,050 ரூபாவால் அதிகரிக்கப்படும். பொலிஸ் பரிசோதகரின் சம்பளம் 18,290 ரூபாவும் பிரதான பொலிஸ் பரிசோதகருக்கு 23,685 ரூபாவும் அதிகரிக்கப்படவுள்ளது.

கிராம உத்தியோகத்தர் முதலாம் தர சம்பளம் 11,340 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. அந்த சேவையின் இரண்டாம் தரத்திற்கு 14,690 ரூபாவும், முதலாம் தரத்தினருக்கு 18,750 ரூபாவும் அதிகரிக்கப்படவுள்ளது. நிர்வாக கிராம அதிகாரியின் சம்பளம் 23,575 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

உதவிச் செயலாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர், உதவிப் பிரதேச செயலாளர், உதவி ஆணையாளர் ஆகியோரின் சம்பளம் 28,885 ரூபாவினால் அதிகரிக்கப்படும். பிரதி பணிப்பாளர், பிரதி ஆணையாளர்களின் ஆரம்ப சம்பளம் 43,865 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. பிரதேச செயலாளர், பணிப்பாளர், ஆணையாளர், சிரேஷ்ட உதவி செயலாளர் ஆகிய பதவிகளுக்கான சம்பளம் 57,545 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. ஆரம்ப தர வைத்தியர்களின் சம்பளம் 35,560 ரூபாவினால் அதிகரிக்கப்படும். இரண்டாம் தர வைத்தியர்களின் சம்பளம் 39,575 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. முதலாம் தர வைத்தியர்களுக்கான சம்பள அதிகரிப்பு 53,075 ரூபாவினாலும், மேலதிக செயலாளர் மற்றும் விசேட வைத்தியர்களின் சம்பளம் 70,200 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

உதவிச் செயலாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகிய பதவிகளுக்கான சம்பளம் 28,885 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. பிரதிப் பணிப்பாளர் மற்றும் பிரதி ஆணையர்களின் அடிப்படைச் சம்பளம் 43,865 ரூபாவினாலும் பிரதேச செயலாளர், பணிப்பாளர், ஆணையர், சிரேஷ்ட உதவிச் செயலர் பதவிகளுக்கான சம்பளம் 57,545 ரூபாவினாலும் உயர்த்தப்படும்.

அத்துடன், ஆரம்ப நிலை வைத்தியர்களின் சம்பளம் 35,560 ரூபாவினாலும் இரண்டாம் நிலை வைத்தியர்களின் சம்பளம் 39,575 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது. முதலாம் நிலை வைத்தியர்களுக்கு 53,075 ரூபாவும், மேலதிக செயலாளர் மற்றும் விசேட வைத்திய பதவிகளுக்கு 70,200 ரூபாவும் சம்பள உயர்வு வழங்கப்படும். அதே சமயம், அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கும் வருடாந்தம் சம்பள உயர்வுத் தொகையை இரட்டிப்பாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2025 ஜனவரி 01 திகதி முதல் அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் சம்பளத்தை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தேசிய மக்கள் சக்தி கட்சி..

பிரிவு பிரதிநிதி தனுக ரணன்ஞ்சக கஹந்தகமகே ஐரோப்பிய ஒன்றியத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திடம் விசேட முறைப்பாடொன்றை முன்வைத்த அவர், தேர்தல் சட்ட விதிமுறை மீறல்கள் தொடர்பாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட போதிலும் தேர்தல்கள் ஆணைக்குழு இன்னும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசியல் கட்சியினால் தேர்தல் விதிகள் மீறப்பட்ட பல சந்தர்ப்பங்கள் குறித்து அவதானிக்கப்பட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது. குறித்த அறிக்கையில்,

2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதியன்று மஹரகம இளைஞர் மத்திய நிலையத்தில் நடைபெற்ற அரசியல் கூட்டம் ஒன்று இதற்கு சிறந்த உதாரணம். இதன்போது, அரசாங்க தாதியர்கள் அவர்களின் சீருடையில் தேசிய மக்கள் சக்தி அரசியல் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டமை தேர்தல் விதிகளை மீறிய செயலாகும். 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து பெப்ரல் அமைப்பு, அவ்வாறானவர்கள் சீருடையின்றி சமூகமளித்திருந்தால் மிக சிறப்பானதாகும் என குறிப்பிட்டிருந்தது.

இருப்பினும், இந்த தேர்தல் விதிமுறைகள் மற்றும் அரசியல் நெறிமுறைகளை மீறுவது குறித்து தேர்தல் ஆணைக்குழுவினால் குறிப்பிடத்தக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை அல்லது எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.

இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், நியாயமான தேர்தலை உறுதி செய்தல் மற்றும் சட்டத்தை பாதுகாப்பதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுவிற்கு முக்கிய பங்குண்டு.

தற்போதைய பிரச்சினைகளுக்கு முறையான ஒழுங்குமுறை மேற்கொள்ளப்படாமையினால், இலங்கையில் நியாயமானதும் ஜனநாயகமானதுமான தேர்தல் செயற்பாடுகள் பாதிக்கப்படக்கூடிய நிலை காணப்படுவதாகவும் நீதியான மற்றும் ஜனநாயக தேர்தலை உறுதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களின் அவசியத்தை இலங்கை மறுசீரமைப்பு அமைப்பின் சட்டப் பிரிவு பிரதிநிதி தனுக ரணன்ஞ்சக கஹந்தகமகே தனது முறைப்பாட்டில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## இராணுவத்தினருக்கு எதிரான சகல...

பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினர் நிம்மதியில்லாமல் இருக்கிறார்கள். நாட்டுக்காக உயிர் தியாகம் செய்ததால்தான் அரசியல்வாதிகள் இன்று சுதந்திரமாக மேடை போட்டு தேர்தல் பிரசாரம் செய்கிறார்கள். இராணுவத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்குடையது. முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஏதும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஆகவே இராணுவத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முடிவுக்கு கொண்டு வரவேண்டுமாயின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும். இராணுவத்தினர் இன்று கௌரவமாக வாழவில்லை. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள்.

அரசியலமைப்பின் ஊடாக முப்படையினரது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என்பதையும் அரசியல் நோக்கத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களையும் நிராகரிப்போம்.

இராணுவத்தினரின் உரிமைகளை பாதுகாக்க அனைத்து அரசியல் தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் எரான் விக்கிரமரத்ன எம்.பி தனது உரையில் தெரிவித்தார்.

## நவீனமயமாக்கப்பட்ட கடவுச்சீட்டுகள்...

இதனை தெரிவித்த அவர், நீண்ட காலமாக கடவுச்சீட்டுகள் வழங்கிய நிறுவனம் அல்லாத வேறு நிறுவனத்திடம் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கடவுச்சீட்டு பெறுவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், அதற்காக அரசாங்கம் வருத்தம் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின்படி, டெண்டர் அழைப்புகள் மற்றும் கொள்முதல் செயல்முறைகள் மிகவும் வெளிப்படையான முறையில் செய்யப்பட வேண்டும். எனவே நீண்ட காலமாக கடவுச்சீட்டை வழங்கிய நிறுவனத்தைத் தவிர வேறு நிறுவனத்திடமிருந்து டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கடவுச்சீட்டைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழ் மக்களை ஏமாற்றுவதாக...

தெரிவித்துள்ளார். யாழில், அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், சுமந்திரன் என்கின்ற நபர் யார் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். நல்லாட்சி அரசாங்கத்தில் ஐ.நாவில் கால அவகாசம் பெற்றுக்கொடுப்பதற்கு சம்பந்தர் தலைமையிலான அணியில் சுமந்திரன் அரசாங்கத்தை காப்பாற்றினார். அது மட்டுமல்லாது புதிய அரசியலமைப்பை உருவாக்குகிறோம் எனக் கூறிக்கொண்டு அநுர ஆட்சியில் சமஷ்டி இருக்கிறது என மக்களுக்கு பொய்களை கூறிவந்தவர்.

அதேபோன்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தை திசைதிருப்பி, இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்புக்கு தமிழ் மக்கள் உள்ளக விசாரணையை வலியுறுத்தி போராட்டம் நடத்தினார்கள் என பாராளுமன்றத்தில் தெரிவித்தவர் அவர்.

எமது போராட்டம் சர்வதேச விசாரணையை கோரி இடம்பெற்றதே அன்றி உள்ளக விசாரணையை கோரி இடம்பெற வில்லையென அப்போது எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் அழுத்தம் திருத்தமாக கூறினார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழர் தரப்பு பொது வேட்பாளின்...

பொதுவேட்பாளரினூடாக தமிழர்கள் தேர்தலை எதிர்கொள்வதற்கான அவசியம், புறநிலை, முக்கியத்துவம் என்பவற்றையும் தமிழர்கள் தேசமாக தமது நிலைப்பாட்டை அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் ஆணித்தரமாக வெளிப்படுத்தும் வகையில் தமிழ் பொது வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பினரால் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ளார். இந் நிலையிலேயே, பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று (03) வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச ஊழியர்கள் வாக்குரிமையை...

எமது நாட்டை கடவுளால்கூட காப்பாற்ற முடியாமல் போய்விடுமென கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார். நெருக்கடியான காலகட்டத்தில்கூட அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வுகளை வழங்கி, 2025 ஆம் ஆண்டு முதல் நிலையான சம்பள உயர்வு திட்டத்தை முன்வைத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டமே நடைமுறைக்கு சாத்தியம் என்பதை அரசாங்க ஊழியர்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## 38 நாடுகளுக்கு இலவச விசாவுடன்...

பிரவேசிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்நாட்டின் சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்துக்கு இது மிகவும் நல்ல முடிவாக இருக்குமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். பாராளுமன்றம் நேற்று (3) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியபோது, கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## அதிகமாக செலவு செய்தால்...

நேரிடலாம் என்பதுடன் குடியுரிமையும் பறிக்கப்படலாமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவடைந்து 21 நாட்களுக்குள் அவர்களின் வருமானம் மற்றும் அவர்களின் செலவீனங்கள் குறித்து வேட்பாளர்கள் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டுமென தெரிவித்துள்ள அவர், இந்த அறிக்கைகளை செய்தித்தாள்கள் இணையங்கள் மூலம் பகிரங்கப்படுத்துவோமெனவும் தெரிவித்துள்ளார்.

அவர்கள் வழங்கிய தகவல்களில் தவறு காணப்பட்டால் பொதுமக்கள் இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கலாம் எனவும் உரிய நடவடிக்கையை எடுக்கலாமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## AI மற்றும் ரொபோடிக் துறையில்...

தகவல் தொழிநுட்பம், மெகாட்ரொனிக்ஸ் மற்றும் ரொபோ தொழிநுட்பம் போன்ற செய்முறை பாடநெறிகளை அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 7,500 ஆசிரியர்களை 03 கட்டங்களின் கீழ் Skills College of Technology (SCOT CAMPUS) நிறுவகத்தின் மூலம் பயிற்றுவிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு...

அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் (02) வழங்கப்பட்டன. கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தோட்டப்புற த்தின் பாரம்பரிய அரசியல் முகாம்கள் உடைக்கப்பட வேண்டுமென திலித் ஜயவீர குறிப்பிட்டார்.

## மிகக் குறுகிய காலத்தில் மீண்ட... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையுடன் எதிர்கொண்டார். சஜித்தும், அநுரவும் அந்த சவாலை ஏற்றுக்கொள்ளாது ஒதுங்கிய வேளையில், சவாலை ஏற்று நாட்டை பொறுப்பேற்ற தலைவரை வெற்றிபெறச் செய்யும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

மக்கள் வரிசையில் இறந்தனர், மருந்தின்றி இறந்தனர், வேலைக்குச் செல்ல எரிபொருளைப் பெற வரிசையில் பல மணிநேரங்களாக மற்றும் நாட்களாக அவதிப்பட்டனர். அவ்வாறிருந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றது அதிர்ஷ்டமே. நமது மனசாட்சிப்படி நாட்டைக் காப்பாற்றிய தலைவருக்கு கடமையை நிறைவேற்ற வேண்டும். திறைசேரியில் 10 மில்லியன் டொலர்கள் இல்லாமல், பல நாட்கள் எண்ணெய் கப்பல்களை விடுவிக்க வழி இல்லை. வேலைக்குச் செல்ல எரிபொருள் இல்லை. மீன்பிடி தொழிலுக்கு செல்ல வழியில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்த நாட்டின் நிலைமையை நினைத்துப் பாருங்கள். எண்ணெய் மற்றும் மருந்துகளை கொள்வனவு செய்ய இலங்கை வங்கியினால் எல்சீ வழங்கப்பட்டபோது ஏனைய நாடுகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் இன்று நாட்டைப் பாருங்கள். மீட்பது சாத்தியமற்றது என்று கூறப்பட்ட, எவரும் பொறுப்பெடுக்காத நாட்டை ரணில் விக்கிரமசிங்க மீண்டும் கட்டியெழுப்பினார். இன்று சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அன்றைய தினம் சுற்றுலா பயணிகளை வர வேண்டாம் என ஜே.வி.பியினர் கூறினார்கள். ஆனால் சுற்றுலா பயணிகள் வந்தனர். வெளிநாட்டு பணியாளர்களை பணம் அனுப்ப வேண்டாம் என்றார்கள். இன்று, ஹோட்டல் அறைகள் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பியுள்ளன. பணவீக்கம் குறைந்துள்ளது. டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு வலுப்பெற்றுள்ளது. பொருட்களின் விலைகள் குறைந்து வருகின்றன. எரிபொருள் மற்றும் மருந்துகளின் விலை குறையும். இந்த இரண்டு ஆண்டுகளில் நாடு நெருக்கடியிலிருந்து விடுபட்டுள்ளது. பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து குறுகிய காலத்தில் மீண்டு வந்த ஒரே நாடு நமது நாடுதான். நமது பொருளாதாரம் சரிந்தபோது பங்களாதேஷ் எங்களுக்கு கடன் கொடுத்தது. இன்று பங்களாதேஷத்துக்கு என்ன நடந்தது? போராட்டக்காரர்கள் பங்களாதேஷை அழித்துள்ளனர். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த நாடு மீண்டும் அந்த நிலைக்கு தள்ளப்பட வேண்டுமா? அந்த நிலைக்கு நாங்கள் வர தேவையில்லை. இந்த நாடு மீண்டும் பொறிக்குள் சிக்காமல் இருப்பதற்கு உணர்வுகளுக்கு அடிமையாகாமல் இந்த நாட்டை மீட்டெடுக்கும் வல்லமை படைத்த, சர்வதேச உறவுகளைக் கொண்ட, நாட்டின் ஜனாதிபதியாக அனுமதிக்கப்பட்டுள்ள அனுபவமிக்க தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை உருவாக்க நடவடிக்கை எடுப்போம்" என அவர் தெரிவித்தார்.

## நாட்டுக்கு ஜனாதிபதி ரணில் ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

போவதில்லை எனவும், அவர்கள் வழங்கியுள்ள வாக்குறுதிகள் நடைமுறைக்கு சாத்தியமற்றவை என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். சஜித் பிரேமதாச நெருக்கடியான காலத்தில் நாட்டையும் மக்களையும் பொறுப்பேற்கத் தவறியவர். அதே போன்று ஜே.வி.பியின் ஆரம்பமே திருட்டு, கொள்ளை, படுகொலை, வன்முறை, கப்பம் பெறுவதில் தான் ஆரம்பித்தது. இன்றும் அவர்கள் மாறவில்லை என்பது ஆர்ப்பாட்டக் காலத்தில் தெளிவாக தெரிந்ததாக அவர் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் தேர்தலில் போட்டியிட்டவர்களை படுகொலை செய்தமை, பொலிஸார் மற்றும் படையினரை படுகொலை செய்தமை, அரசாங்க பஸ்களுக்கு தீ வைத்தமை, வேறு கட்சிகளில் தேர்தலில் நின்றால் அவர்களுக்கு தண்டனை வழங்குகின்றமை, திருட்டுக்கள், கொள்ளைகள் என அவர்களின் ஆரம்பமே மிகவும் மோசமாக இருந்ததையும் அது இன்னும் அவர்களிடமிருந்து மாறவில்லை எனவும் அவர் தெரிவித்தார். 'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று பெல்மதுளை நகரில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அக் கூட்டத்தில் உரையாற்றும் போது இதனை தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில,மிக நெருக்கடியான நிலையில் காணப்பட்ட நாட்டை குறுகிய காலத்தில் பாதுகாத்து இயல்பு நிலைக்கு கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே. எதிர்காலத்திலும் அவருக்கு உதவி ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக சர்வதேச நாடுகள் காத்திருக்கின்றன. அந்த வகையில், எதிர்வரும் 05 வருடங்களுக்கு நாட்டை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வேலைத் திட்டங்களை முழுமையாக முன்னெடுப்பதற்கு அவரால் மட்டுமே முடியும்.

# அமைச்சரவை முடிவுகள்

**01. இலங்கையில் வணிக ரீதியான மீன்பிடித்தொழிலை ஊக்குவிப்பதற்கான மூலோபாயம்**

இலங்கையில் மீன்பிடித்தொழிலில் அதிக விளைவுகளுடன் கூடிய மீன்பிடி மற்றும் அதன் பேண்தகு நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக கடைப்பிடிக்கவேண்டிய மூலோபாயங்கள் பற்றித் தேடி ஆராய்ந்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மூலோபாயத்தை, இலங்கையின் மீன்பிடித் தொழில் தொடர்பான அரச மூலோபாய வேலைச்சட்டமாக ஏற்றுக்கொள்வதற்கும், முறைசார்ந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய, குறித்த மூலோபாயத்தை அமுல்படுத்தவும் ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை அரசு மற்றும் ஒஸ்ரியா அரசுக்கிடையில் இரட்டை வரிவிதிப்பை தடுத்தல் மற்றும் அரச நிதியை தவிர்த்தல் மற்றும் புறக்கணிப்பதை தவிர்ப்பதற்கான உடன்படிக்கை**

இலங்கை அரசு மற்றும் ஒஸ்றியா அரசுக்கிடையில் வருமானத்தின் அடிப்படையிலும் மற்றும் மூலதனத்தின் அடிப்படையிலுமான வரி தொடர்பான இரட்டை வரிவிதிப்பை தடுத்தல் மற்றும் அரச நிதியை தவிர்த்தல் மற்றும் புறக்கணிப்பதை தவிர்ப்பதற்கான உடன்படிக்கை வரைவாக்கம் செய்யப்பட்டு, இருநாட்டு வரி அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையின் பின்னர், அதிகாரிகள் மட்டத்தில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. குறித்த உடன்படிக்கைக்கு இணங்க, இலங்கை அண்மையில் மேற்கொண்ட இரட்டை வரிவிதிப்பு தடுப்பு உடன்படிக்கைக்கமைய வட்டி மற்றும் அரசிறைக்கான சராசரி நிதி அளவின் 10 வீதத்தை விஞ்சாத அளவில் வரி அறவிடப்படும். குறித்த உடன்படிக்கையில் அரச மட்டங்களில் கையொப்பமிடுவதற்கும், கையொப்பமிடப்பட்டுள்ள உடன்படிக்கை மற்றும் கூட்டுப்பத்திரத்தை 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. றொபோ தொழிநுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொடர்பாக 7,500 ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் வேலைத் திட்டம்**

தேசிய கல்விக் கொள்கை சட்டகத்தின் மூலம் டிஜிட்டல் நிலைமாற்றம் மிகவும் முக்கியமான கூறாக அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்காக செயற்கை நுண்ணறிவு மற்றும் புதிய தொழிநுட்பங்களை பயன்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புக்களை பெற்றுக் கொள்வதற்குஊக்குவிக்கப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 7500 ஆசிரியர்களை 3 கட்டங்களின் கீழ் (SCOT CAMPUS) நிறுவகத்தின் மூலம் பயிற்றுவிப்பதற்காக தொழிநுட்ப அமைச்சராக ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**04. வட்டியல்லாத மாணவர் கடன் திட்டத்தின் 8 ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

அரசுசாரா உயர் கல்வி நிறுவகங்களில் பட்டப்படிப்பை தொடர்வதற்காக 2017ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள வட்டியல்லாத மாணவர் கடன் திட்டத்தின் 8 ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் குறித்த கடன்திட்டத்தின் கீழ் அந்தந்த பாடநெறிகளுக்கான அரசுசாரா உயர் கல்வி நிறுவகங்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை திருத்தம் செய்வதற்கான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஒருவரின் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு 2023.04.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்காணும் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இலங்கையின் மலையகப் பெருந்தோட்ட சமூகத்திற்கான பட்டயம்**

மலையக பெருந்தோட்ட சமூகத்தை முழுமையாக நாட்டின் விரிவான சமூகப்; பொருளாதாரக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்வதற்கான அரசின் அர்ப்பணிப்பை வெற்றியடையச் செய்வதற்கு இயலச் செய்யும் வகையில் அரச முயற்சிகளை வழிநடாத்துவதற்கான அடிப்படை ஆவணமான மலையகப் பெருந்தோட்ட சமூகத்திற்கான பட்டயம் வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் மலையகப் பெருந்தோட்ட சமூகத்துக்கான பட்டயத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோசா கம்பனிக்கு சோயா போஞ்சி மற்றும் சோளம் விநியோகம்**

திரிபோசா தயாரிப்புக்கு வருடாந்தம் சோளம் மற்றும் சோயா போஞ்சி போன்றவற்றின் தேவை முறையே 12,000 மெட்றிக்தொன் மற்றும் 6,000 மெட்றிக்தொன்களாகும். தற்போது நிலவுகின்ற சோளம் மற்றும் சோயா போஞ்சி பற்றாக்குறையால் திரிபோசா தயாரிப்புச் செயன்முறைக்கான வருடாந்த விநியோகத்திற்கான தேவையை உள்நாட்டில் விநியோகித்துக் கொள்ள முடியாமையால், குறித்த தேவையை வெளிநாடுகளிலிருந்து விநியோகிக்க வேண்டியுள்ளது. ஒப்பந்தங்களை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி

சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் குழுவினருக்கு அதிவேக செய்மதித் தொழிநுட்பத்தின் கூடிய இணையத் தொலைத் தொடர்புகளை வழங்கல்**

விமானப் பயணிகளுக்கு விமானத்தில் Wi/Fi வசதிகள் மற்றும் கைத்தொலைபேசிகளில் GS சேவைகளைப் பயன்படுத்துவதற்கான இயலுமையை வழங்கி, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியால் இணைய வசதிகளுடன் கூடிய 13 விமானங்களில் விமானப் பணியாளர் குழுவொன்று சமகாலத்தில் இயங்கி வருகின்றது. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியின் A330 – 300 வகையைச் சார்ந்த 07 விமானங்களுக்கு ஏழு (07) வருடங்களுக்கு KaBand அதிவேக செய்மதித் தொழிநுட்ப இணைய வசதிகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை ViasatInc . இற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**08. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனிக்கான விமான எரிபொருள் விநியோகத்திற்கான ஒப்பந்தம் வழங்கல்**

ஃப்ரங்க்பேர்ட் (FRA), இன்ஜிஒன் (ICN) , மெல்பேர்ன் (MEL) மற்றும் சிட்னி (SYD) போன்ற விமான நிலையங்களில் விமான எரிபொருள் விநியோகத்திற்கு தற்போது வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தம் 2024.10.31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. அதனால், இரண்டு வருடங்களுக்கு குறித்த விமான நிலையங்களில் பொருத்தமான விநியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக விமான எரிபொருள் விநியோகிக்கின்ற 08 நிறுவனங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளன. அதற்கமைய, தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் விமான எரிபொருள் விநியோகிக்கின்ற ஒப்பந்தங்களைக் கீழ்வரும் வகையில் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**09. மெகாவாற்று 1 தொடக்கம் 5 வரையான இயலளவுடன் கூடிய மொத்த இயலளவு 165 மெகாவாற்றுக்களுடன் கூடிய AC நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் சூரிய மின்கலத்தொகுதி மின்னுற்பத்தி நிலையத்தை அமைத்தல்**

அம்பாறை, அநுராதபுரம், அத்துருகிரிய, பெலியத்த, தெனியாய, காலி, ஹபரண, ஹொரண, கொஸ்கம், குருநாகல், மாதம்பே, மஹியங்கன, மாஹோ, மாத்தறை, மத்துகம, பன்னல, பொலன்னறுவை, திருகோணமலை, வவுணதீவு மற்றும் வெயாங்கொடை போன்ற உபமின் நிலையங்களுக்களுக்கு 165 மெகாவாற்று கருத்திட்ட அபிவிருத்திக்காக போட்டித் தன்மையான முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன. குறித்த விதந்துரைகளுக்கமைய கீழ்க்காணும் விபரங்களுடன் கூடிய பதிலளிப்புக்களை முன்வைத்துள்ள விலைமனுதாரர்;களுக்கு குறித்த ஒப்பந்தங்களை வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. மீட்டெடுத்தல், புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கம் தொடர்பான சட்டமூலம்**

மீட்டெடுத்தல், புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கம் தொடர்பாகத் தேவையான சட்ட ஏற்பாடுகளை உள்வாங்கி புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக 2023.05.22 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் ஜனாதிபதி, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஐ.தே.கவின் பொரளை தேர்தல் அலுவலகம் திறந்து வைப்பு





**(ருஸைக் பாரூக்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொரளை தேர்தல் பிரசார அலுவலகம் 'இயலும் ஸ்ரீலங்கா' ஞாயிற்றுக்கிழமை (01) மாலை கொழும்பு பொரளை கோதமி புரவில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அல்பிரட் சம்பத் தலைமையில் நடைபெற்றது. ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க அலுவலகத்தை திறந்து வைத்தார். இதில் கொழும்பு முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்க, கோட்டே முன்னாள் மாநகர சபை உறுப்பினர் விஜேசிறி தாபரே, கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சி. பாரத கொத்தலாவெல, கொழும்பு மாவட்ட ஐ.தே.க அரசியல் முகாமையாளர் லசந்த குணவர்தன உள்ளிட்ட மாநகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றியதுடன், பெருந்தொகையான ஐ.தே.க ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

# வாகனத்தில் மோதி குட்டி யானை காயம்

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

அநுராதபுரம் புத்தளம் பிரதான வீதியில் கருவலகஸ்வெவ மீஒய அருகில் வாகனத்தில் மோதி 4 வயது யானைக்குட்டி ஒன்று படுகாயமடைந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்தது.இந்த யானைக்குட்டி யானைக்கூட்டத்துடன் இணைந்து வீதியை கடக்கும் போது குறித்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்தது. காயமடைந்த யானைக்குட்டி யின் நிலை கவலைக்கிடமாக உள்ளதுடன் தேவையான சிகிச்சைகளை வழங்கி வருவதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்தது.

# சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு

## ஐ.ம.ச அமைப்பாளர் இப்திகார் ஜெமீல்

**(பேருவளை விசேட நிருபர் )**



சஜித் பிரேமதாச ஜனாதிபதி பதவியேற்ற பின் இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு முன்னுரிமையளித்து அவர்களின் அபிலாஷைகள் நிறைவு செய்யப்படும் என பேருவளை ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் தெரிவித்தார்.

பேருவளை தொகுதி இளைஞர், யுவதிகளுடனான சந்திப்பு பேருவளை ஐக்கிய மக்கள் சக்தி பிரதான காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட அமைப்பாளர்களான திலக்கரத்ன தில்சான், எம்.எம்.எம்.அம்ஜாத் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவின் வெற்றி உறுதியாகும். இந் நாட்டு இளைஞர், யுவதிகள் இவரின் வெற்றிக்காக அணி திரள வேண்டும்.

பேருவளை தொகுதியின் மூன்று முக்கிய தொழில் துறைகளான உல்லாசப் பயணத் துறை, இரத்தினக் கல் மற்றும் கடற்றொழில் துறைகளை முன்னேற்றி இளைஞர் யுவதிகளுக்கு இதில் சந்தர்ப்பம் வழங்கி பேருவளைப் பகுதியில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இளைஞர் யுவதிகளின் பிரச்சினைகளை தீர்த்து அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்பது எமது தலைவர் சஜித் பிரேமதாசவின் நோக்கமாகும்.

இன்று தேசிய மக்கள் சக்தியினர் இளைஞர் யுவதிகளை ஏமாற்றி அவர்களது வாக்குகளைப் பெற முயல்கின்றனர். இவர்களின் வலையில் சிக்கி தமது வாக்குகளை வீணாக்கி விடக் கூடாது என்றும் அவர் மேலும் கூறினார்.




திருகோணமலை வளாகம்
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

**ஆங்கிலத்தில் டிப்ளோ கற்கைநெறிக்கு விண்ணப்பங்களை அழைத்தல்**

இலங்கை கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் ஆங்கிலத்தில் டிப்ளோமா கற்கைநெறியை பயிலுவதற்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தேவைப்படுத்தல்கள்:**

- க.பொ.த. (உயர்தர மட்டம்) பரீட்சையில் பெற்றதொரு சித்தி அல்லது நிகரான தகைமை அல்லது
- ஆகக் குறைந்தது 12 வருட பாடசாலைக் கல்விக்கு பின்னர் இலங்கை வாழ்தொழில் தகைமை கட்டமைப்பிற்கு நிகரான அடிப்படைக் கற்கைநெறியுடன் தகுதிகாண் பரீட்சையில் பெற்றதொரு சித்தி அல்லது
- ஏற்புடைய உயர் கல்வி நிறுவகத்தின் கல்விசார் அதிகாரத்தினால் வரையறுக்கப்பட்ட நேரொத்த அறிவாற்றல் இணைப்பு கற்கைநெறியில் ஆகக்குறைந்தது 30 திறமைச்சித்திகளுடன் தேசிய வாழ்தொழில் தகைமை 4 ஆம் மட்ட பூர்த்தி அல்லது தரஅங்கீகாரம் பெற்ற வேலை அனுபவம் அல்லது தரஅங்கீகாரம் பெற்ற முன்கல்வி ஆகியனவும் இலங்கை தகைமை கட்டமைப்பு 3 ஆம் மட்ட நிகரான தகைமையாக கருதப்படும், மற்றும்
- க.பொ.த. உ/த பரீட்சையில் பொது ஆங்கில மொழியில் “S” சித்தி அல்லது
- அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றினால் ஆங்கிலத்தில் பெற்ற தேசிய சான்றிதழ் சித்தியுடன் க.பொ.த. உ/த பரீட்சையில் பொது ஆங்கில மொழியில் “S” சித்தி அல்லது
- பல்கலைக்கழக பேரவை மற்றும் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறேதாவது தொழில்சார் அல்லது கல்விசார் தகைமை

இந்த கற்கைநெறியானது இலங்கை கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக தொடர்பாடல் மற்றும் வர்த்தக கற்கைநெறிகளின் வெளியக கற்கைநெறிகள் பீடத்தினால் நடத்தப்படும்.

| | |
|---|---|
| **விண்ணப்பத்தை மூடும் திகதி** | **: 2024 செப்டம்பர் 30** |
| **கால எல்லை** | **: 12 வாரங்கள்** |
| **வகுப்புக்கள்** | **: வார இறுதிகளில்** |
| **மேலதிக விபரங்களுக்கு** | **: http://www.cedec.esn.ac.lk/deng-tc என்ற இணையத்தை பார்வையிடவும்.** |
| **விசாரணைகள்** | **: 0775501638<br>026 222 3892** |

# மலையகத்தில் தொடரும் குளவிக் கொட்டு சம்பவங்கள்

## 6 பெண் தொழிலாளர்கள் பாதிப்பு

**மஸ்கெலியா தினகரன் நிருபர்**

மஸ்கெலியா நல்லதண்ணி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட லக்ஷபான தோட்டத்தில் நேற்று காலை தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான போதிய போக்குவரத்து வசதிகளின்றி தோட்ட நிர்வாகத்துக்கு சொந்தமான பாரவூர்தி மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் மஸ்கெலியா லக் ஷபான தோட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் தேயிலை கொழுந்து பறித்து கொண்டிருந்த வேளையில் தேயிலை செடியின் வேர் பகுதியில் கட்டியிருந்த குளவிக் கூடு கலைந்து கொட்டியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனால் ஆறு பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் இரண்டு பெண்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வெளியேறியதாகவும் நால்வர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதேவேளை நேற்றுமுன்தினமும் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாரவூர்தி தடம் புரண்டு விபத்து

**மஸ்கெலியா தினகரன் நிருபர்**

கடும் மழை காரணமாக பாரவூர்தி தடம் புரண்டு நீர் ஓடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி சிறுகாயங்களுடன் உயிர்தப்பியுள்ளார்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியிலுள்ள டெவோன் பகுதியில் நேற்று அதிகாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. சாரதி சிறுகாயங்களுடன் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாக லிந்துல பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்துவருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மலையக வீதிகள் வழுக்கும் நிலையில் காணப்படுவதால் தமது வாகனங்களை அவதானமாக செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவம் நேற்று முன்தினம் மாலை கொடியிறக்கத்துடன் நிறைவுக்கு வந்தது. மாலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து கொடியிறக்கம் நடைபெற்றது.

'சிதறடிக்க அல்ல சிறகடிக்க"

# செப் 7ஆம் திகதி ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜா தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜா எதிர்வரும் 7 ஆம் திகதி மடகொம்பரை தோட்டத்திலுள்ள தமது லயன் அறையில் வைத்து தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் செப் 9 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏனைய வேட்பாளர்களுடனான விவாத மேடையில் கலந்துகொண்டு அவர்களிடையே கொள்கை அறிக்கை பகிரப்பட்டு விவாதிக்கத் தயாராகவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் 10 ஆம் திகதி (மாலை 3 மணி) அரச ஊடக மையத்திலிருந்து நேரலையாக சகல ஊடகங்களின் ஊடாக நாட்டு மக்கள் அனைவருக்குமாக மூன்று மொழிகளிலும். எழுத்து வடிவத்திலும் உரையாகவும் தேர்தல் விஞ்ஞாபனத்தை வழங்கவுள்ளார்.

மூன்று மொழிகளிலும் ஊடகவியலாளர் எழுப்பும் கேள்விகளுக்கு பதில் வழங்கத் தயார் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

மலையக அரசியல் அரங்கமாகிய நாங்கள் வெல்வதற்காக அல்ல சொல்வதற்காக களம் காண்பவர்கள் என்னும் தொனிப்பொருளில் அவரது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

# தேசிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்





தேசிய மக்கள் சக்தி, தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி இடையில் கலந்துரையாடலொன்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர், கோப்பாய் தொகுதி அமைப்பாளர் தனீஸ், மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் சுரேன், யாழ் மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் ரொரிங்டன், மகளிர் அமைப்பு செயற்பாட்டாளர்களான ஜான்சி மற்றும் அபி ஆகியோர் கலந்துகொண்டனர். வடபகுதியை மையமாகக் கொண்டு செயற்படும் தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் ஆனந்தராஜா, ஊடகப் பேச்சாளர் அருளானந்தம், பொருளாளர் வசந்தகுமார் மற்றும் தேசிய ஜனநாயக மக்கள் முன்னியின் ஆலோசகர் கமலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் அநுரவுக்கு ஆதரவாக செயற்படுவது மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டு இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.

# தொல்பொருட்களுடன் மூவர் கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பெறுமதி வாய்ந்த தொல்பொருட்களுடன்மூவர்பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய ஹந்த பான்கொட பிரதேசத்தைச் சேர்ந்த இவர்கள் தொல்பொருட்களுடன் வான் ஒன்றில் பயணிக்கையில் பாதுக்கையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்த புராதன புத்தர் சிலை 1, நாணயங்கள், மண் பீங்கான் என்பன மீட்கப்பட்டுள்ளன.

# சமாதான நீதவானாக நியமனம்

கல்லளை, கதுருவல. பொலன்னறுவை எனும் முகவரியில் வசிக்கும் அஷ்ஷேஹ் முஹம்மது அஸாம் மஜீதி, முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வினால் அகில இலங்கை சமாதான நீதவானாக கடந்த ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டுள்ளார்.



கதுருவல மஜீதிய்யா அறபுக் கல்லூரியில் மௌலவி பட்டம் பெற்றவர்.

இவர் கல்லளை பொ/ அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், அப்துல் கரீம் மற்றும் குழந்தை உம்மா தம்பதிகளின் இளையமகனாவார். இவர் தனது மேற்படிப்பை PhD வரை ஈரானில் கல்வி கற்றவர்.

உளவியல், நடத்தை திறன் பயிற்சி, ரெயினிங் பெமிலி கவுன்சிலர், பெமிலி கவுன்சிலிங், ஆங்கிலம், அரபு, பாரசீகம், அக்குபன்ஜர், கப்பிங் திரப்பி, இஸ்லாமிக் மெடிசன் போன்ற பல்வேறு துறைகளில் டிப்ளோமா மற்றும் ஹையர் டிப்ளோமா கற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாடு முன்னேற வேண்டுமெனில் ஆளுமையுள்ள தலைவர் தேவை

## ஐ.தே.க இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார்

நாடும், நாட்டு மக்களும் முன்னேற வேண்டுமெனில் ஆளுமை மற்றும் அனுபவமுள்ள தலைவரொருவர் நாட்டை ஆள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். எமது நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறானதொரு தலைவராக இருப்பது எமது பாக்கியமாகும். எனவே, அரச ஊழியர்கள் தமது வாக்கை நாட்டின் நலன்கருதி பயன்படுத்துவார்கள் என நம்புகின்றோம் என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார். இது தொடர்பில் ஆனந்தகுமார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



“ வங்குரோத்தடைந்த நாடொன்று குறுகிய காலப்பகுதிக்குள் மீண்டெழுவதென்பது இலகுவான விடயமல்ல. அதிலும் குறிப்பாக தேர்தலொன்றை நடத்துவது சாதனைக்குரிய விடயமாகவே கருத வேண்டும். இவ்விரண்டு விடயங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்து காட்டியுள்ளமை அவருக்கான வெற்றியாகும்.

இலங்கையால் மீண்டெழ முடியாது எனக் கூறியவர்களெல்லாம் எப்படி ஈராண்டுக்குள் நாடு மீண்டது என்பது பற்றி ஆராயத்தொடங்கியுள்ளனர். இதிலிருந்து ஜனாதிபதி ரணிலின் அரசியல், பொருளாதாரப் பயணப்பாதை சரியென்பது உறுதியாகின்றது. பொருளாதார மீட்பு திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வும் 2025 முதல் அமுலுக்கு வரவுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனை நாம் நிச்சயம் வரவேற்கின்றோம். ஏனையோர்போல ஜனாதிபதி போலி வாக்குறுதிகளை வழங்கவில்லை. செய்யக்கூடிய விடயங்களையே தீர்வாக முன்வைத்துள்ளார்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமெனில் அதில் அரசாங்க ஊழியர்களின் பங்களிப்பும் அளப்பரியது. எனவே, நாட்டு நலன்கருதி அரச ஊழியர்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

அதேவேளை, எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி நாட்டு மக்களும் நாட்டுக்காக வாக்கை பயன்படுத்த வேண்டும். நாட்டை மீட்ட ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதை மறந்துவிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அநுராதபுரம் நகர மொஹிதீன் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு (03) வருகை தந்து துஆப் பிரார்த்தனையில் ஈடுபட்ட போது பிடித்த படம்.அருகில் ரிஷாட் பதியுத்தீன் எம்.பியும் காணப்படுகிறார்.
(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# அடைமழையால்; நீர்கொழும்பு வீதிகளில் போக்குவரத்து தடை

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை மாற்றம் காரணமாக நேற்று (3) அதிகாலை முதல் நீர்கொழும்பு, கொச்சிக்கடை, தங்கொட்டுவ மற்றும் நாத்தாண்டிய ஆகிய பிரதேசங்களில் பெய்த அடைமழையால் தோப்பதொட்ட முற்சந்தி, தழுவகொட்டுவ, கொச்சிக்கடை மற்றும் தழுபத ஆகிய பிரதேசங்களில் பாரியளவில் வாகனப் போக்குவரத்து தடைகள் ஏற்பட்டன. குறிப்பாக நீர்கொழும்பு சிலாபம் பிரதான வீதியிலேயே பலத்த வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் தமது நாளாந்த அலுவல்களுக்கு செல்லும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர் .

நீர்கொழும்பு சிலாபம் பிரதான வீதியின் தழுவகொட்டுவ பிரதேசத்தில் பிரதான வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இவற்றில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டது.

பிரதான வீதியின் இரு மருங்கிலும் மழை நீர் தேங்கி இருந்ததன் காரணமாக முச்சக்கர வண்டி சாரதிகள், துவிச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் மற்றும் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

தமிழ் மக்கள் பிளவு பட்டு நிற்காமல்

# ஒன்றிணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் வீ புத்திரசிகாமணி

**திருக்கோணமலையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டிலுள்ள அனைத்து தமிழ் மக்களும் பிளவு பட்டு நிற்காமல். ஒன்றிணைந்து இம்முறை ஜனாதிபதி தேர்தலில் அனுபவமும் திறமையும் மிக்க தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஆதரவளிக்க வேண்டியது அவசியம் என முன்னாள் நீதி இராஜாங்க அமைச்சர் வீ. புத்திரசிகாமணி தெரிவித்தார்.

மலையகப் பெருந்தோட்ட மக்களில் சிலர் வேறு நிலைப்பாட்டில் இருந்தாலும் நூற்றுக்கு 65 வீதமான மலையக மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு தயாராகவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களிக்காமல் விட்டுவிட்டதன் விளைவை நாம் ஒரு தடவை அனுபவித்திருக்கிறோம். அதனை மனதில் கொண்டு அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிலிணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.



‘இயலும் ஸ்ரீலங்கா’ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் திருகோணமலை நகரில் நடைபெற்றது. அமைச்சர்கள் மற்றும் பல முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இம்முறை தேர்தலில் போட்டியிடும் தலைவர்கள் வரி இல்லாமல் மக்களை வாழ வைப்பதாகவும் மின்சாரக் கட்டணத்தை அரைவாசியாக குறைப்பதாகவும் தெரிவித்து மேலும் பல்வேறு வாக்குறுதிகளை மக்கள் மத்தியில் வழங்கி வருகின்றனர்.இது நடக்கின்ற காரியம் அல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு எத்தகைய பொய்யான வாக்குறுதியையும் மக்களுக்கு வழங்கவில்லை என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமையல் எரிவாயு, எரிபொருள், குழந்தைகளுக்கான பால்மா கூட இல்லாத கடந்த இரண்டு வருடங்களுக்கு முந்தைய மிக நெருக்கடியான நிலையை மக்கள் மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்தில் மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை பொறுப்பேற்று தற்போதைய இயல்பு நிலைக்கு கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அதற்கான அனுபவமும் ஆளுமையும் அவருக்கு மாத்திரமே உள்ளது.

நாட்டைப் பொறுப்பேற்று முன்னேற்றக் கூடிய தலைவருக்கு அனுபவமும் அதற்கான ஆளுமையும் மிக முக்கியமானது. இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேறு எவருக்கும் அது கிடையாது. அத்தனை தகைமைகளும் உள்ள ஒரே தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என்பதால் எதிர்வரும் தேர்தலில் அவருக்கு முழுமையான ஆதரவளித்து நாட்டின் எதிர்காலத்தை வெற்றி பெறச் செய்ய அனைத்து மக்களும் உறுதி பூண வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள பறகஹதெனியவை பிறப்பிடமாக கொண்ட எம்.எஸ்.எம். நவாஸை கௌரவிக்கும் நிகழ்வு (30) வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையைத் தொடர்ந்து பறகஹதெனிய ஜாமிஉல் அன்வர் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. நிகழ்வில் ஊர் ஜமாஅத்தார்கள், வாலிபர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மலையக கல்வி மேம்பாட்டு அறக்கட்டளை ஏற்பாட்டில் திறன் வகுப்பறை திறப்பு விழா

மலையக கல்வி மேம்பாட்டு அறக்கட்டளை அனுசரணையில் நாவலப்பிட்டி இந்து மகளிர் கல்லூரியில் எஸ். பி. துரைசாமி ஞாபகார்த்த தொழில் நுட்ப திறன் வகுப்பறை திறந்து வைக்கும் வைபவம் அதிபர் திருமதி ஆர். வனஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆஸ்திரேலியா சிட்னி நீர்வள கூட்டுத்தாபனத்தின் திட்டமிடல் முகாமையாளர் சுந்தரராஜூ நடராஜா மற்றும் அவரது பாரியார் திருமதி செல்வி சகிதம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினர்களாக மலையக கல்வி மேம்பாட்டு அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் நடேசன் சுந்திரேசன் செயலாளர் எஸ். சிவஞானசுந்தரம், ந. செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மலையக கல்வி மேம்பாட்டு அறக்கட்டளையின் தலைவர் நடேசன் சுந்திரேசன் அவர்கள் மெய்நிகர் காணொளி ஊடாக உரையாற்றும் போது,

மறைந்த எஸ். பி துரைசாமி அவர்கள் நாவலப்பிட்டியைச் சேர்ந்தவர். சாதாரணமாக அவர் அடி மட்டத்தில் இருந்து உயர்ந்து கொழும்பில் இம்பீரியல் டெக்ஸ்டையில் என்ற கம்பனியையும் நடத்தி வந்தார். 1993இல் அவருடைய புதல்வி சிட்னியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். காலமானார் தந்தையின் நினைவாக திறன் வகுப்பறையைத் திறந்து வைத்து மாணவிகளின் பாவனைக்காக கையளித்துள்ளார். அவருக்கும் மற்றும் சுந்தரராஜூ அவர்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றிகள் பாராட்டுக்கள்.

இதுவரைக்கும் மலையகத்தில் மூன்று திறன் வகுப்பறைகளை நிர்மாணித்திருக்கின்றோம். பாரதி தமிழ் பாடசாலை, கண்டி வினேகானந்தா தமிழ் வித்தியாலயம், பன்விலை விக்ணேஸ்வரா T.M.V., வத்துகாமம் பாரதி தமிழ் பாடசாலை ஆகிய இடங்களிலும் இந்த திறன் வகுப்புகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இது எங்களுடைய நான்காவது திறன் வகுப்பாகும்.

நான் ஒக்டோபர் மாதம் இலங்கை வரும் போது மேலதிகமாக ஐந்து திறன் வகுப்புக்கள் திறக்கப்படவுள்ளன. இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது மார்ச் மாதம் 2023 ஆகும். பரீட்சார்த்தமாக நாங்கள் சிறிய சிறிய பணிகளை ஆரம்பித்து ஆகஸ்ட் மாதம் 23 முதல் வகுப்பறையினைத் திறந்தோம். அதனைத் தொடர்ந்து ஒரு வருட காலத்தில் பெரும் சாதனையாக 15 இலட்ச ரூபா செலவில் நான்கு திறன் வகுப்பறைகளையும் ரூ. 10 இட்சம் செலவில் ஒரு கணினி பயிற்சி மையத்தையும் இதுவரை திறந்து வைத்துள்ளோம்.



அத்துடன் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறுபட்ட தலைமைத்துவ, முகாமைத்துவ பயிற்சி நெறிகள், மென்திறனை வளர்க்கக் கூடிய பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டி என மாணவர்களுடைய தன்னம்பிக்கையை வளர்க்கக் கூடிய விடயங்கள் மற்றும் கல்வியின் முழுமை பெற வேண்டுமாயின் இந்து சமய அறநெறிகளை வளர்க்கக் கூடிய வகையிலான பல்வேறு வகையிலான ஊக்குவிப்பு முயற்சிகளையும் தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றோம்.



எங்களது நோக்கம் அரசாங்கம் பாடசாலைகளுக்கு நிறைய உதவிகளைச் செய்தாலும் எல்லா உதவிகளையும் செய்ய முடியாது. ஆனால் பல ஆண்டுகள் யோசித்து எங்களால் பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவிக் கரங்களை நீட்டலாம் என்ற வகையில் கல்வி தொடர்பான பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் இங்கு ஒக்டோபர் மாதத்தில் திருவள்ளுவர் சிலை ஒன்றையும் நிர்மாணிக்கவுள்ளோம். டிஜிட்டல் இணைய வகுப்பறை கற்கை நிலையத்தில் 'தகவல் தொழில் நுட்பம்' என்ற பாடம் மாணவர் மாணவிகளுக்குப் போதிக்கப்படுகின்றன. மாணவர்கள் ஆறாம் ஆண்டில் இருந்தே இதற்குத் தயாராக படிப்படியாகக் கற்றுச் செல்ல வேண்டும்.

எண்மான திறன் வகுப்பறை ஒன்றினை நூற்றாண்டு விழா காணும் இந்தப் பாடசாலைக்கு முதல் தடவையாக வழங்கப்படுகிறது எனும் போது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. மலையகத்திற்கு இன்னும் எவ்வளவோ வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதைக் இது எடுத்துக் காட்டுகிறது.

மேலும் கல்விக்கண் என்ற புலமைப் பரிசில் திட்டத்தை நாங்கள் விரைவில் அறிமுகப்படுத்துகின்றோம். இதற்கு திருச்சி, தமிழ்நாடு, சிறந்த சில கல்லூரிகள்; இந்த வருடம் கணினி தொழில் நுட்பத் துறையில் கல்வி கற்பதற்காக 5 மாணவர்களுக்கும் டீ.யு. தமிழ் கற்பதற்கு 10 மாணவர்களுக்கும் எங்களுக்கு விண்ணப்பித்துள்ளார்கள். இப்பாடசாலையில் A/L கல்வியினை படித்த மாணவிகள் விண்ணப்பம் செய்யலாம்.

மேலும் சுந்தரராஜூ குடும்பத்தினர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதிபர்ஆர். வனஜா உரையாற்றும் போது,

இந்த நாள் கதிரேசன் இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நன்நாள். வளர்ந்து வருகின்ற தொழில் நுட்ப உலகிற்கு தயாராக வேண்டிய நமது குழந்தைகள் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கற்க வேண்டிய சந்தர்ப்பத்தில் நாங்கள் அதற்கான வாய்ப்புக்களை மிகக் குறைந்தளவிலே பெற்றிருந்தோம். அந்த வளங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மிக நீண்ட நாட்களாகவே காத்திருந்தோம். ஆனாலும் எங்களுக்கு அந்த உதவிகள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் தெய்வாதீனமாக மலையக மேம்பாட்டு அறக்கட்டளை குழுவினருடன் இணைந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிட்டியது.

இந்த அமைப்பின் செயலாளர் கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ். சிவஞானசுந்தரம் எனக்கு அறியத் தந்தார். இந்த அமைப்பின் பல செயற்பாடுகளை எனக்கு அறியத் தந்தார்.



அந்த தொடர்பினை வைத்துக் கொண்டு எனது பாடசாலைக்கும் திறன் வகுப்பறை கற்கை நிலையத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விண்ணப்பத்தை முன் வைத்தேன். அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டதற்கு இணங்க எனது பாடசாலைக்கும் திறன் வகுப்பறை தருவதாக வாக்களித்த எஸ். பி. துரைசாமிப் பிள்ளையின் குடும்பத்தார்களின் பிள்ளைகளுக்கு நன்றியோடு வணங்குகின்றேன்.

எங்களது ஐயாவின் ஞாபகார்த்தமாக இந்த பாடசாலையின் ஒரு திறன் வகுப்பறையினை அமைத்துத் தருகிறோம் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் அவுஸ்திரேலியாவில் சிட்னியில் ஒரு பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கின்றவர்கள். அவர்கள் இந்த இடத்தில் நேரத்தை ஒதுக்கி வந்து கலந்து கொள்வது சிரமமான காரியம். இந்தச் சந்தர்ப்பத்தில் இதனைத் திறந்து வைப்பதற்காக கலந்து கொண்டமை அவர்களுடைய பெருந் தன்மையைக் குறிக்கின்றது.

துரைசாமி ஐயா அவர்கள் நாவலப்பிட்டியில் முருகன் ஸ்டோர் என்ற நிறுவனத்தை நடத்தி வந்து 1983 இல் ஏற்பட்ட ஜுலைக் கலவரத்தின் காரணமாக இந்த நாவலப்பிட்டி நகரை விட்டு செல்ல வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டது. அப்பொழுது அவர் இடம்பெயர்ந்து இந்தியாவுக்கு சென்று அங்கு பல தொழில்களைச் செய்தவர். அவர் குழந்தைகளை எவ்வாறு எந்தளவு அழகாக சிறப்பாக வளர்த்துள்ளார் என்று எண்ணும் போது அவருடைய பெருமை இந்த இடத்திலே தோன்றுகின்றது. இப்பாடசாலை பற்றி துரைசாமி சகோதரிகள் மூவரும் நேரில்வந்து மிக மகிழ்ச்சியாக விசாரித்தார்கள். அவர்கள் பிள்ளைகள் இங்கு வந்திருக்கிறார்கள். அந்தப் பிள்ளைகள் மருத்துவர்களாகவும் நல்ல வேலைகளில் சிறப்பாக வளர்த்திருக்கிறார்கள் இன்று திறன் வகுப்பறைக்கு தேவையானவைகளையும் வழங்கியுள்ளார்கள்.





பொன்னான நேரத்தை ஒதுக்கி இங்கு வந்து இந்த நிகழ்வை சிறப்பித்து இருப்பது மிகவும் மகிழ்ச்சி தரும் விடயமாகும். துரைசாமி ஐயா அவரது பெயர் இந்த பாடசாலையின் ஓர் இடத்தில் பொறிக்கப்படுவதையிட்டு நான் மிகப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். நல்ல குழந்தைகளை வளர்த்துத் தந்துள்ளார்கள். தங்களுக்கு பயன் கிடைக்க வேண்டும் என்பதற்காக அல்லாமல் மற்றவர்களுக்காக செய்யும் பணி மகத்தானதாகும்.



எமது பாடசாலை கடந்த தமிழ் மொழி தினப் போட்டியில் 25 நிகழ்வுகளில் 19 போட்டிகளில் பிள்ளைகள் பங்கேற்றனர். அதில் 14 முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார் என்பதை பெருமையுடன் அறியத் தருகின்றேன். மாகாண மட்டத்தில் பங்குபற்றத் தயாராக இருக்கின்றோம். சமூக விஞ்ஞானப் போட்டியில் கம்பளை வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு மாணவி என்பதையும் அன்புடன் அறியத் தருகின்றோம். ஓட்டப் போட்டியிலும் ஒரு மாணவி தேசிய மட்டத்தில் பங்கேற்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார். காராட்டிப் போட்டியிலும் தேசிய மட்டப் போட்டிக்கு மாணவி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் பாதுகாப்பான ஒரு பாடசாலையினை வழி நடாத்தி செல்லுகின்றோம் என்ற மதிப்புச் சான்றிதழைத் தந்துள்ளார்கள்.

பாடசாலையில் ஆசிரியர் இல்லாத நேரத்தில் பிள்ளைகள் படிப்பதற்கான ஒரு செயற்பாட்டை மலையக கல்வி மேம்பாட்டு அறைக்கட்டளை செய்து வருகின்றது. பாடசாலையில் ஒரு கல்வி மாற்றத்தைக் கொணடு தந்தமைக்காக மீண்டும் மீண்டும் பாடசாலை சமூகம் அவர்களுக்கான மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டி விவேகானாந்த தமிழ் மகா வித்தியால அதிபர் மலையக கல்வி மேம்பாட்டு அறக்கட்டளையின் செயலாளர் திரு எஸ். சிவஞானசுந்திரம் உரையாற்றும் போது,

உலகளவில் நாங்கள் செயற்கை நுண்ணறிவு பற்றிப் பேசிக் கொண்டு இருக்கின்றோம். ஆனால் எங்களுடைய இலங்கைக் கல்வி கரும்பலகையிலும் வெண்கட்டியால் கற்றல் கற்பித்தல் என்ற வகையில்தான் நாங்கள் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றோம். உலகம் வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. 72 மணித்தியாலத்திலே எமது தொழில் நுட்ப அறிவு மாறிக் கொண்டு வருகிறது. ஆனால் இன்றைக்கு உள்ள அறிவை இன்னும் மூன்று நாளைக்குப் பின் பயன்படுத்த முடியாத கால கட்டத்தில் அறிவு வளர்ச்சி பெறுகின்ற பிரவாகம் எடுத்து ஓடுகின்ற இந்த கால கட்டத்தில் நாங்கள் மிக வேகமாக முன்னேறிச் செல்ல வேண்டிய ஒரு முக்கியமான கடப்பாட்டிலே சமூகம் இருந்து கொண்டு இருக்கின்றது.

இந்தப் பாடசாலைக்கு நாங்கள் வழங்கும் நவீன தொழில் நுட்ப சாதனைத்தை பெரும் கொடையாகவே கருகிறோம். நூற்றாண்டு விழாக் கண்டுள்ள இந்தப் பாடசாலைக்கு மிகச் சிறந்த சாதனம் எதிர்கால இலங்கைக்காக ஏ. ஐ. தொழில் நுட்பத்துடன் இணைக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ள சுந்தரராஜூ அவரது ஏக குடும்பத்தினர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக உதவிகளைச் செய்யும் போது எந்தப் பாடசாலைகளுக்கு இவ்வாறான உதவிகளைச் செய்யலாம் என்று தேடிப்பார்த்த சமயத்தில் அவுஸ்திரேலியாவில் இருந்து இப்பாடசாலையின் தகவல்களை அனுப்பி வைக்குமாறு கூறினார்கள். ஆகவே இந்தப் பாடசாலையை தேடிப் பார்த்த போது ஆசிரியர் அதிபர் கல்வி அதிகாரிகளிடம் கதைத்த போது இந்தப் பாடசாலை சிறந்து இயங்குவதாகவும். கொடுக்கப்பட்ட சாதனம் சிறப்பாகப் பயன்படுத்தக் கூடிய வல்லமையுள்ள அதிபர் இருக்கிறார் என்று கேள்வியுற்றேன்.

உண்மையில் இங்கு வந்த போது சுற்றுச் சூழல் மிகவும் சுத்தமாகவும் மாணவிகள் மிக நேர்த்தியாகவும் மாணவிகள் மிக அமைதியாக இருப்பதைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

மலையகக் கல்வி மேம்பாட்டு அறக்கட்டளை கிட்டதட்ட ஒரு வருடமாக இயங்கி வருகின்றது. இந்த ஒரு வருடத்தில் நான்கு திறன் வகுப்பறையினை அமைத்து இருக்கின்றோம். குறிப்பாக 21 ஆம் நூற்றாண்டில் கல்வியைக் கடந்து விட்ட நிலையில் 24 வருடங்கள் ஆகி விட்டன. உங்களிடம் ஆசிரியர்கள் வெளிப்படுத்த வேண்டிய 4 திறன்கள் இருக்கின்றன. இவற்றை ஏற்படுத்துவது என்றால் நல்ல நவீன தொழில் நுட்ப சாதனங்கள் எமக்கு என்றும் அவசியம். மலையகக் கல்வி மேம்பாட்டு அறக்கட்டளையின் அனுசரணையில் சுந்தரராஜூ அவர்களின் பெரும் பங்களிப்போடு உங்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. அதில் நீங்கள் கேள்விகளை கேட்டால் அடுத்த கணம் அதற்கான விடைகள் கிடைக்கும். தகவல்களை தேடிக் கொள்ளலாம். உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பென்ட்ரை ஊடாக நீங்கள் ஆசிரியர் இல்லாத சந்தர்ப்பங்களிலும் படிக்கலாம். உங்களுக்கு விருப்பமான பாடங்களைப் படிக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எண்ணிய எழுத்தறிவு என்று சொல்வார்கள். எண்ணிய எழுத்தறிவு உலகத்திலே மிக வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றோம். ஆகவே எண்ணிய எழுத்தறிவை போதிக்கக் கூடிய வாய்ப்பு இந்த தொழில் நுட்பத்தின் ஊடாக உங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

எமது அறக்கட்டளையின் நோக்கம் அறம் சார் கல்வியை வழங்குவதுதான் நாங்கள் சுமார் 30க்கும் மேற்பட்ட அறம் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தியிருக்கின்றோம். குறிப்பாக சுந்திரேசன் நடேசன் ஐயா இந்திய ஸ்ரீமான் நாராயன் அறக்கட்டளை ஆன்மீக நிறுவனத்துடன் சேர்ந்து பிள்ளைகளுக்கு உணவு வழங்களுடன் இரண்டு நாள் தொடர்ச்சியான சனாதன தர்ம, ஆன்மீக முகாம்கள், கருத்தரங்குகள் நடத்தியுள்ளோம். 10 மாணவர்களுக்கு இந்தியாவில் கல்வி கற்பதற்கு புலமைப் பரிசில் ஒன்றை வழங்க இருக்கிறோம். கணித விஞ்ஞானத் துறையில் தகவல் தொழில் நுட்பத் துறை மிக முதன்மையானது. கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் போன்ற முக்கியமான பாடங்களை கருத்திற் கொண்டு தொழில் நுட்ப ரீதியான முறையில் பாடங்களை நடத்திக் கொண்டு செல்கிறோம். அதிலும் உங்களுக்கான பலனைப் பெற்றுக் கொள்ளலாம். ஐந்தாம் ஆண்டு தரப் புலமைப் பரிசுக்கான பயிற்சி வகுப்புகளையும் மாதிரிப் பரீட்சைகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறோம் ஆது மட்டுமல்ல அ;ண்மைக்காலமாக க. பொ. த சாதாரண தர மாணவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகின்றோம் என்று தொண்டு பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.



# கிழக்கின் குரல்



## நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணிலுக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும்

(ஒலுவில் விசேட நிருபர்)

நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸரப் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து பொத்துவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸரப் தொடர்ந்து உரையாற்றுகையில்,



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார பின்னடைவினால் பாதிக்கப்பட்டிருந்த நாட்டை மீட்டெடுத்து குறுகிய காலத்துக்குள் வளமான நாடாக மாற்றியமைத்துள்ளார்.

நாட்டுக்காக அரும்பணியாற்றி வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் நன்றி விசுவாசமாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது பிரதேசத்தின் அபிவிருத்திகளுக்கு கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். இந்நிதி மூலம் எமது பிராந்தியத்தில் பின் தங்கிய பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்து இருளில் மூழ்கி இருந்த போது யாரும் முன்வரவில்லை. நாடும், சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை மீட்டெடுத்து நாட்டை அபிவிருத்தி பாதைக்கு மீள கட்டியெழுப்பியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## வாக்காளர் அட்டை விநியோகம்

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு வாக்காளர் அட்டை விநியோகம் செய்யும் பணிகள் நேற்று முதல் கல்முனை தலைமை தபால் கந்தோரில் இருந்து ஆரம்பமாகியது. பெரிய நீலாவணை, மருதமுனை, நற்பிட்டிமுனை, கல்முனை, சாய்ந்தமருது பகுதிகளிலும் தபால் சேவகர்கள் இப்பணியில் களமிறங்கியுள்ளனர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாது வாக்காளர் அட்டை விநியோகிப்பதையும் காணமுடிந்தது.

வீட்டு உரிமையாளர் வாக்காளர் அட்டையை பெற்றுக்கொண்டதற்கான ஒப்பந்தத்தையும் தபால் சேவகர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

## குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு



(கந்தளாய் தினகரன் நிருபர்)

நாடளாவியரீதியில் இடம்பெறவுள்ள குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு செயற்றிட்டத்திற்கு அமைவாக, கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையில் நேற்றுமுன்தினம் நடுத்தீவு சமூக சேவைகள் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது எம்.சாலிஹின் வளவாளராக கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களத்தின் உத்தியோகத்தர், மாவட்ட செயலகத்தின் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் பணிப்பாளர், கிண்ணியா பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர், குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்புக்காக கணக்கீட்டு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டம்



(மணல்சேனை நிருபர்)

அறிவுச்சுடர் சிறுவர் வளர் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியில் இடர்படும் மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் அதிபர் க.தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதியாக அறிவுச்சுடர் சிறுவர் வளர் கல்வி நிலையத்தின் பொறுப்பாளர் த.பாணுதேவன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## விபுலானந்த மணி மண்டபத்தில் களைகட்டிய கர்நாடக இசைக்கச்சேரி

( காரைதீவு குறூப் நிருபர் சகா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி நடத்திய கர்நாடக இசைக் கச்சேரி அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தியது .

முன்னதாக கலைஞர்கள் சுவாமி விபுலானந்த அடிகளாரின் இல்லத்தில் விசேட பூஜை செய்து அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக இசைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீ விக்கிரமகீர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தார் .



இந்தியாவில் இசைத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண் (வாய்ப்பாட்டு), சுதாகரன் கோவிசரண் (மிருதங்கம்), பிரிசில்லா ஜோர்ஜ் (வயலின்) ஆகியோர் இந்த கர்நாடக இசைக்கச்சேரியை ஒன்றரை மணி நேரம் முதல் தடவையாக சிறப்பாக நடத்தினர்.

நிகழ்வில் விபுலானந்த பணி மன்ற தலைவர் சோ.சுரநுதன் தலைமையுரையாற்ற செயலாளர் கு.ஜெயராஜி அறிமுக உரையாற்றினார்.

இசைக் கச்சேரி நடாத்திய மூன்று கலைஞர்களுக்கும் விபுலானந்த பணி மன்றத்தினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

## உழவு இயந்திரம் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை ஆலையடிச்சந்தியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உழவு இயந்திரம் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

உமா மில் வீதி வந்தாறுமூலையை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கனேசநாதன் ரகுநாதன் (36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சந்திவெளியிலுள்ள தனது பெற்றோரின் வீட்டுக்கு மாபிள் வாங்கி வர மோட்டார் சைக்கிளில் ஏறாவூருக்கு சென்று ,மீண்டும் சந்திவெளி நோக்கி சென்றுக் கொண்டிருக்கும் போது பின்னால் வந்த உழவு இயந்திரம் மோதியுள்ளது. இவர் வெளிக்காயங்கள் எதுவுமின்றி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய உழவு இயந்திரத்தின் உரிமையாளர் தப்பிச்சென்றிருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி எம் எஸ்.எம்.நஸீர், விசாரணைகளை மேற்கொண்டு, பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

பிரேத பரிசோதனையின் பின்பு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார். மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'எமது உரிமை எமது கையில்' சாய்ந்தமருதில் விசேட கலந்துரையாடல்



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சாய்ந்தமருது ரோட் ரூ ரைட் (Road To Right) அமைப்பினருடன் இணைந்து பிரண்ட்ஸ் சேகிள் (Friends Circle) அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த 'எமது உரிமை எமது கையில் "என்னும் தொனிப்பொருளில் மாற்றுத் திறனாளிகளுடனான கலந்துரையாடலொன்று சாய்ந்தமருது சமூக சேவைகள் திணைக்கள பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரண்ட்ஸ் சேகிள் (Friends circle) அமைப்பின் ஆலோசகரும்,முன்னாள் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அதிபருமான ஏ.பீர்முஹம்மட் பிரதான வளவாளராக கலந்து கொண்டார்.

## சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட மாநாடு

(ஏறாவூர் நிருபர்)

சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மாநாடு நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.



சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சிறி மேகநாதன் தலைமையில் சர்வமத ஆசியுடன் இம்மாநாடு ஆரம்பமானது.

மனித உரிமைகள் தொடர்பில் சமூகத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து இம்மாநாட்டில் சமூகத்தலைவர்கள் கருத்துத்தெரிவித்தனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு சட்டரீதியிலான வழிகாட்டல்கள் மற்றும் தீர்வுகள் வழங்குவதற்கு ஏதுவாகவே மாவட்டங்கள் தோறும் அலுவலகங்கள் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் செயற்பாடுகளுக்கு பல்வேறு வழிகளில் ஒத்தாசைகளையும் ஆலோசனைகளையும் வழங்கிவரும் கிராம சேவையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், கல்விமான்கள், மதத்தலைவர்கள் உள்ளிட்ட 35 பேர் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் ஊடக செயற்பாடுகள் மூலமாக ஒத்துழைப்பை நல்கிவரும் பிராந்திய சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏறாவூர் எம்.ஜிஏ. நாஸர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐஸ் போதை பொருளுடன் இருவர் கைது

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் ஒன்றரை கிலோ கேரளா கஞ்சா மற்றும் 25000 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் நேற்றுமுன்தினம் மாலை (2) மேற்கொண்ட திடீர் தேடுதலின் போது இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் தெரிவித்துள்ளனர். 32 மற்றும் 38 வயதுகளைச் சேர்ந்த இரு நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒருவரிடமிருந்து ஒன்றரை கிலோ கேரளா கஞ்சாவும் மற்றவரிடமிருந்து 25,000 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீண்ட நாட்களாக இப்பிரதேசத்தில் கொழும்பிலிருந்து போதைப்பொருட்களை எடுத்து விற்பனை செய்து வந்த போதைப்பொருள் வர்த்தகர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேகநபர்களையும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களையும் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## சேனைக்குடியிருப்பு ஆரம்ப பராமரிப்பு வைத்தியசாலை குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கை

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

கல்முனை மேற்கு சேனைக்குடியிருப்பு ஆரம்ப பராமரிப்பு வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் 15 ஆயிரம் மக்கள் வசிப்பதாகக் குறிப்பிடும் பொதுமக்கள் பல வருடங்களுக்கு முன் மர்ஹூம் மன்சூரினால் கட்டப்பட்ட வைத்தியசாலை கட்டடத்திலேயே இயங்குவதையும் சுட்டிக்காட்டுகின்றனர். அவசரத் தேவையாக தாதியொரு வரும் இரவுக் காவலாளியும் நியமிக்கப்பட வேண்டுமெனவும் மக்கள் தெரிவித்தனர்.

கல்முனை ஆதார வைத்தியசாலை அண்மையில் காணப்படினும் அதிகளவான பாமர மக்கள் ஏழை மக்கள் அவசரத் தேவைகளுக்கு இவ்வைத்தியசாலைக்கே வருகை தருகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குறைபோக்க முன்வர வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுக்கிடையே கலந்துரையாடல்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச அவர்களை ஆதரித்து சாய்ந்தமருது 21 ஆம் வட்டாரத்துக்கான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் காரியாலயம் திறப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.சாய்ந்தமருது 21 ஆம் வட்டார தலைவரும், முன்னாள் கல்முனை மாநகர சபை வேட்பாளருமான எம்.எம்.எம்.பாமி தலைமையில் அவருடைய இல்லத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழு செயலாளர் ஏ.ஸி.சமால்தீன், சாய்ந்தமருது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர், அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், 21ம் வட்டாரத்தில் உள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனை பொதுநூலகத்தை பார்வையிட்ட மாணவர்கள்

(சாய்ந்தமருது விசேட நிருபர்)



கல்முனை கிரீன் பீல்ட் றோயல் கல்லூரியின் தரம்03 மாணவர்கள் நேற்று (03) கல்முனை மாநகர பொது நூலகத்திற்கு விஜயம் செய்து, நூலக செயற்பாடுகளை பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் மாணவர்கள் வரவேற்கப்பட்டு, நூலகத்தின் சிறப்பம்சங்கள், பயன்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்நூலகத்தில் சிறுவர்களுக்கென பிரத்தியேகமாக சிறுவர் பகுதி அமைக்கப்பட்டு, சிறுவர்களுக்கான அறிவுசார் சஞ்சிகைகள், கதைப் புத்தகங்கள், கவிதை மற்றும் பாடல் நூல்கள், கல்விசார் நூல்கள் அனைத்தும் வைக்கப்பட்டிருப்பதாகவும் மாணவர்கள் இங்கு வந்து இவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் எனவும் நூலகர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். வகுப்பாசிரியர் ரி.எம். பிர்னாஸின் நெறிப்படுத்தலில் மாணவர்கள் இங்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

# சஜித் பிரேமதாசவை தமிழரசு கட்சி ஆதரிப்பது அதன் அத்திவாரத்திற்கே வேட்டு வைக்கும் செயல்

## முன்னாள் எம்.பி என். சிறிகாந்தா

யாழ்.விசேட நிருபர்

ஒற்றையாட்சியை முன்வைத்துள்ள சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்குமாறு தமிழரசு கட்சி கோரியுள்ளமையானது, அதன் அத்திவாரத்திற்கே வேட்டு வைக்கும் செயல் என தமிழ் தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் எம்.பியுமான மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழினத்தின் சுதந்திரத்தையும், சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற கோரிக்கையுடன் தமிழ் தேசிய கட்டமைப்பாக நாம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநேந்திரனை களமிறக்கியுள்ளோம்.



தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுர குமார திஸநாயக்க மற்றும் நாமல் ராஜபக் ஷ ஆகிய நால்வரும் ஒற்றையாட்சி சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு அதன் வழி நடப்பவர்கள்.

சஜித் பிரேமதாச ஒற்றையாட்சிக்கு வெளியே சென்று தீர்வு காணுவதாக மூச்சு கூட விடவில்லை. 13ஆம் திருத்தத்தை பற்றி பேசி இருக்கிறார். புதிய அரசியல் யாப்பை ஏற்படுத்தும் வரையில் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக கூறியுள்ளார்.

ஆனால் இணைப்பாட்சி பற்றியோ, ஒற்றையாட்சி பற்றியோ எங்கேயும் குறிப்பிடவில்லை.

இந்நிலையில் தான் தமிழரசு கட்சியினர், அவசரமாக கூடி சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிப்போம் என கூறியுள்ளனர்.

இதுவரை காலமும் ஒற்றையாட்சிக்குள் இருந்து எம்மை விடுவிக்க வேண்டும் என நாம் தொடர்ந்து அரசியல் ரீதியாக போராடி வருகின்றோம், ஒற்றையாட்சியின் வழி நடக்கும் சஜித் பிரேமதாசாவை ஆதரித்துள்ளார்கள். இவர்களின் நோக்கம் என்ன ?

தந்தை செல்வநாயகம் 1949ஆம் ஆண்டில் எந்த இணைப்பாட்சியை தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைத்து தமிழரசு கட்சியை ஏற்படுத்தினாரோ அதற்கு எதிராக ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களை திருப்பும் முகமாகவே தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்க கோரியுள்ளனர்.

ஆகவே மக்கள் தமிழரசு கட்சியின் நோக்கத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியராகப் பதவியுயர்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

கலைப்பீடத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை கடந்த சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. ஸ்ரீ கணேசனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் அன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. ஸ்ரீ. கணேசன் ஆங்கில மொழி கற்பித்தலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

# வடக்கின் உதயம்

## யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை



யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்கான நீர் வசதிகள், மின்சாரம், காணி அபிவிருத்தி மற்றும் சுற்றுலா அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்,உதவி மாவட்ட செயலாளர், தெல்லிப்பளை பிரதேச செயலாளர், விமானப் படை அதிகாரிகள், *Airport & Aviation servies pvt( Ltd)* நிறுவன உதவி முகாமையாளர், விமான நிலைய செயற்பாட்டு முகாமையாளர், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பின் உதவிப் பணிப்பாளர், தொழிற்துறைத் திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம், சந்தைப்படுத்தல் பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# தோலில் உணர்வு குறைவான தழும்புகள் தொழுநோய்க்கான அறிகுறியாக இருக்கலாம்

## மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எச்சரிக்கை

சாவகச்சேரி விசேட நிருபர்

தோலில் ஏற்படும் உணர்வு குறைவான தழும்புகள் தொழுநோய்க்கான அறிகுறியாக இருக்கலாம் என பூநகரிப் பிரதேச மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

பூநகரி வலைப்பாடு கிராமத்தில் அண்மையில் இடம்பெற்ற பொது மக்களுக்கான தோல்நோய் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தோலில் ஏற்படுகின்ற உணர்வு குறைவான அல்லது உணர்வற்ற தழும்புகள், தடித்த நரம்புகள் என்பன தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகளாகக் கூட இருக்கலாம். எனவே எமது தோலை நாமே பரிசோதித்து சந்தேகம் ஏற்படும் போது வைத்திய ஆலோசனை பெறுவது தொழுநோயை முற்றாகக் குணப்படுத்த உதவும்.

தோலில் ஏற்படும் இவ்வாறான தழும்புகள் எல்லைகளுடையதாகவும், வெளிறிய அல்லது சிவந்து தடித்தவையாகவும் காணப்படுவதோடு உணர்வு குறைந்து செல்பவையாகவும் இருக்கும். அப்பகுதியில் உரோமங்களும் வளர்ந்திருக்காது.

மைக்கோபக்ரீரியம் லெப்ரே எனும் பக்ரீரியாவால் ஏற்படும் இந்த தொழுநோய் தோல் நரம்புத் தொகுதியைப் பாதிக்கிறது. உரிய காலத்தில் சிகிச்சை பெறாவிடின் நிரந்தர அங்க செயலிழப்பை எதிர்கொள்ள நேரிடும்.

இந்த பக்ரீரியாவானது தொழுநோயுடைய ஒருவரின் சுவாசம் மற்றும் வாயிலிருந்து வெளியேறும் சிறுதுளிகளூடாக சுகதேகியின் சுவாசத்தொகுதியை அடைந்து பரவுகிறது. தொழுநோயுடைய ஒருவருடன் தொடர்ச்சியாக ஒன்றாக வாழ்வது போன்ற நெருங்கிய தொடர்புடையவர்களுக்கு பரவக்கூடிய வாய்ப்பு அதிகம்.

பொதுவாக 95% சதவீதமானவர்களுக்கு இந்தநோய்க்கிருமி தொற்றினாலும் நோய் ஏற்படுவதில்லை. இதில் ஐந்து வயது முதல் 15 வயது வரையான சிறுவர்களுக்கும் முப்பது வயதுக்கு மேற்பட்ட வளர்ந்தோருக்கும் நோய் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

நோயாளியாக இனங்காணப்பட்டவர் மருத்துவ சிகிச்சையை ஆரம்பித்தவுடனேயே அவரிலிருந்து நோய் பரவுவது தடைப்பட்டுவிடும்.

எனினும் நோயாளி தொடர்ந்து நோயின் தன்மையைப் பொறுத்து ஆறுமாதம் முதல் ஒருவருடம் வரை சிகிச்சையைப்பெற்று பூரணமாக குணமடையலாம் என மேலும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்

யாழ் . விசேட நிருபர்

ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இதனை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 04 இலட்சத்து, 92 ஆயிரத்து 280 பேர் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் குறை நிரப்பு பட்டியலில் இருந்து 2ஆயிரத்து 463 பேர் இணைக்கப்பட்டுள்ளர். அதேவேளை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. வாக்காளர்களுக்கான அட்டைகள் தபால் நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளன. அதன் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 792 பேர், விசேட தேவைக்குரிய வாக்காளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது வாக்கினை சுமுகமான முறையில் அளிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. விசேட தேவைக்குட்பட்டவர்களில் அதாவது, நிரந்தர வலிமை இழப்புக்கு உட்பட்டவர்கள் 262 பேருக்கு தேர்தல் ஆணைக்குழுவில் இருந்து விசேட அடையாள அட்டை கிடைக்க பெற்று அவை தற்போது வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான அடையாள அட்டை கிராம சேவையாளர் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில், 41 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அதேபோல் தபால் வாக்குகளை எண்ணுவதற்காக 14 வாக்கு எண்ணும் நிலையங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்களிப்பு இம்மாதம் நான்காம் திகதி தேர்தல் அலுவலகம், மாவட்ட செயலகம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.


மிகவும் உயர்ந்த வங்கியாக்க சேவை
அனுபவமொன்றை உங்களுக்கு வழங்க

NSB

அதிநவீன வங்கியாக்கத்தை நோக்கி நாம் நகர்கின்றோம்.

எமது உத்தேச புதிய மைய வங்கி முறைமையை (Core Banking System) நோக்கி நகருதல் எதிர்வரும் நீண்ட வார இறுதியில் செயல்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம் என்பதை எமது பெருமைக்குரிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அதன் காரணமக 2024 செப்டம்பர் 13 ஆம் திகதி பி.ப. 02.00 மணி முதல் 2024 செப்டம்பர் 18 ஆம் திகதி மு.ப. 08.30 மணி வரை எமது சகல சேவை முறைமைகளும் செயல்படமாட்டாது.

இதன் காரணமாக குறித்த கால எல்லைக்குள் பின்வரும் சேவைகள் இடம்பெறமாட்டாது.

- NSBPay App மற்றும் இணையத்தள வங்கிச் சேவை பணிகள்.
- NSB Virtual பற்று அட்டைகள் (Debit Cards)
- வாடிக்கையாளர் நிகழ்நிலை (On-line) சேவைகள்.
- NSB CRMs ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பண வைப்புக்கள்.
- பாவனை கட்டணப்பட்டியல் செலுத்தல்கள்.
- வெளிநாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பண அனுப்புதல்கள்.

எவ்வாறாயினும் எமது வாடிக்கையாளர்களுக்கு NSB பற்று அட்டைகளை உபயோகித்து பின்வரும் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

- NSB ATM மற்றும் CRM இயந்திரங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பண வைப்புக்கள் மற்றும் நிலுவைப் பரிசோதனைகள்.
- வேறு எந்தவொரு வங்கியினதும் ATM கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பண மீள்பெறல்கள்.
- உள்நாட்டிலோ, வெளிநாடுகளிலிருந்தோ மேற்கொள்ளப்படுகின்ற E-commerce இணையத்தளம் மற்றும் VISA அல்லது Master Card POS இயந்திரங்கள் ஊடாக மேற்கொள்ளக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள்.

2024 செப்டம்பர் 18 ஆம் திகதி மு.ப. 08.30 மணிக்கு நிகழ்நிலை online சேவைகள் யாவும் மீண்டும் தொழிற்பட ஆரம்பிக்கும். அதே வேளை, சகல மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட சில கிளைகள் மாத்திரம் வாடிக்கையாளர் சேவைக்காக திறக்கப்படும். (இது தொடர்பான விபரங்கள் எமது இணையத்தளத்திலும் மற்றும் சமூக ஊடகங்களிலும் வெளியிடப்படும்.)

மேற்படி செயற்பாடுகள் தொடர்பில் நீங்கள் வழங்கக்கூடிய ஒத்துழைப்புக்களை வெகுவாக நாம் மதிக்கின்ற அதே வேளை, இதன் காரணமாக ஏதும் அசௌகரியங்கள் ஏற்படின் அது தொடர்பில் நாம் வருந்துகின்றோம்.

மேலதிக விபரங்கள் தேவையாயின் தொலைபேசி இலக்கங்களான +94 112 379 379 / 1972, என்ற இலக்கங்கள் ஊடாக எமது அழைப்பு நிலையத்தை தொடர்பு கொள்ளவும்.

LRA AAA (Stable)
100% அரசாங்க உத்தரவாதம்

1972
www.nsb.lk 0112 379 379
NSB


# மாறுபட்ட நிலைப்பாட்டை கொண்டவர்களால் தமிழ் மக்களது வாக்குகள் சிதறக்கூடாது

பருத்தித்துறை நிருபர்

உட்கட்சி அதிகார மமதையில் இருப்பவர்களின் நலன்களுக்காக தமிழ் மக்களின் வாக்குகள் சிதறக் கூடாது. அதேநேரம் அதிகாரப் போட்டியில் அவசரமாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகபேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் ஜனாதிபதி தேர்தல் நெருங்கிவரும் சூழலில் சில கட்சிகள் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்த பின்னரே தத்தமது கட்சிகளின் நிலைப்பாட்டை வெளியிடுவதாக கூறியிருந்தார்கள்.



தற்போது பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்துள்ள சூழலில் தமிழ் மக்களின் அரசியல் நலன்சார்ந்த எவ்விதமான திட்டங்களும் உள்ளடக்கப்படாத வேட்பாளர்களுக்கு எழுந்தமானமாக தத்தமது அதிகாரத்தை நிலைநிறுத்தும் போட்டியில் தீர்மானங்களை அறிவித்துள்ளதாக கூறியுள்ளனர்.

ஆனால் தமிழ் மக்களது அரசியல் உரிமை தொடர்பாக எந்தவிதமான கரிசனைகளையும் இக்கட்சிகள் கொண்டிருக்கவில்லை என்பதும் தமது கட்சியை யார் ஆதிக்கப்படுத்துவது என்ற மோதலில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

மாறுபட்ட நிலைப்பாட்டை கொண்ட இவர்களால் தமிழ் மக்களது வாக்குகள் சிதறக்கூடாது என்பதே எமது நோக்கமாக உள்ளது.

எனவே தான் தபால்மூல வாக்களிப்பும் இடம்பெறவுள்ள சூழலில் கல்வியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் கடந்தகால அரசியல் நிலைமைகளை அனுபவரீதியாக கண்டவர்கள்.

எனவே எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்து அவரது வெற்றியை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.




# சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு இலங்கையில் ஆறு மாணவர்கள் தெரிவு

## மாவனல்ல ஸாஹிரா கல்லூரி மாணவரும் சீனா செல்வார்

சீனாவில் நடைபெறும் சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றவென இலங்கையில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆறு மாணவர்களில் மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியில் தரம் ஆறில் கல்வி கற்கும் மாணவர் ஆர்.எம்.உஸைரும் ஒருவராவார் என்று கல்லூரி அதிபர் ஏ.எம். நௌஸாத் தெரிவித்தார்.

வருடாந்தம் நடாத்தப்படும் ஒலிம்பியாட் போட்டியில் எமது கல்லூரியில் தரம் ஆறில் கல்வி கற்கும் மாணவர் ஆர்.எம்.உஸைர் இம்முறை பங்குபற்றி வலய, மாகாண மட்ட போட்டிகளிலும் வெற்றிபெற்றதோடு தேசிய மட்ட போட்டியில் நான்காம் இடத்தையும் பெற்று கொண்டுள்ளார்.



நாடளாவிய ரீதியில் முன்னணிப் பாடசாலைகளைச் சேர்ந்த நூறு மாணவர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆறாம் திகதி வரை சீனாவில் நடைபெறும் சர்வதேச போட்டிக்கு இலங்கையில் ஆறு மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். அவர்களில் எமது கல்லூரி மாணவர் உஸைரும் ஒருவராவார் என்றும் அவர் கூறினார்.

தினகரன் வர்த்தக உலா

# நவீன எலும்பு மச்சை மாற்று சிகிச்சை பிரிவை அமைப்பதன் மூலம் வாழ்வில் புதிய நம்பிக்கையை அளித்துள்ள நவலோக்க மருத்துவமனை

இலங்கையர்களுக்கு உயர்தர சர்வதேச சுகாதார சேவைகளை வழங்கும் நவலோக்க மருத்துவமனைகள் குழுமம், விசேட எலும்பு மச்சை மாற்று சிகிச்சை பிரிவை நவீனமயப்படுத்தி அண்மையில் மீண்டும் திறந்து வைத்துள்ளது. இரத்த புற்றுநோய் மற்றும் தலிசீமியா போன்ற இரத்த சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க நிறுவப்பட்டது, அந்த நோய்களுக்கான வெற்றிகரமான சிகிச்சை முறையான எலும்பு மச்சை அல்லது ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

செப்டெம்பர் 2014 முதல் செயல்படும், BMTU அலகு விரிவான எலும்பு மச்சை மாற்று சிகிச்சை சேவைகளை வழங்க நவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகளைப் பயன்படுத்துகிறது. எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்புப் பயிற்சி பெற்ற திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த சுகாதார நிபுணர்களின் குழுவையும் கொண்டுள்ளது. அவர்கள் நோயாளியின் முதன்மை பராமரிப்பு மருத்துவர் மற்றும் பிற நிபுணர்களுடன் இணைந்து ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்றவாறு ஒரு சிகிச்சையளிப்பு முறையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறார்கள்.

இது 3 தனித்தனி தீவிர சிகிச்சை பிரிவுகளையும் கொண்டுள்ளது மற்றும் ஒவ்வொரு அலகும் HEPAfilters எனப்படும் காற்று வடிகட்டுதல் அமைப்புடன் பொருத்தப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் மூலம் உயர் காற்றின் தரத்தை உறுதி செய்து நோய்த்தொற்றுகளைக் குறைக்கும் வகையில் செயல்படுவதால், அலகின் சுகாதாரம் மேலும் அதிகரித்து வருகிறது.

இங்கு, எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சையை வழங்குவதோடு மட்டுமல்லாமல், நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆலோசனை வழங்கவும் பலதரப்பட்ட சுகாதார ஆலோசனைக் குழு செயல்படுகிறது.




அதன் மூலம், நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மன வலிமையை வழங்க அவர்கள் பணியாற்றுகிறார்கள், மேலும் நோயாளிக்கு குணப்படுத்தும் செயல்முறையைப் பற்றி கற்பிக்கவும் செய்கிறார்கள்.நவலோக்க எலும்பு மச்சை மாற்று அலகு இலங்கையில் முன்னணி எலும்பு மச்சை மற்றும் ஸ்டெம் செல் மாற்று அலகு ஆகும். இரத்த புற்றுநோய் மற்றும் பிற இரத்தக் கோளாறுகள் உள்ள நோயாளிகள் உயர் வசதிகள் மற்றும் கவனிப்புடன் தங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய நம்பிக்கையைப் பெற முடியும்.

## நீரிழிவு நோயை எதிர்த்துப் போராடுதல் ஆரோக்கியமான நாட்டிற்கான அறைகூவல்



சுவதிவிய என்பது இலங்கையில் நீரிழிவு நோயை எதிர்த்துப் போராடுவதற்காக சுகாதாரத்துறையின் பல்வேறு உறுப்பினர்களை – மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் ஊட்டச்சத்து நிபுணர்கள், உடற் பயிற்சியாளர்கள், உளவியலாளர்கள் மற்றும் சுகாதார மேம்பாட்டு நிபுணர்கள் உட்பட அனைவரையும் ஒன்றிணைக்கும் ஓர் இலாப நோக்கமற்ற முயற்சியாகும். நிறுவனத் துறையின் முக்கிய பங்கை வலியுறுத்தும் சுவதிவிய, வணிக நிறுவனங்கள் நீரிழிவு நோய்க்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் இருக்குமாறு அழைப்பு விடுக்கிறது. மேலும் கல்வி நிறுவனங்கள், சுகாதார சேவை வழங்குநர்கள், கொள்கை வகுப்பாளர்கள், அரசு நிறுவனங்கள், உணவுத் தொழில் மற்றும் ஊடகங்கள் ஆகிய அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க பங்களிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஏனைய தெற்காசிய நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கையில் நீரிழிவு நோயின் பாதிப்பு மிக அதிகமாக உள்ளது. இந்த நிலைமை மிகவும் கவலையளிப்பதாகவும், உடனடி கவனம் தேவைப்படுவதாகவும் உள்ளது.

சுமார் 4, வயதுவந்த இலங்கையர்களில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இது ஒரு குறிப்பிடத்தக்க சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சுமார் 30 சதவீதம் பேர் நீரிழிவுக்கு முந்தைய நிலையில் உள்ளனர். ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதை அறியாமலேயே இருக்கின்றனர்.

# எகோ லேபல் தொடர்பில் உயர்மட்ட புத்திஜீவிகள் உரையாடல் கொழும்பில்

நிலைபேறான உற்பத்திக்கான மற்றொரு நடவடிக்கையாக இலங்கை தேசிய தூய உற்பத்திகள் மத்திய நிலையம் ஜேர்மனியின் அபிவிருத்தி நிறுவனமான ஜி.ரி.இஸட்டுடன் இணைந்து எகோ லேபல் (Eco Label) தொடர்பிலான உயர்மட்ட புத்திஜீவிகள் உரையாடலொன்றை கொழும்பில் நடாத்தியுள்ளது.

'எகோ லேபடல்: சிறப்புமிகு பரி மாற்றத்திற்கு தொடர்பு கொள்ளுங்கள்' என்ற தொனிப்பொருளில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற இந்த புத்திஜீவிகள் கலந்துரையாடலில் தேயிலை உற்பத்தி, பால் உற்பத்தி, நிர்மாணத் துறை சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் தைத்த ஆடைகள் உள்ளிட்ட பல்துறைகளைச் சேர்ந்த உயர்மட்ட வர்த்தகத் தலைவர்கள் பங்குபற்றினர்.

சுற்றுச்சூழல் செயலணி செயற்பாடுகளை சுயாதீனமாக அத்தாட்சிப்படுத்தும் முறைமையான Eco Label, சூழல் நேயப் பாவனைகளைப் பின்பற்றும் நோக்குடன் வர்த்தகத்திற்குரிய முக்கிய மூலோபாயமாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் கைத்தொழில்களுக்கும் Eco Label அத்தாட்சிப்படுத்தலின் பிரதிபலன்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நிலைபேறானதும் பொறுப்புமிக்க உற்பத்தி முறைகளைப் பின்பற்றப்படுவதன் முக்கியத்துவத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவதை நோக்காகக் கொண்டு இப்புத்திஜீவிகள் உரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, வர்த்தகப் பயன்பாடுகளுக்கு எகோ லேபல் அத்தாட்சிப்படுத்தலை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டினார். அத்தோடு ஜப்பான் நாட்டின் சுற்றுச் சூழல் சங்கத்தின் பிரதி முகாமையாளர் ஹிரோயூகி கொபயாசி, இந்த அமர்வில் எகோ லேபலில் GEN அங்கத்துவத்தின் பெறுமதி நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய பிரவேசம் என்ற தலைப்பில் உரையாற்றினார்.



## யாழ். போதனா வைத்தியசாலையில் MRI தரவு பகுப்பாய்வு தொகுதியை நன்கொடையாக வழங்கிய DIMO Healthcare

இலங்கையின் முன்னணியில் உள்ள பல்துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் சுகாதாரப் பிரிவான DIMO Healthcare நிறுவனம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் Siemens Healthineers 3 Tesla MRI ஸ்கேனருக்கு, மேலதிக கணினி தரவுப் பகுப்பாய்வு தொகுதியை (Workstation) நன்கொடையாக வழங்கியுள்ளது. MRI அறிக்கைகளைப் பெறுவதற்கும், இதன் மூலம் நோயறிதல் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கும், உடனடியாக சிகிச்சையைத் திட்டமிடுவதற்கும் இது மிகவும் உதவியாக அமையும். DIMO Healthcare நிறுவனம் 2020 இல் யாழ். போதனா வைத்தியசாலையில் Siemens Healthineers 3 Tesla MRI ஸ்கேனரை நிறுவியது. யாழ். மாவட்டத்தின் பொதுச் சுகாதார சேவை கட்டமைப்பில் உள்ள ஒரேயொரு MRI ஸ்கேன் இயந்திரமான இது பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குகிறது.நோயறிதல் செயன்முறையை விரைவுபடுத்துமாறு யாழ். போதனா வைத்தியசாலையினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, மருத்துவமனையின் MRI ஸ்கேன் இயந்திரத்திற்காக இந்த



மேலதிக கணினி தரவு பகுப்பாய்வு தொகுதியை (Workstation) DIMO Healthcare வழங்கியது.

இந்த மேலதிக கணினி தரவு பகுப்பாய்வு தொகுதியானது, யாழ். போதனா வைத்தியசாலைக்கு பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. இதன் முதலாவது நன்மையானது, MRI அறிக்கைகளைப் பெறுவதை விரைவுபடுத்துவதும், நோயறிதலை மிகவும் திறம்படச் செய்வதும், அதன் மூலம் விரைவான சிகிச்சை திட்டமிடலை மேற்கொள்ள உதவுவதும் ஆகும். இதன் இரண்டாவது நன்மையானது, விரிவாக்கப்பட்ட தரவுப் பகுப்பாய்வு திறன், நோய்களைப் பற்றிய விரிவான ஆய்வை நடத்துவதற்கு மருத்துவர்களுக்கு மேம்பட்ட பயிற்சிக்கான சூழலை உருவாக்கியுள்ளது.

## 2024 உளவியல் பாடநெறிக்கான சிறந்த கல்வி நிறுவனமாக அமேசான் கல்லூரி தெரிவு




உளவியல் பாட நெறிக்கான சிறந்த கல்வி நிறுவனமாக அமேசான் கல்லூர Iconic Awards Sri Lanka 2024 விருதினை பெற்றுக்கொண்டது.

குறித்த நிகழ்வுகள் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ( BMICH) அண்மையில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. இந்த நிறுவனத்துக்கான விருதினை அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் பெற்றுக்கொண்டார்.விருதினை பெற்றுக்கொண்ட அவர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

"அமேசான் கல்லூரி நிறுவனமானது 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சுமார் 15 வருடங்களாக பல கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதுடன், மாணவர்களின் நன்மையை கருத்தில் கொண்டு பல்வேறுபட்ட புலமைப்பரிசில் திட்டங்கள் மற்றும் வறிய மாணவர்களுக்கான சலுகை அடிப்படையில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள பல வழிவகைகளை ஒழுங்குபடுத்தி கொடுக்கின்றன. அமேசான் கல்லூரி Diploma, HND, Degree, Masters, PhD வரையிலான பாட நெறிகளுடன்,Business Management, Psychology, Counselling, Teacher Training, Caregiver, Childcare, IELTS, English போன்ற பாடநெறிகளுக்கு முதலிடம் வழங்கப்பட்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் வகுப்புகள் நடத்தப்படுகிறது.

# ஆறு மாதங்களில் 16.2 பில்லியன் ரூபா இலாபத்தை பதிவு செய்த HNB குழுமம்



2024 ஜூன் 30 திகதியுடன் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதியில் HNB 25.8 பில்லியன் ரூபா வரிக்கு முந்திய இலாபத்தையும், 15.4 பில்லியன் ரூபா வரிக்கு பிந்திய இலாபத்தையும் பதிவு செய்துள்ளது. இதே காலப்பகுதியில் குழுமம் ஒருங்கிணைந்த அடிப்படையில் 27.0 பில்லியன் ரூபா வரிக்கு முந்திய இலாபத்தையும், 16.2 பில்லியன் ரூபா வரிக்கு பிந்திய இலாபத்தையும் பதிவு செய்துள்ளது.தலைவர் திரு. நிஹால் ஜயவர்தன கூறுகையில், "இலங்கை மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து நீண்ட தூரம் வந்துள்ளது, மேலும் நிலைப்படுத்தும் பாதையில் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நிச்சயமற்ற நிலைகள் மற்றும் சவால்கள் நீடித்தாலும், எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் நிலையான வளர்ச்சியை வழங்குவதற்கான எமது உறுதிபாட்டை மீண்டும் தெரிவிக்கின்றோம்." என தெரிவித்தார்.

வங்கியின் வட்டி வருவாய் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியை ஒப்பிடும் போது 24.2% குறைந்துள்ளது. இதற்கு காரணம், 2024 ஜூன் 30 வரை 12 மாத காலப்பகுதியில் AWPLR 19.47% இலிருந்து 8.78% ஆக 10 சதவிகித புள்ளிகளுக்கு மேல் வீழ்ச்சியடைந்தது. இது மத்திய வங்கியின் விரிவாக்க பணக் கொள்கைக்கு ஏற்ப உள்ளமை குறிப்பிடத்தக்கது. வட்டிச் செலவும் இதே போன்ற வீதத்தில் குறைந்துள்ளதால், நிகர வட்டி வருவாய் 23.1% குறைந்து 45.6 பில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது. கடன் அட்டை மற்றும் டிஜிட்டல் சேனல் பரிவர்த்தனைகள் முக்கிய காரணியாக இருந்ததால், வங்கியின் கட்டணம் மற்றும் தரகு வருவாய் வருடாந்த அடிப்படையில் 5.5% அதிகரித்து 8.6 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகள் ஊக்கமளிக்கும் அதே வேளையில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு சிறிது சிறிதாக உயர்ந்ததால், ஆறு மாதங்களுக்கு வங்கி 1.3 பில்லியன் ரூபாய் மாற்று இழப்பை பதிவு செய்ய வேண்டியிருந்தது.

HNB இன் இயக்கச் செலவுகள் ஊழியர் செலவு மற்றும் இதர தொடர்புடைய செலவுகளின் காரணமாக வருடாந்திர அடிப்படையில் 12.1% அதிகரித்து 19.8 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. வங்கியின் மொத்த பயனுள்ள வரி விகிதம் 53.4% என மாறாமல் இருந்தது.

## 77% வருடாந்த இலாப வளர்ச்சியை ஈட்டியுள்ள JAT நிறுவனம்



மரப்பூச்சுக்கள், தீந்தை தூரிகைகள் மற்றும் றோலர்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இலங்கையில் சந்தை முன்னிலையாளராகத் திகழ்ந்து வருகின்ற JAT Holdings PLC, 2025 நிதியாண்டின் 1ஆவது காலாண்டுக்கான நிதியியல் பெறுபேறுகளை அண்மையில் வெளியிட்டுள்ளது. வருமானம் மற்றும் இலாபம் ஆகிய இரு முனைகளிலும் வலுவான வளர்ச்சியைப் பதிவாக்கியுள்ளது. அந்த வகையில், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதன் வருமானம் 3% ஆல் அதிகரித்து, ரூபா 2.12 பில்லியனாகப் பதிவாகியுள்ளது. மரப்பூச்சுக்கள் மற்றும் தீந்தை தூரிகைகள் பிரிவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியே இதற்கு உந்துசக்தியாக அமைந்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 70 மில்லியன் தொகையாக காணப்பட்ட வரிக்குப் பின்னரான இலாபம் மீளாய்வுக்குட்படும் காலாண்டில் 77% என்ற ஆண்டு வளர்ச்சியுடன் ரூபா 124 மில்லியன் ஆக கணிசமான வளர்ச்சியை வெளிக்காண்பித்துள்ளது.

2024 இன் ஆரம்பத்தில் தொழிற்பாடுகளை ஆரம்பித்த JAT இன் acrylic binder மற்றும் alkyd resin தொழிற்சாலைகள் மூலமான திறன் மட்டங்களின் துணையுடன், சீரான விற்பனை அதிகரிப்பின் உந்துசக்தியுடனேயே இந்த பெறுபேறுகள் எட்டப்பட்டுள்ளன. தற்போது மரப்பூச்சுக்களுக்கான பைன்டர்கள் மற்றும் சுவர் தீந்தை எமல்ஷன்கள் உள்ளகரீதியாகவே உற்பத்தி செய்யப்படுவதால், இந்த திறன்மட்டங்கள் எதிர்வரும் காலாண்டுகளில் வளர்ச்சி மற்றும் இலாபமட்டத்திற்கு துணைபுரியும் என குழுமம் எதிர்பார்த்துள்ளது.

பங்களாதேஷ் தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதால் 2024/25 நிதியாண்டில் குழுமத்தின் ஐந்தொகை, நிதியியல் பெறுபேற்று கணிசமான அளவிலான நேர்மறை வெளிப்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

# உலகளாவிய பாடும் நட்சத்திரங்கள் Hot 'N' Spicy உடன் இணைவு

இலங்கை இளைஞர்களின் அதிர்வலை மற்றும் கேளிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க பிறிமா கொத்துமீ ஒருபோதும் தவறுவதில்லை.

சர்வதேச சூப்பர் ஸ்டாரான யொஹானி மற்றும் பாடகர் அஷன்யா பிரேமதாச ஆகியோரை தனது வர்த்தகநாமத் தூதுவர்களாக இணைத்துள்ள பிறிமா கொத்துமீ, அவர்களுடனான கூட்டாண்மையை மேலும் நீடிப்பதாக அறிவித்துள்ளதன் மூலம், தனது தனித்துவமான ஆளுமையை வலுப்படுத்தியுள்ளது. பிறிமா கொத்துமீயின் Hot 'N' Spicy நாமத்தின் உணர்வை, முழுமையாக வெளிப்படுத்த இவர்களை விட சிறந்த ஜோடி இருக்கமாட்டார்கள்.பிறிமா கொத்துமீயின் பரபரப்பான அடுத்த அத்தியாயமாக இணைகின்றார் கொலிவுட் இசை அரங்கில் அலைகளை உருவாக்கிய பிரபல இலங்கை கலைஞரான ரவி றொய்ஸ்டர்.

Hot 'N' Spicy அதிர்வைப் போல் ரவி தனது இசையை புதிய உயரத்திற்கு கொண்டு செல்கிறார்.

நாடு முழுவதிலும் உள்ள இளைஞர்களை தைரியமாக முன்னோக்கிச் செல்லச் செய்யவும், வாழ்க்கையின் வண்ணங்களை அனுபவிக்கவும் ஊக்கமளிக்கும் பிறிமா கொத்துமீ அதன் வர்த்தகநாம மந்திரத்தை மேலும் அதிகரிக்கும் வகையில், உலகளாவிய நட்சத்திரங்களுடன் தொடர்ச்சியாக இணையும்.




டோக்கியோ சிமெண்ட் குழுமம் சமீபத்தில் வருடாந்திர பசுமை மற்றும் நிலைத்தன்மை விருதுகள் 2024 இல் இரண்டு மதிப்புமிக்க விருதுகளை வென்றதன் மூலம் கட்டுமானத் துறையில் அதன் நிலையான தலைமைத்துவ நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

## கண்கவர் ஷொப்பிங் அனுபவத்திற்கான மகிழ்ச்சியைக் கொண்டுவரும் Miniso

உலகின் முன்னணி வாழ்க்கைமுறை பயன்பாட்டு பொருட்கள் விற்பனை வர்த்தகநாமங்களில் ஒன்றான Miniso, முன்னரை விட உங்கள் வாழ்க்கையை மிகவும் வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றுவதற்கான அர்ப்பணிப்பில் உள்ளது. வாழ்க்கையைப் பற்றிய புத்துணர்ச்சியூட்டும் புதிய கண்ணோட்டத்துடன், இலங்கை வாடிக்கையாளர்களுக்கு இரு மடங்கு வேடிக்கை மற்றும் உற்சாகத்தை Miniso வழங்குகிறது. இலங்கையில் Miniso நிறுவனத்தின் முதன்மை உரிமையாளரான அபான்ஸ் நிறுவனம், நாடு முழுவதும் சிறந்த விஸ்தரிப்புத் திட்டத்துடன் அதனை மேம்படுத்தி வருகிறது. நாடளாவிய ரீதியில் ஏற்கனவே 10 இற்கும் மேற்பட்ட காட்சியறைகள் கொண்டுள்ள Miniso, தனித்துவமான ஷொப்பிங் அனுபவத்தை நுகர்வோருக்கு வழங்கும் புதிய திட்டத்துடன் அதன் செயற்பாட்டை இரட்டிப்பாக்குகிறது. Miniso எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது அல்ல, அது தரத்தை அடிப்படையிலானதாகும்! அதன் பரந்த தயாரிப்பு வகைகள் இளைஞர்களுக்கு, வசதி, பேஷன், பொழுதுபோக்கு ஆகியவற்றின் கலவையை வழங்குகிறது.

# 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான 05 வருடங்கள்'

# போதைப்பொருளை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகள்



(நேற்றைய தொடர்)

## தேர்தல் விஞ்ஞாபனம்

தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் பாவனை, விற்பனை, அவற்றுக்கு அடிமையாதல், அதிலிருந்த விடுபட முடியாமை போன்றவை பாரிய சமூகப் பிரச்சினைகளாகும். இந்த நிலைமையை முற்றாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

போதைவஸ்துக்களை இல்லாதொழித்தலில் இருந்து போதைக்கடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பது வரையிலான அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில், பரந்த அதிகாரமுடைய போதைப்பொருள் இல்லாதொழிப்பதற்குக் கட்டளையிடும் தலைமையகமொன்றை 2025 ஆம் ஆண்டில் தாபிப்பதற்கான புதியதொரு சட்டம் 2025 இல் அங்கீகரிக்கப்படும்.

ஆரண்யங்களில் வசிக்கும் பிக்குமார்களுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நிதியமொன்று ஏற்படுத்தப்படும். பிரிவெனாக்களின் கல்வி விருத்திசெய்யப்படும். துறவிகளாவதற்கு வருகின்ற பிக்கு அன்னையர்களுக்கு ஆன்மீக முன்னேற்றம் ஏற்படக் கூடியவாறு உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படும்.

இந்து சமயம் அநுராதபுரம் பொலன்னறுவை யுகங்களில் இருந்தே இலங்கையில் பரவியது. நாட்டில் இந்து ஆலயங்கள் முன்னேற்றப்படும். அதன் கீழ் மன்னார் திருக்கேதீஸ்வரம், யாழ்ப்பாணம் நகுலேஸ்வரம், சிலாபம் முன்னேஸ்வரம் ஆகிய கோயில்களை அடிப்படையாகக் கொண்டு தெற்கின் கைலாய கோயில் யாத்திரை அறிமுகப்படுத்தப்படும் என்பதுடன், திருகோணமலை திருக்கோணேஸ்வரம், தெற்கின் கைலாய கோயில் யாத்திரையின் பிரதான இந்து மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும்.

இந்துமதத் தலைவர்களுடன் கலந்துரையாடி இலங்கையில் இந்து சமயத்தை முறையாக கடைப்பிடிப்பதற்குரிய கல்வி நிலையமொன்று நிறுவப்படும்.

கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு, கிறிஸ்தவ சூழலொன்றுக்குள் கிறிஸ்தவத்தைக் கற்பிப்பதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும். கிறிஸ்தவ கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் செமினரி நிறுவனங்கள், இடங்களுக்கு அரச உதவிகள் வழங்கப்படும்.

இஸ்லாம்மதக் கல்விக்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு, மதரஸாக்கல்வி அபிவிருத்தி செய்யப்படும். முஸ்லிம் உடலங்களை தகனம் செய்தல் போன்ற விஞ்ஞான ரீதியற்ற மற்றும் மதங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இடம்பெற்றன. இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு முகம் கொடுத்த அனைத்து குடும்பங்களுக்கும் நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் ஒருபோதும் ஏற்படாதவாறு புதிய சட்டங்கள் 2025 முதல் அறிமுகப்படுத்தப்படும்.

எந்தவொரு மதத்திற்கோ இனத்திற்கோ தமது கலாசார அடையாளங்களுக்கு மற்றும் மத அனுட்டானங்களுக்கு தடைகளை ஏற்படுத்தாத சமூக சூழல் ஒன்று தாபிக்கப்படும்.

### சிறந்த ஊடக சூழல்:

| முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் கிராமிய நீர் வழங்கல் திட்ட நிர்மாணத்தின் மீதி வேலை. ஒப்பந்த இல. **MWS&EID/ WaSSIP/Mullaithivu/BW/ NCB/Kokkilai-Balance work/2024/01** | 8,500 ரூபா | 360,000 ரூபா | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் CIDA உடனான பதிவு சி-4 அல்லது சி-5 அல்லது சி-6 இலங்கை அரசாங்க 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் சட்டமூலம் மற்றும் அதற்கு பின்னரான வர்த்தமானி அறிவித்தல் இலங்கையில் பொது ஒப்பந்தங்களின் பதிவு அத்துடன் சிலோன் டெயிலி நியூஸ் பத்திரிகையில் 2018.10.16 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம், ஆகியவற்றிற்கு இசைவானது. | செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகம், நீர்வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை, ஜுபிலி போஸ்ட் நுகேகொட தொ.பேசி/தொ.நகல். 011-2890943/011-2890941 | 2024 ஒக்டோபர் 2 ஆம் திகதியன்று மு.ப.11 மணிக்கு |

3. செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் தலைப்புக் கடிதத்தில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மூடும் திகதி வரையும் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்தும் பார்க்கலாம்.
6. கேள்விகளை ஒன்றில் மேலேயுள்ள முகவரியில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.
7. அனைத்து கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.**
**சமூக நீர் திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.**


## மீட்கப்படாத தங்க நகைகளின் ஏலம் விற்பனை

தங்கக் கடன் வசதிகளைப் பெறுவதில்இ தங்கக் கடன் ஏப்ரல் 31, 2024 வரை மிகொமுவ பதுளை ஹொரண மற்றும் லக்தரன இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்டின் பிலியந்தலை கிளைகளில் பத்திரமாக வைக்கப்பட்டதுஇ ஆனால் ஆகஸ்ட் 31, 2024 க்குள் காலாவதியாகாத மற்றும் புதுப்பிக்கப்படாத தங்கப் பொருட்கள் பொது ஏலத்தில் விற்கப்படும்.

திகதி : 2024.09.19
நரேம்: மு.ப 11.00
இடம்: இல. 154 பிரதான வீதி,நீர்கொழம்பு (நீர்கொழும்பு கிள்ளை)
இல.30, வங்கி வீதி, பதளை (பதளை கிளை)

- அனைத்த ஏலதாரர்களும் தங்கள் தசேிய அடயைாள அட்டயைை ஏலத்திற்கு சமர்ப்பிக்க வணேடும்.
- ஏலத் திகதிகளை ரத்த சயெ்ய, ஒத்திவகை்க அல்லத இணைக்கும் உரிமயைை Lakderana Investments Limited கொணட்ுள்ளத.

**Lakderana Investment Ltd**
No 100, Buthgamuwa Road, Rajagiriya
0117 586 500

QUICK ADS



Marriage Proposals in the Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams


# பெறுகை அறிவித்தல்
## கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம
## கட்டிட பழுதுபார்த்தல்களை நிறைவேற்றுதல்

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையுடன் இணைந்த கந்தான மாவட்ட வைத்தியசாலையின் கீழ்க்காணும் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்காக கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரினால் தகைமைவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | இணைப்பு இலக்கம் | நிறுவனம் | உருப்படி | CIDA பதிவுத் தகைமை | கேள்விப் பிணை |
|---|---|---|---|---|---|
| 01 | AC/DHK/T/01/2023 | மாவட்ட வைத்தியசாலை கந்தானை | பழைய மோச்சரிக்காக ஒதுக்கப்பட்ட கட்டிடம், மருந்துக் களஞ்சிய வசதிகளுக்காக புதுப்பித்தல் | C9, C8, C7 தரம் | ரூ. 41,100.00 |
| 02 | AC/DHK/T/01/2024 | மாவட்ட வைத்தியசாலை கந்தானை | சமையலறையை பழுதுபார்த்தல் | C9, C8, C7 தரம் | ரூ. 51,500.00 |

02. இதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் மூலமாக ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர் அல்லது பிரதிநிதியொருவர் பின்வருவனவற்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024.09.04 ஆம் திகதி முதல் 2024.09.24 ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்று.
- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் சிராப்பருக்கு மீளளிக்கப்படாத 2500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு.
- வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று.

04. ரூபா 5 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விக்காக 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2024.09.25 ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

06. சகல கேள்வியும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என குறிப்பிடல் வேண்டும். கேள்வி உள்ளிடும் உறையின் இடது மேல் மூலையில் குறித்த பழுதுபார்த்தலின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதியை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.
(**தொ.பே. இல : 011-2959261/2, நீடிப்பு - 139, பெக்ஸ் : 011-2959266**

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,**
**ராகம.**

## ஊவா மாகாண சபை
# பெறுகை அறிவித்தல்
## ஊவா மாகாண நீர்ப்பாசன திணைக்களம்

பெறுகைக்குழுவின் தலைவரான என்னால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கைத்தொழில்களைப் பூர்த்தி செய்வதற்காக நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் ICTAD (CIDA) பதிவு செய்த கீழேயுள்ள தகைமையுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. மேலும் இக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட சகல தகவல்கள் மற்றும் நிபந்தனைகளை ஊவா மாகாண நீர்ப்பாசன இணையத்தளத்திற்கு உற்படுத்தி உள்ளதால் இலக்கம் https://irrigationdept.up.gov.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து தேவைப்படும் சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடிவதுடன் இலக்கம் pdirrigationbd@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலமும் குறித்த அறிவித்தலை பெற்றுக்கொள்ளலாம்.

| இணைப்பு இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | ICTAD பழைய/புதிய வகைப்படுத்தல் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை (ரூ) காசாக | மீளளிக்கப் படாத தொகை (ரூ) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|
| IRRUVA7 | புத்தள போதிகுளம் மறுசீரமைப்பு | C7 மற்றும் C6 | 69,000.00 | 5,000.00 | 90 நாட்கள் |
| IRRUVA8 | புத்தள இதிகொல பெலெஸ்ஸ குளம் மறுசீரமைத்தல் 1ம் கட்டம் | C6 மற்றும் C5 | 85,000.00 | 5,000.00 | 90 நாட்கள் |
| IRRUVA9 | புத்தள கொஹானா ஒரு நீர்த்தேக்கத்தின் ஓடை வழியை மறுசீரமைத்தல் | C6 மற்றும் C5 | 88,000.00 | 5,000.00 | 90 நாட்கள் |
| IRRU-VA10 | புத்தள புலத்கஸ் ஆர குளத்தை மறுசீரமைத்தல் 1ம் கட்டம் | C6 மற்றும் C5 | 70,000.00 | 5,000.00 | 90 நாட்கள் |

**எம்.எம்.ஜே.எஸ்.விஜேகோன்,**
**ஊவா மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்/பெறுகைக்குழுவின் தலைவர்,**
**ஊவா மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**ரத்வத்த மாவத்த - பதுளை.**

**2024.09.02**
**தொ.பே.இல - 055 - 2222311**

# Invitation of Quotations

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
## MUSALI PRADESHIYA SABHA
### WORLD BANK & EU FUNDED
### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT - LDSP PT3 & BT4

| | |
|---|---|
| **Name of the Contracts :** | **1. Purchasing of Tractor Mounted Vacuum Gully Bowser**<br>**2. Purchasing of Mini Tandem Roller** |
| **Contract Nos :** | **1. LDSP/NP/MN/MUPS/2024/PT3/06**<br>**2. LDSP/NP/MN/MUPS/2024/BT4/02** |

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received Fund from European Union (EU) and from World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this fund to payments under the LDSP PT3& BT4.
2. The Chairman of Local Authority Procurement Committee (LAPC) (*hereinafter called as the Purchaser*), on behalf of Musali Pradeshiya Sabha now invites sealed bids from Registered Suppliers to submit a quotation for the supply of Goods **(Tractor mounted Vacuum Gully Bowser** - must be **Brand New**-tank with **3500 litre capacity & Mini Tandem Roller** - must be **Brand New** - Minimum Operating weight should be 3300 KG) as specified in Section III Schedule of Requirements.
3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. Quotations shall remain valid for the period of Forty Nine (49) days of validity after the quotation submission deadline, until 11.11.2024.
5. Interested Recognized Organizations / Authoriesed Dealers / Registered Suppliers may obtain further information from **Secretary, Musali Pradeshiya Sabha** [Tel No: **0232051672**, Email: **musalips@gmail.com, www.musali.ps.gov.lk**] and inspect the Bidding Documents at the address Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar from 09:00 hrs to 15:00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested Recognized Organizations / Authorised Dealers / Registered Suppliers on submission of a written application to the **Chairman, Musali Pradeshiya Sabha** from **2024/09/04 until 2024/09/24** between 09:00 hrs and 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Four Thousand (Rs. 4,000.00). The method of payment will be by Cash**.**
7. Duly Completed and Signed Quotations in 02 copies indicating "Original" and "Duplicate" should be delivered by Registered Post to the address : **The Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar** or should be deposited in the Tender Box kept in the Main Office of the Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar on or before **2024/09/25 at 10:30 hrs.** The top left-hand corner of the envelope enclosing the Quotations should be marked with **"Purchasing of Tractor Mounted Gully Bowser (Contract No: LDSP/NP/MN/MUPS/2024/PT3/06 Or Purchasing of Mini Tandem Roller (Contract No: LDSP/NP/MN/MUPS/2024/BT4/02)".** Late bids will be rejected.
8. Quotations will be opened at the address of Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. The Recognized Organizations / Authorised Dealers / Registered Suppliers shall submit the Quotation Submission Form using the Form furnished in Section V in the Bidding Document. This Form must be completed without any alterations to its format, and no substitutes shall be accepted. All blank spaces shall be filled in with the information requested.
10. Alternative offers shall not be considered. The Vendors / Registered Suppliers are advised not to quote different options (**unless stated in the Data Sheet**) for the same item but to furnish the most competitive among the options available to the bidder.
11. The Final Destination shall be the Main Office of **Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar, and Latest Delivery Date** should be **21 days from the Date of Letter of Acceptance.**

### Section III : Schedule of Requirements

| No. | Contract No. | Name of the Contract | Minimum Requirement | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/MN/MUPS/2024/PT4/06 | **Purchasing of Tractor Mounted Vacuum Gully Bowser** - must be **Brand New** - tank with **3500 litre capacity** | Recognized Organization / Authorised Dealer / Registered Supplier | 53,000.00 | 11.12.2024 | 21 Days |
| 02 | LDSP/NP/MN/MUPS/2024/BT4/02 | **Purchasing of Mini Tandem Roller** - Must be Brand New - Minimum Operating Weight Should be **3300 KG** | Recognized Organization / Authorised Dealer / Registered Supplier | 120,000.00 | 11.12.2024 | 21 Days |

The address referred to above is :

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar.**
Date : 04.09.2024


OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தல் (IFB)

## விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்
## பொலன்னறுவ மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதியில் உத்தேசிக்கப்பட்ட குத்துச்சண்டை பகுதியின் மீதி வேலையின் நிர்மாணம்

**ஒப்பந்த இல.: DSD/PRO/03/03/58-2024**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு பொலன்னறுவ மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதியின் உத்தேசிக்கப்பட்ட குத்துச்சண்டை பகுதியின் மீதி வேலையின் நிர்மாணத்திற்காக (ஒப்பந்த இல.: DSD/PRO/03/03/58-2024)முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
   இவ்வேலையானது,
   - கொங்கிறீட் வேலைகள்,தரைச் சுவர் மற்றும் சீலிங் மெருகூட்டல், உலோக வேலைகள் மற்றும் பெயிண்ட் வேலைகள்.
   - மின்னியல் மற்றும் குழாய் வேலைகள் ஆகியவற்றை அடக்கும்.

   நிர்மாணக் காலமானது 120 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்திருப்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   (அ) நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் கட்டிட சி-5 மற்றும் எஸ்பி-4 அல்லது சி-4 மற்றும் எஸ்பி4 மேற்பட்ட தரத்தில் கட்டிட நிர்மாணம் மற்றும் மின்னியல் நிறுவதில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள்.

   (ஆ) கடந்த 5 வருடங்களில் ஒப்பந்தக்காரர் ஆகக்குறைந்தது இதற்கு நிகரான தேவைப்பாடுகள் மற்றும் சிக்கல் தன்மையில் இரு செயற்றிட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பொறியியல் சேவைகளுக்கான பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 0112677960) கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024.09.04ஆம் திகதியிலிருந்து 2024.09.24 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் (வேலை நாட்களில்) மீளளிக்கப்படாத கட்டணமாக 7,500 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-7, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பெறுகைக்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
6. 2024.09.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் 600,000 (ஆறு இலட்சம்) பெறுமதியான விலைக்கோரல் ஆவண கேள்விப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. கேள்விப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை மூடும் திகதியானது 119 நாட்களாக இருத்தல் வேண்டும்.
10. 2024.09.12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

    மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு,

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-7.**
**தொலைபேசி: 011 2677960.**

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

## கேள்வி அழைப்பு (IFB)

| உருப்படி இல | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | தெற்கு அதிவேக வீதியின் பரவாகும்புக்க முதல் மத்தள மற்றும் ஹம்பாந்தோட்டை வரையான பகுதியில் பராமரிப்பு விடயங்களுக்காக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல். RDA/EOM&M/MNT/ESE/SP/2024/22 |
| 02 | தெற்கு அதிவேக வீதியின் பரவாகும்புக்க முதல் மத்தள வரை மற்றும் அந்தரவெவ முதல் ஹம்பாந்தோட்டை வரையான பகுதியில் யானை வேலியில் சிவில் பராமரிப்பு விடயங்களை மேற்கொள்ளல் மற்றும் யானை வேலியை மதிப்பீடு செய்தலுக்கான தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் RDA/EOM&M/Ele-Fence-MNT/ESE/SP/2024/30 |

மேற்படி செயற்றிட்டத்திற்காக தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 செப்டெம்பர் 04 முதல் 2024 செப்டெம்பர் 25 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**தலைவர், அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம**

## இலங்கைப் பாராளுமன்றம்
# பெறுகை அறிவித்தல்
## உணவுப் பொருள் வழங்கல்

இலங்கைப் பாராளுமன்றத்திற்கு 2024/2025 ஆம் ஆண்டிற்கான உணவுப் பொருட்களை வழங்குவதற்காக 2024 செப்டெம்பர் 25 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் பின்வரும் தொகுதிகளின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

- **மீன்**
- **கருவாடு**

விலைமனுக் கோரல் ஆவணங்களை https://www.parliament.lk/en/secretariat/advertisements/view/311 பாராளுமன்ற இணையதளத்தின் ஊடாக 2024 செப்டெம்பர் 24 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்பதுடன் அதற்கு மீளளிக்கப்படாத ரூ.1000/- கட்டணமொன்றை ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக செலுத்துதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படுமாயின் 011 - 2777358 / 011 - 2777364 தொலைபேசி இலக்கத்தின் ஊடாக உதவிப் பணிப்பாளர் - நிர்வாகம் (வழங்கல் மற்றும் சேவைகள்) அவர்களை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்,**
**இலங்கைப் பாராளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**
**2024 செப்டம்பர் 04 ஆம் திகதி.**

## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம் தொழில் வாய்ப்பு

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனமானது 600,000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் 1400 ஊழியர்களின் தொழில்படை ஒன்றுடன் நீர்கொழும்பில் இருந்து காலி வரை நாட்டின் கரையோரப் பகுதிகளை உள்ளடக்கிய ஏழு கிளைகளைக் கொண்ட இலங்கையில் உள்ள விநியோக பயன்பாட்டு (Distribution Utility) நிறுவனம் ஒன்று என்பதோடு அது பின்வரும் பதவிகளுக்காக தகுதியுடையவர்களை தேடுகிறது.

1. **பராமரிப்பு நிர்வாகி** (ME Class II Grade II B)

| | |
|---|---|
| கல்வி மற்றும் தொழில்முறை தகைமை | நிர்மாணத் திட்ட முகாமைத்துவம் அல்லது அதற்கு இணையான துறையில் இளமாணிப் பட்டம் |
| வயது | 2024.09.13 ஆம் திகதிக்கு 35 வயதுக்கு உட்பட்டவர் |

2. **தொழில்நுட்ப அதிகாரி - இயந்திரவியல்** (EE Class II Grade II B)

| | |
|---|---|
| கல்வி மற்றும் தொழில்முறை தகைமை | இயந்திரவியல் பொறியியல் அல்லது அதற்கு இணையான துறையில் NDT |
| வயது | 2024.09.13 ஆம் திகதிக்கு 35 வயதுக்கு உட்பட்டவர் |

பரந்த அளவிலான நலம்சார் கொடுப்பனவுகளுடன் தேர்வு செய்யப்பட்ட அபேட்சகருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு இலக்கத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது விரிவான சுயவிபரக் கோவையை 2024 செப்டெம்பர் 13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் கையொப்பமிட்டு கிடைப்பதற்கு அனுப்பவும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மற்றும் விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

LECO

**மேலதிக பொதுச் செயலாளர்**
**மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**
**1ஆவது மாடி, ஈ.எச். குரே கட்டிடம்,**
**411, காலி வீதி,**
**கொழும்பு - 03**

## பெறுகைக்கான அழைப்பு
## இலங்கை புகையிரத சேவை

### Calypso விசேட புகையிரதத்தின் உணவகத்தை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் Calypso விசேட புகையிரதத்தின் நடமாடும் உணவகத்தில் உணவு பண்டங்களை விற்பனை செய்வதற்காக இரு வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் நடாத்திச் செல்ல தகைமைகளை கொண்ட தரப்பினரிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**
- இந்த உடன்படிக்கைக்கு ஏற்புடைய வியாபாரம் அல்லது நிறுவனம், வியாபார பெயர் பதிவின் கீழ் / நிறுவன பதிவின் கீழ் , இலங்கையினுள் பதிவு செய்யப்பட்ட செல்லுபடியான சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் / நிறுவனங்களுக்கும் சுற்றுலா சபையின் செல்லுபடியான பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் காணப்பட வேண்டும். (கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் திகதிக்கு)
- உணவகத் துறையில் சேவை வழங்கல் தொடர்பில் குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவம்
- நிதி உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துதல் தொடர்பில் போதியளவான ஆவணங்கள் குத்தகைக்காரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். .

**02. கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.**
பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ. 2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்படவேண்டும்.

**03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் .**
Calypso விசேட புகையிரதத்தின் நடமாடும் உணவகம் சார்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில், “Calypso விசேட புகையிரதத்தின் நடமாடும் உணவகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்” என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம்” ஓல்கோட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**
2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்கூறிய மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்க அனுமதிக்கப்படும்.

**05.** கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறப்பட்ட ஏற்புடைய புகையிரத நடமாடும் உணவகத்தை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக குறித்த புகையிரத நிலையத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**06.** திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

**08.** கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
**தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909) / 011-4600944**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு ,**
**புகையிரத தலைமையகம்,**
**ஓல்கோட் மாவத்தை ,**
**கொழும்பு 10**

OBSERVER aDZ TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Gampaha District
Mahara - 011 2 925 168
1474 - H. M. Induka Herath - Adz soon Advertising, 57/D, Kandy Road, Mahara.
Mirigama - 033 22 740 19
1964 - M. D. Mohan Jayalal - No. 219, Pasyala Road, Mirigama.
Veyangoda - 033 22 903 86
1984 - H. M. De Seram - No. 37, Main Street, Veyangoda.
Weliweriya - 077 4 965 266
1986 - K. L. P. Perera - Nilanka Stores, No. 4, New Kandy Road, Weliweriya.

Kaluthara District
Panadura - 072 6 267 432
1730 - B. D. P. Perera - Sausiri Adds, No. 121, Horana Road, Mahawila, Panadura.
Panadura - 038 22 324 80
1776 - Mahen Silva - Suwena News and Adds, 28/A, Weeraman Road, Panadura.
Panadura - 038 22 400 60
1819 - G. R. Gunasingha - 467, Media Lick, Main Street, Panadura.
Mathugama - 076 6 589 582
1737 - D. C. S. Lakmal - Janahitha Newspaper Agency - Mathugama.
Ingiriya - 077 9 806 680
1757 - A. D. Nimal Chandra - Chandra Stores, No. 03, Main Street, Ingiriya.
Beruwala - 034 22 775 84
1784 - Upali Weerasingha - Kanthi Book Shop, No. 10, Market Road, Beruwala.
Bandaragama - 071 4 475 504
1785 - Sumith Kumara - Dawasa Book Shop, No. 17, Panadura Road, Bandaragama.
Wadduwa - 077 2 671 013
1850 - Chinthaka Cooray - No. 509, Galle Road, Wadduwa.
Horana - 071 8 863 522
1852 - D. Nandawathi - Add House, No. 262A, Rathnapura Road, Horana.
Bandaragama - 070 2 424 240
1860 - W. A. V. Perera - Nearest Gelanigama Highway Entrance, Kothalawala, Bandaragama.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

## பெறுகைக்கான அழைப்பு
## இலங்கை புகையிரத சேவை

### இலங்கை புகையிரத சேவையின் புகையிரத நிலையங்களில் அமைந்துள்ள நிலையான உணவகங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ் காணும் உணவகங்களில் இரு வருட காலத்திற்கு உணவு வகைகளை விற்பனை செய்யும் சேவையை நடாத்தி செல்வதற்காக கீழே தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1.மருதானை 2.ரம்புக்கண 3.கல்ஓயா 4.பொலன்னறுவை 5.மட்டக்களப்பு

மேற்படி உணவகங்கள் பற்றிய விபரங்கள் பெறுகை ஆவணங்களில் அட்டவணை 01 கீழ் தரப்பட்டுள்ளது.

**01. தகைமைகள்**
குறித்த துறையுடன் சம்பந்தப்பட்ட செல்லுபடியாகும் வியாபார பதிவு மற்றும் 01 வருட அனுபவம் இருப்பதோடு நிதி உறுதிப்பாட்டினை உறுதி செய்வதற்காக 03 மாதங்களுக்கான வங்கி கூற்றறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**02. கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.**
பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் அல்லது உணவகம் அமைந்துள்ள புகையிரத நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிடம் அல்லது குறித்த உணவகம் அமைந்துள்ள புகையிரத நிலையத்தின் நிலைய அதிபரிடம், மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடமோ அல்லது குறித்த புகையிரத நிலையங்களிலோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மனுக்கோரலின் உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உணவகங்களுக்காகவும் தனித் தனியாக கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்பட வேண்டும். ஒரு விலைமனுக்கோரல் படிவத்தின் மூலம் ஒரு உணவகத்திற்கு மாத்திரமே விலைமனுக்கோரலினை சமர்ப்பிக்கலாம்.

**03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்**
மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு உணவகம் சார்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில் உணவகத்தின் கேள்வி இலக்கம் மற்றும் உணவகத்தின் பெயரை குறிப்பிட்டு “புகையிரத நிலைய உணவகங்களுக்கான கேள்விப்பத்திரம்” என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி பி.ப 2.00க்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் புகையிரத தலைமையகம், ஒக்டோபர்ட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**
2024 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்கூறிய மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்க அனுமதிக்கப்படும்.

05. இலங்கைப் புகையிரத சேவையின் சகல ஊழியர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தின் நெருங்கிய அங்கத்தவர்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு உரிமை இல்லை.

06. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி சகல உணவகங்களையும் பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக குறித்த புகையிரத நிலையத்தினூடாக அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

08. கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே இல - 011 2421281 நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909/ 011-4600944

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**புகையிரத தலைமையகம்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு - 10**

தினகரன் விளையாட்டு

sports.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 4 புதன்கிழமை

## தென்னாபிரிக்க ஏ அணியிடம் இலங்கை ஏ தொடர் வெற்றி




தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான இரண்டாவது உத்தியோக பூர்வமற்ற ஒருநாள் சர்வதேச போட்டியிலும் 30 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை ஏ அணி மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரை 2–0 என கைப்பற்றியது.

பொட்செப்ஸ்ட்ரூமில் நேற்று முன்தினம் (02) நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணி சார்பில் ஆரம்ப வீரர் லஹிரு உதார 86 ஓட்டங்களை பெற்றதோடு மத்திய வரிசையில் சஹன் ஆரச்சிகே 52 ஓட்டங்களை குவித்தார்.

இதன்மூலம் இலங்கை ஏ அணியால் 50 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த தென்னாபிரிக்க ஏ அணிக்கு சுழற்பந்து வீச்சாளர் துஷ்மந்த ஹேமந்த தலையிடி கொடுத்தார். குறிப்பாக தென்னாபிரிக்க ஏ அணி சார்பில் முதல் வரிசையில் வந்து சிறப்பாக ஆடிய அணித் தலைவர் மத்தியு பிரீட்ஸ்கேவின் (74) விக்கெட்டை ஹேமந்த வீழ்த்தியதை அடுத்து அந்த அணி சரிவை சந்திக்க ஆரம்பித்தது.

இறுதியில் தென்னாபிரிக்க ஏ அணி 41.1 ஓவர்களில் 239 ஓட்டங்களுக்கு சுருண்டது. அபாரமாக பந்துவீசிய ஹேமந்த 8 ஓவர்களுக்கும் 48 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு ஆட்ட நாயகன் விருதையும் வென்றார்.

இரு அணிகளும் மோதும் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று (04) அதே பொட்செப்ஸ்ட்ரூமில் நடைபெறவுள்ளது.

## பாராலிம்பிக்கில் இலங்கையின் துலானுக்கு வெள்ளிப் பதக்கம்

பாரிஸில் நடைபெற்று வரும் பாராலிம்பிக் போட்டியில் சமித்த துலான் எப்64 பிரிவு ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

பாரிஸ், ஸ்டாடே டி பிரான்ஸ் அரங்கில் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் (02) இரவு நடந்த இந்தப் போட்டியில் துலான் 67.03 மீற்றர் தூரம் எறிந்து தனது தூரத்தை பதிவு செய்ததோடு எப்44 பிரிவில் தனது முந்தைய உலக சாதனையை (66.49 மீ.) முறியடித்தார்.



இந்தியாவின் சுமித் அன்டில் தனது தங்கப்பதக்கத்தை தக்கவைத்துக்கொண்டார். அவர் எப்64 பிரிவு ஆடவர் ஈட்டி எறிதலில் 70.59 மீற்றர் தூரம் எறிந்தார். 64.89 மீற்றர் தூரம் எறிந்த அவுஸ்திரேலியாவின் மைக்கல் புரான் வெண்கலம் வென்றார்.

துலான் கடந்த 2020 ஆம் ஆண்டு டோக்கியோ நடந்த ஒலிம்பிக் போட்டியில் தனது சிறந்த தூரமான 65.61 மீற்றர்கள் எறிந்து வெண்கலம் வென்ற நிலையிலேயே இம்முறை வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். அவர் 2023 இல் பாரிஸில் நடந்த உலக பாரா தடகள உலக சம்பியன்சிப் போட்டியிலும் வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார். எனினும் இம்முறை பாரிஸ் பாராலிம்பிக்கில் இலங்கை வென்ற முதல் பதக்கமாக இது இருந்தது. இம்முறை போட்டியில் பங்கேற்ற எட்டு வீர, வீராங்கனைகள் கொண்ட இலங்கை பாராலிம்பிக் குழாத்திற்கு துலான் தலைமை வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் இலங்கை இராணுவ பொலிஸில் கோப்ரல் ஒருவராக உள்ளார்.




## பங்களாதேஷ் தொடர் வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய பங்களாதேஷ் அணி டெஸ்ட் தொடரை 2–0 என வென்றது.

பாகிஸ்தானுக்கு எதிராக பங்களாதேஷ் அணி டெஸ்ட் தொடர் ஒன்றை வெல்வது இது முதல்முறை என்பதோடு சிம்பாப்வே மற்றும் மேற்கிந்திய தீவுகள் தவிர்த்து பங்களாதேஷ் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஒன்றை வென்றிருப்பதும் இது முதல் முறையாகும்.

ராவல்பிண்டியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டின் 4ஆவது நாளான நேற்று 185 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணி 4 விக்கெட்டுகளை இழந்து அந்த இலக்கை எட்டியது.

முன்னதாக பாக். அணி முதல் இன்னிங்ஸில் 274 ஓட்டங்களை பெற்ற நிலையில் பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 262 ஓட்டங்களை பெற்றது. எனினும் பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 172 ஓட்டங்களுக்கே சுருண்டது.

# சர்வதேச செய்திகள்



### தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்

## காசாவில் கடந்த 5 நாட்களில் 184 பேர் பலி: மேற்குக் கரையில் 30 ஆக உயர்வு

காசாவில் இஸ்ரேல் வான் மற்றும் செல் குண்டு தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருவதோடு ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இடம்பெற்றுவரும் முற்றுகை மற்றும் சுற்றிவளைப்புகளில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது.

வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் உள்ள மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கு பாடசாலை ஒன்றுக்கு அருகில் உணவு வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்தவர்கள் மீது கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இஸ்ரேலிய தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு நகரான கான் யூனிஸில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் கூடாரம் ஒன்றின் மீது இஸ்ரேல் வீசிய குண்டில் அபூ ஷாப் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை ஒன்று உட்பட இருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமாக வபா தெரிவித்தது.

இஸ்ரேல் போர் விமானங்கள் மத்திய காசாவின் புரைஜ் அகதி முகாம் மீது நேற்றுக் காலை குண்டுகளை வீசியதாகவும் முகாமின் கிழக்கு பகுதியில் இராணுவ வாகனங்கள் சரமாரி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் வபா குறிப்பிட்டது.

கடந்த வியாழன் தொடக்கம் திங்கட்கிழமை வரையான ஐந்து நாட்களில் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் 184 பேர் கொல்லப்பட்டு மேலும் 369 பேர் காயமடைந்ததாக ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்று அது தெரிவித்துள்ளது.

இதில் நுஸைரத் அகதி முகாமில் உள்ள குடியிருப்பு கட்டடம் ஒன்றின் மேல் மாடியில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் மூன்று குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண் ஒருவர் உட்பட இரு பெண்கள் கொல்லப்பட்டதாகவும் அந்த சம்பவத்தில் மொத்தமாக ஒன்பது பேர் பலியானதாகவும் ஐ.நாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா நகரில் உள்ள சப்ரா சுற்றுப்புறத்தில் இஸ்ரேலியப் படை வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தின் ஏழு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதையும் ஐ.நா. அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

கான் யூனிஸ் நகரின் தென் பகுதி மற்றும் ரபா நகர் அதேபோன்று மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வுக்கு அருகே தொடர்ந்து உக்கிர மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. வடக்கில் பெயித் ஹனூன் பகுதியில் இஸ்ரேலிய தரைப்படை நடவடிக்கை ஒன்று இடம்பெற்று வருவதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

போருக்கு மத்தியில் காசாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை மூன்றாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது. மத்திய காசாவில் இதுவரை சுமார் 158,992 தடுப்பு மருந்துகள் பத்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு மற்றும் ஐ.நா. நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மேற்குக் கரையின் ஜெனின் நகரில் ஏழாவது நாளாக இஸ்ரேலின் முற்றுகை நேற்றும் நீடித்ததோடு அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது. இந்த முற்றுகையால் நகரின் வீதிகள் உட்கட்டமைப்புகள் மற்றும் தனிப்பட்டவர்களின் உடைமைகள் இஸ்ரேலிய படையால் அழிக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேலியப் படையால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 58 வயது ஐமன் அபெத் என்பவர் உயிரிழந்துள்ளார். அவரின் உடலில் சித்திரவதைக்கு உட்பட்டதற்கான அடையாளங்கள் இருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜெனினில் இஸ்ரேலியப் படைகளுடன் தொடர்ந்து சண்டையிட்டு வருவதாக பலஸ்தீன போராட்ட அமைப்பான அல் குத்ஸ் படை தெரிவித்துள்ளது. துப்பாக்கி மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்துவதாகவும் அது கூறியது.

மறுபுறம் துல்கரம் நகரில் மீண்டும் சுற்றிவளைப்பை நடத்தி இருக்கும் இஸ்ரேலியப் படை அங்கு சிறுவன் ஒருவனை சுட்டுக் கொன்றிருப்பதாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. நேற்றுக் காலை தனது தந்தையுடன் பள்ளிவாசலுக்குச் சென்ற 14 வயது முகஹது கனான் என்ற அந்த சிறுவன் தலையில் சுடப்பட்டு கொல்லப்பட்டிருப்பதோடு தந்தையின் வயிற்றில் துப்பாக்கி குண்டு பாய்ந்திருப்பதாகவும் வபா கூறியது.

இஸ்ரேலிய ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகளே இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## பெரும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் நெதன்யாகுவின் நிலைப்பாட்டில் உறுதி

காசாவில் உள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அழுத்தங்கள் அதிகரித்தபோதும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது நிலைப்பாட்டில் தொடர்ந்து உறுதியாக உள்ளார்.

நெதன்யாகு அரசுக்கு எதிராக இஸ்ரேலில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருவதோடு நெருங்கிய கூட்டாளியான அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார். காசாவில் இருந்து ஆறு பணயக் கைதிகளின் சடலங்கள் மீட்கப்பட்டதை அடுத்து நெதன்யாகு மீதான எதிர்ப்பு அதிகரித்து வருகிறது.

எனினும் கடந்த திங்கட்கிழமை (02) பேசிய அவர் சமரசம் செய்து கொள்வதற்கான எந்த சமிக்ஞையையும் வெளியிடவில்லை.

எகிப்துடனான காசா எல்லையான பிளடெல்பியா தாழ்வாரத்தை இஸ்ரேல் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்றும் அது எந்த ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையிலும் அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு இஸ்ரேல் நிலைகொள்வதை எகிப்து மற்றும் ஹமாஸ் தொடர்ந்து நிராகரிப்பதோடு தற்போதைய போர்நிறுத்த பேச்சுவார்த்தையிலும் இந்த விடயம் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது.

காசாவை கட்டுப்படுத்தும் ஹமாஸ் அமைப்பு சுரங்கப்பாதைகளை பயன்படுத்தி மீண்டும் ஆயுதங்களை பெறுவதை தடுப்பதற்கு இந்தத் தாழ்வாரம் முக்கியமானது என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

'இது ஹமாஸுக்கு பிராணவாயுவாக உள்ளது. பணயக்கைதிகளை விடுவிப்பதில் என்னை விடவும் யாரும் பொறுப்பானவர்கள் அல்ல.




இந்த விடயத்தில் யாரும் எனக்கு பாடம் நடத்த வேண்டாம்' என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளை மாளிகையில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய பைடன், உடன்படிக்கை ஒன்றை எட்டுவதில் நெதன்யாகு போதுமாக செயற்படவில்லை என்று தெரிவித்தார். இந்நிலையில் அமெரிக்கா போர் நிறுத்தத்திற்கான இறுதி முன்மொழிவு ஒன்றை இந்த வாரத்தில் வழங்கவிருப்பதாக அவர் சூசகமாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பைடனின் நெதன்யாகு மீதான விமர்சனம் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதில் அவர் முட்டுக்கட்டையாக இருப்பதை அமெரிக்கா ஒப்புக்கொள்வதாக உள்ளது என்று ஹமாஸ் மூத்த அதிகாரியான சமி அபூ சுஹ்ரி தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் ஒன்றை உறுதி செய்து பலஸ்தீன நிலப்பகுதியில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வாபஸ் பெறும் முன்மொழிவு ஒன்றுக்கு ஹமாஸ் சாதகமாக பதிலளிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு நெதன்யாகு அரசுக்கு அழுத்தம் கொடுத்து இஸ்ரேலில் இரண்டாவது நாளாக கடந்த திங்கட்கிழமையும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதோடு அங்கு பொது வேலைநிறுத்தம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்தின் மத்தியஸ்தத்தில் பல மாதங்களாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றபோதும் இதுவரை உடன்பாடு ஒன்றை எட்டத் தவறியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின்போது சுமார் 250 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இவர்களில் தொடர்ந்தும் 100க்கும் அதிகமானவர்கள் உயிருடனும் மரணித்த நிலையும் காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

இந்தப் பணயக்கைதிகள் இருக்கும் இடத்தை இஸ்ரேலியப் படை அணுகினால் கையாள வேண்டிய புதிய வழிக்காட்டலை பணயக்கைதிகளின் காவலர்கள் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் கடைப்பிடித்து வருவதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு திங்கட்கிழமை குறிப்பிட்டது.

ரபா நகர சுரங்கப்பாதை ஒன்றில் ஆறு பணயக்கைதிகளின் சடலங்களை இஸ்ரேலியப் படை கடந்த சனிக்கிழமை மீட்டது. அந்தப் பணயக்கைதிகளை படையினர் நெருங்கியபோது அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தை அடுத்தே ஹமாஸ் அமைப்பு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எனினும் காவலர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் வழிகாட்டல் பற்றி ஹமாஸ் ஆயுதப் பிரிவு பேச்சாளர் அபூ உபைதா விரிவாக எதுவும் கூறவில்லை. ஆனால் இந்தப் பணயக்கைதிகளின் மரணத்திற்கு இஸ்ரேலே பொறுப்பேற்ற வேண்டும் என்று அந்த அமைப்பு கூறியது.

கடந்த ஜூன் மாதத்தில் பலஸ்தீனர்கள் பலரும் கொல்லப்பட்ட படை நடவடிக்கை ஒன்றின் மூலம் இஸ்ரேலியப் படை நான்கு பணயக்கைதிகளை உயிருடன் மீட்டது. இதற்குப் பின்னரே இந்த புதிய வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது.

'உடன்படிக்கைக்கு பதிலாக இராணுவ அழுத்தத்தின் மூலம் பணயக்கைதிகளை விடுவிக்க நெதன்யாகு உறுதியாக இருக்கும் நிலையில், பணயக்கைதிகள் அவர்களின் குடும்பங்களுக்கு பிணப்பையில் தான் திருப்பி அனுப்பப்படும். அவர்கள் மரணித்த நிலையிலா அல்லது உயிருடனா தேவை என்பதை குடும்பத்தினர் தேர்வு செய்ய வேண்டும்' என்று அபூ உபைதா குறிப்பிட்டார்.

## இஸ்ரேலுக்கு சில ஆயுதங்களின் ஏற்றுமதியை நிறுத்தியது பிரிட்டன்



சர்வதேச சட்டங்களை மீறுவதற்கு பயன்படுத்தும் ஆபத்து இருப்பதாகக் கூறி இஸ்ரேலுக்கான சில ஆயுத விற்பனைகளை பிரிட்டன் இடைநிறுத்தியுள்ளது.

இஸ்ரேலுக்கான 350 ஆயுத ஏற்றுமதி உரிமங்களில் 30 ஐ இடைநிறுத்துவதாக பிரிட்டன் வெளியுறவுச் செயலாளர் டேவிட் லம்மி அறிவித்துள்ளார். இதில் போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் ஆளில்லா விமானங்களும் அடங்கும்.

எனினும் இந்த முடிவு ஆயுதத் தடை ஒன்றாக இருக்காது என்றும் சர்வதேச சட்டத்திற்கு அமைய இஸ்ரேலின் தற்பாதுகாப்பு உரிமைக்கு பிரிட்டன் ஆதரவு அளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஆனால் இந்த முடிவு ஏமாற்றம் தருவதாகவும் தவறான செய்தியை வழங்குவதாகவும் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இஸ்ராயேல் காட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா போன்று பிரிட்டன் இஸ்ரேலுக்கு நேரடியாக ஆயுதங்கள் வழங்குவதில்லை என்பதோடு ஆயுதங்கள் விற்கும் நிறுவனங்களுக்கு உரிமத்தை வழங்கி வருகிறது. எவ்வாறாயினும் இஸ்ரேலுக்கு கிடைக்கும் ஆயுதங்களில் வெறும் ஒரு வீதத்துக்கும் குறைவான அளவையே பிரிட்டன் வழங்குகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 4ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.